# முப்பெருந் தாசர்

தமிழ்ப்பண்டிதர்
கா. இ. அரங்கசாமி நாயுடு
எழுதியது

16 SEP 1929
30576(a)
894-8113

சென்னை
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரவர்களால்
வெளியிடப் பெற்றது.
1929

[அணா 10

காபி ரைட்]

# பொருளடக்கம்.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| **I. ஜயதேவர்** | |
| திருவவதாரம் ... | 1 |
| திருமணம் ... ... | 5 |
| கைகால்கள் அறுபட்டமை ... | 8 |
| அரண்மனை வாசம் ... | 11 |
| அளவுகடந்த அன்பு ... | 14 |
| வாழ்வினையின் தொடர்பு ... | 18 |
| நல்லுபதேசம் ... | 22 |
| இறந்த பத்மாவதியம்மை உயிர்பெற்றது ... | 29 |
| **II. துளசிதாசர்** | |
| அறநெறி யுணர்தல் ... | 35 |
| உலகானுபவமறிந்த துறவி ... | 38 |
| குடும்பப்பற்று ... | 52 |
| இல்வாழ்க்கையைத் துறந்தது ... | 55 |
| காசியை யடைந்தது ... | 57 |
| ஆத்மராம் ஆவியைவிட்டது ... | 61 |
| பேயின் தோற்றம் ... | 63 |
| ஆஞ்சநேயரைக் காணுதல் ... | 66 |
| உயிர்விடத் துணிந்தது ... | 70 |
| ஸ்ரீராம தரிசனம் ... | 74 |
| மாயா விநோதம் ... | 76 |
| கள்ள சாதகன் ... | 78 |
| கல்லுருவான இடபம் அன்னம் புசித்தது ... | 81 |
| பிரேதமான பிராமணன் உயிர்பெற்றது ... | 85 |
| வானரப்படையின் ஆரவாரம் ... ... | 89 |
| **III. ஞானதேவர்** ... | 93 |
| அம்பரீஷன் சரிதை ... | 113 |
| நாமதேவருடைய வைபவம் ... | 118 |
| பகவான் வர்த்தகனாக வந்தது ... | 123 |
| [illegible]ருடன் யாத்திரைசெய்தல் | 127 |
| இறந்த [illegible] செய்தது ... | 130 |
| கிணற்று ஜலம் மேலே[illegible]வந்தது ... | 133 |
| நாகநாதர் மேற்கு முகமாய்த் திரும்பியது ... | 135 |
| பகவான் நாமதேவருக்கு விருந்து செய்தது ... | 139 |


224697


இப்புத்தகங்கள் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

## மாணவர்க்குரிய புத்தககள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| கம்பராமாயண சங்கிரகம் ... | 2 | 0 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன் ... | 1 | 0 |
| குசேலோபாக்கியானவசனம் | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| ஸ்ரீ பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 7 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| சகோதரவாஞ்சை ... | 0 | 7 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 3 |
| பாசுராமன் ... | 0 | 3 |
| தசாவதார மகிமை ... | 0 | 6 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| கருணாகரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்திய வசனி ... | 0 | 4 |
| அங்கதன் ... | 0 | 4 |
| நாலு மந்திரி கதை .. | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்யட்பாடத் திரட்டு ... | 0 | 4 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| தக்கன் ... | 0 | 6 |
| மங்களேசுவரன் ... | 0 | 8 |
| நரிவிருத்தம் மூலமும் உரையும் | 0 | 4 |
| ஸ்ரீ பாலன் ... | 0 | 8 |
| உதயணன் ... | 0 | 8 |
| தசக்கிரீவன் ... | 0 | 14 |
| போஜசரித்திரம் ... | 0 | 5 |
| நான்குகோடி ... | 0 | 4 |

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

# முகவுரை.

மாணவர்களின் அறிவை வளர்க்கச் செய்தலே யன்றி அவர்களை நல்லொழுக்க முடையவர்களாகச் செய்தல் இன்றியமையாத தாதலால், பண்டைய தமிழ் நூல்களிலுள்ள அரிய பொருள் வளங்களையும், அவற்றிற் செறிந்து கிடக்கும் நற்போதனைகளையும் அவர்களுக் கெடுத்துணர்த்துதல் மிக்க அத்தியாவசியமாகும். இக்கருத்தினைக் கொண்டே, யான் இச் சிறு நூலில், இடைவிடா முயற்சி, குன்றாத ஒழுக்கம், பெரியாரை நேசித்தல், கடவுள் பக்தி, தாய் தந்தையரை விசுவாசித்தல், செய்ந்நன்றி மறவாதிருத்தல் முதலிய சிறந்த நீதிக ளமைந்த மூன்று தாசர்களின் சரிதையை எளிய இனிய நற்றமிழ் நடையில் எழுதி யிருக்கின்றேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு வேண்டிய அரிய விஷயங்களைக் கொண்டு திகழும் உரை நடை இனிய வசன நூல்களில் இதுவு மொன்றாதலால், உயர்தரக் கலாசாலை மாணவர்களுக்குப் பெரிதும் இந்நூல் பயன் தரக் கூடியதாகும்.

இடை யிடையே சேர்க்கப்பட்டுள்ள நன்னெறியை விளக்கும் ஆன்றோர் செய்யுட்கள், படிப்போர்க்குத் தமிழ் மொழியிடத்துப் பேரன்பினை யூட்டுவனவாகும்.

இப்படிக்கு,

கா. தி. அரங்கசாமி நாயுடு

16 SEP 1929

ஸ்ரீராமஜயம்.

# மூப்பெருந் தாசர்

## ஜயதேவர்

### திருவவதாரம்

நிலமகளுக்கு முகமென விளங்கும் இப் பாத கண்டத்தின் மத்தியில் விந்திய பர்வதம் என்னும் பெரிய மலை, விண்ணுற வளர்ந்து மிக்க சிறப்புற்று நிற்கின்றது. இம்மலையானது, சந்தனம், அகில், கோங்கு, வேங்கை, தேக்கு முதலிய பலவகை மரங்களாற் சூழப்பெற்றது; உயர்ந்த பல மூலிகைகள் நிறைந்தது; பல அருவிகள் பாயப் பெற்றது; சித்தர், முனிவர் முதலியவர்களுக் குறைவிடமானது. இத்தகைய வளம் நிறைந்த பர்வதத்திற்குத் தெற்கே வாழை, நாரத்தை, பலா, மா முதலிய கனிதரும் தருக்க ளடர்ந்த சோலைகளாலும் தாமரை, அல்லி, நீலோற்பலம் முதலியவை நிறைந்த தடாகங்களாலும் சூழப்பெற்ற சில நாடுகளும், அவற்றால் சூழப்பட்ட சில நகரங்களுமுண்டு.

இவ்வித சிறப்புக்களையுடைய நகரங்களுள், ஜகநாதமென்னும் திருநகர மொன்றுண்டு. அஃது எந்நகரத்தினும் சிறப்படைந்து, எக்காலத்தும் குறைவுபடாத நீர் வளப்பத்தினைப் பெற்றுள்ளது. அந் நகரைச் சூழ்ந்த மதில் மிக

உயர்ந்து, பனி வரையை யொத்துவிளங்கும். அம் மதிலைச்
சூழ்ந்த அகழி மிகுந்த ஆழமும் அகலமும் உடையது. அந்
நகரத்தில், மாடங்களின் மேலுள்ள கொடிகள், காற்றில்
மிக்க அழகாக அசையாநிற்கும். வெண் சுண்ணம் தீற்றப்
பெற்று, மிகவும் உயர்ந்த மாடங்களின் வரிசைகள் இருபா
லும் திகழ இடையில் விசாலமாகிய தெருக்கள் அமைந்
திருக்கும். ஒருபால் பொன்னும், மணியும் அவற்றாலாகிய
அணிகளும் விற்குங் கடைத்தெருக்கள் பல வரிசை வரிசை
யாக விளங்கும். பலவகைத் தொழிலாளர்கள் அந் நகரில்
எங்கும் காணப்படுவார்கள்.

இத்தகைய சிறப்புக்கள் பெற்ற அந் நகரமானது தமிழ்க்
கவிஞர்களாலும், வடநூற் புலவர்களாலும் புகழப்பெற்றது.
ஆண்டு, ஜகநாதர் என்னும் விண்டுவின் ஆலயம் ஒன்றுண்டு.
அது நான்கு வருணத்தாரும் ஒருமைப்பட்டு அன்னமுண்
ணும் சிறப்புப் பொருந்தியது. எப்போதும் பரம பாகவதர்
கள் அங்கே விஷ்ணுநாம சங்கீர்த்தனம் செய்துகொண்
டிருப்பார்கள். ஆதலால் அதனைச் சிலர், வானவர்களின்
உலகத்தினும் மேலான தென்பார்கள்.

அந் நகரத்திற்குச் சமீபத்தில் பில்வகாம் என்னும் ஒரு
கிராமமுண்டு. அதில் நாராயண சாஸ்திரி என்னும் புண்
ணிய சீலர் ஒருவர் இருந்தார். அவர் பிராமண குலத்தில்
பிறந்தவர்; மந்த புத்திக ளனைத்தையு மறந்தவர்; தெய்வ
பக்தியில் சிறந்தவர். அவருக்கு உத்தம சித்தத்தினையுடைய
கமலாபாய் என்னும் நன் மனைவி இருந்தனள். அவள் அன்
பினுக்கும் அருளினுக்கும் இருப்பிடமானவள்; இயற்கை
யறிவும், கல்வியறிவும் நன்கமையப்பெற்றவள்; எப்போதும்
கடவுளிடத்தில் பக்தியுடையவள். தன் கணவனுடன் இல்
லறத்தில் நல்லறத்தோ டிருந்து, அதிதிகளுக்கு அன்புடன்



விருந்தளித்து வந்தனள். அக்கற்பரசி எக்காலமும் கடவுளை
மறக்காமல் அவருடைய திருநாமத்தையே பாராயணஞ்
செய்து வருவாள்.

அவ்வுத்தமிக்குப் புத்திரபாக்கிய மின்மையால், ஒரு
நாள், அவள் கடவுளைத் தியானித்து, "எம்பெருமானே !
நானும் என் கணவனும் இதுவரையிலும் வாழ்ந்து என்ன
பயனைப் பெற்றவர்களானோம் ? எங்களுக்கு ஒரு மைந்தன்
பிறக்கவில்லையே. எங்களுக்குப் பின்பு இவ் வில்லறத்தைக்
கைக்கொண்டு, தென்புலத்தார் கடனைச் செய்ய நல்ல மக
னொருவன் இல்லாவிடில் நாங்கள் என்ன பயன் அடை
வோம். புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன்,
நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை,
துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்னும் பதினாறு பேறுக
ளுள் மக்கட்பேறே முதன்மையானதென்று அறிஞர் பல
ரும் கூறுகின்றனரே. புத்திரப்பேறு இல்லாதவர்க்குப் புத்
தென்னும் நரகம் வாய்க்குமென்று புலமை மிக்கவர் உரைக்
கின்றனரே. நாங்கள் அந்தக் குறையை நீக்கிக்கொள்வ
தெங்ஙனம் ?

நாங்கள் வானுலக வாழ்வைப்பெறும் பாக்கிய மற்றவர்
களா யிருக்கின்றோமே ; மேலும், பிறரால் பழிக்கப்படாத
நற்குணங்களை யுடைய புதல்வரைப் பெற்றவர்கள், வினை
வயத்தாற் பிறக்கும் பிறப்பு எழின் கண்ணும் துன்பங்களை
அடைய மாட்டார்க ளென்று மேன்மக்கள் மொழிகின்ற
னரே. புதல்வர் சம்பாதித்த பொருள், அப்புதல்வர் செய்
யும் நல்வினை வழியாக மறுமையின் பயன் வடிவமாய் அவ
ரின் பெற்றோர்பாற் சென்றடைதலால், தம் புதல்வரைத் தம்
பொருள் என்று சொல்லுவர் அறிந்தோர். மக்களைப் பெறாத
இந்த வாழ்க்கையானது எங்களுக்கு நன்மை விளைவிக்குமா?

பால்மணமருத இளமக்களை வாரி யெடுத்துக் கொஞ்சிக் குலாவிக் களிக்கும் நிலையில் எங்களைத் தேவரீர் வைக்கவில்லையே. நாங்கள் என்ன குற்றம் செய்தோமோ? அந்தோ! குழந்தை யொன்று தளர்நடை நடந்து, எங்களை இன்புறச் செய்யும் காலம் எப்போது வாய்க்குமோ? இம்மை இன்பத்துடன் மறுமை இன்பமும், மைந்த னில்லார்க்கு இல்லை என்று அறிஞர் கூறியுள்ளார். எங்கள் குறையை நீக்க ஒரு புத்திரனைத் தேவரீர் எங்களுக்கு எக்காலம் அருள் செய்யப்போகிறீர்" என்று பிரார்த்தித்தாள்.

ஜகநாதர் அவளுடைய பிரார்த்தனையை அங்கீகரித்து, நாராயண சாஸ்திரியார் கனவில் தோன்றி, "பக்தா! நீயும் உன் மனைவியும் என்னை அன்பினால் வணங்கிவருவதால் உன் மனைவி கோரிய வரத்தினைத் தந்தேன். அதனால், உன் மூதாதைகள் செய்த குறையும் நீங்கும்" என்று சொல்லி மறைந்தார்.

உடனே சாஸ்திரியார் விழித்தெழுந்து, தம் நாயகியை விளித்து, "மாதே! இன்றிரவு பகவான் என் கனவில் தோன்றி, 'உன் குறையையும், உன் மூதாதைகள் குறையையும் நீக்கினேன்' என்று மொழிந்து போயினர். நீ அவரைக் கேட்ட வரம் யாது?" என்றார். அவ்வுத்தமி அவரை வணங்கி, "நாதா! ஆரணத்தின் கருத்தின்படி, நமக்கு முத்தியைக் கொடுக்கவல்ல புத்திரனைப்பெறும் வரத்தையே நான் கோரினேன்" என்றாள். அது கேட்ட அவ்வந்தணர், "பேதாய்! பெரும் பிழை செய்தனையே. நீ பகவானுடைய தரிசனத்தைக் கோராமல் உலக வாழ்க்கையில் இச்சை வைத்தாய். இது மலையைக் கல்லி எலியைப் பிடித்ததுபோலாம். சீதேவியைப் பூசித்து மூதேவியைப் பெறலாமோ? அநித்தியப்பொருளையா இச்சிப்பது? பலநாள் ஜகநாதரை நோக்கி



நீ தவஞ் செய்தும் மோட்சப் பதவியை நீ கேளாதுவிட்டனை. இது பெண்களுக்கு இயற்கையாயுள்ள பேதமையின் குற்றமேயாம்" என்று சொல்லித் தம் மனைவியுடன் பேசாதொழிந்தனர். தமக் குண்டான மன வருத்தத்தால் ஊண் உறக்கத்தையும் வெறுத் திருந்தார்

புத்திரரைப் பெறாதவர்களுக்கு முத்தி இல்லை என்றுரைக்கும் கர்ம காண்டத்தை நம்பி மோசம்போன கமலாபாய், மனம் வருந்தி, அதனால் அவளும் ஊண் உறக்கத்தை வெறுத்தனள். அப்போது பகவான் அவர்களுடைய வைராக்கியத்திற்கு வியந்து, ஒரு பிராமண வடிவந்தாங்கி, அவர்கள் முன் தோன்றி, "அன்பர்களே! நீங்கள் துயரப் படவேண்டாம். புத்திர பாக்கியத்தினால் நீங்களும் உங்கள் மூதாதைகளும் என் பதவியை அடைவீர்கள்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

சில நாட்களுக்குப் பின் அவர்களுக்கு ஆண்மகனொருவன் உதித்தான். அழகிய அச் சேயைக் கண்ட அந்தப் பெற்றோர்கள், பிறவிக் குருடன் கண் பெற்றாற் போன்ற சந்தோஷத்தை யடைந்தனர். கண்ணைக் காக்கும் இமையைப்போல் அவர்கள் அம் மைந்தனைக் காத்துவந்து, அவனுக்கு ஜயதேவர் என்னும் நாமகரணம் சூட்டினர். மூன்றாம்பிறைச் சந்திரனைப்போல அம் மைந்தன் உருவத்திலும் அழகிலும் உயர்ந்து வளரலானான்.

## திருமணம்

ஜயதேவருக்குக் கல்விகற்கும் வயது வந்தது. கல்விப் பொருள் உயிருக்கு உயிரானதல்லவா? அஃதில்லாதவர் அடையும் பயன் யாது? நாராயண சாஸ்திரியார், தம்மைந்தனுக்கு வித்தியாப்பியாசம் செய்வித்து, சகல சாஸ்திரங்களி

னும் விற்பத்தி யுண்டாகச் செய்தார். பிறகு ஜயதேவர் கடவுளிடத்தில் மிகவும் பக்தி யுடையவரா யிருந்தார். அந்தப் பக்தியின் விசேஷத்தினால் கீத கோவிந்தம் என்னும் ஒரு கிரந்தத்தைச் செய்து, சகல உயிர்களும் நன்மை யடையும் வழியைப் பலர்க்கும் கற்பித்தார்.

அப்போது, ஜகநாதத்தில் செங்கோல் செலுத்திவந்த சாத்தியகி என்னும் அரசன், ஜயதேவர் செய்த கிரந்தத்தைப்போல வேறொரு கிரந்தத்தை இயற்றினான். இந்தக் கிரந்தமே அதிக சிறப்பினை யடையவேண்டு மென்னும் எண்ணம் அரசனுக் கிருந்தது. அதனால் அவன் ஒவ்வொருவரையும் அதனையே படிக்கத் தூண்டினான். ஆனால், எல்லாரும் அரசனுடைய கட்டளையை மறுத்து, "இறைவ! நீர் இயற்றிய கிரந்தம் ஜயதேவருடைய கிரந்தத்திற்கு சமமாகாது. சாதுக்களுக்கும் மற்றவர்களுக்கும் யோக்கியமானது அப்புத்தகமே. ஆதலால் உம்முடைய புத்தகத்தை நாங்கள் அங்கீகரிக்கமாட்டோம்" என்றார்கள்.

அதைக் கேட்ட அரசன் திகைத்து, "எம்பெருமானுடைய புகழை விரிக்கும் புத்தகங்களிலும் பேதமுண்டோ? அப்படியாயின், நாம் ஜயதேவர் செய்த கிரந்தத்தையும், நான் செய்த கிரந்தத்தையும், பகவானுடைய சந்நிதியின் முன்னே வைப்போம். எது பகவானால் அங்கீகரிக்கப்படுகின்றதோ அதையே சிறந்ததென்று யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று தீர்மானஞ் செய்தான். அப்படியே இரண்டு கிரந்தங்களும் பகவானுடைய சந்நிதியில் வைக்கப்பட்டன. அரசன் கட்டளையின்படி சந்நிதியின் கதவுகளும் பூட்டப்பட்டு, முத்திரை யிடப்பட்டன.

மறுநாள் அரசனும், மற்றவர்களும் கடவுள் சந்நிதிக்குச் சென்று கதவுகளைத் திறந்து பார்க்க, ஜயதேவருடைய



கிரந்தம் பகவானுக்கு முன்னே யிருந்தது அரசனுடைய கிரந்தம் சந்நிதிக்கு வெளியில் எறியப்பட்டிருந்தது. இந்த ஆச்சரியத்தைப் பார்த்து யாவரும் பிரமை யடைந்தார்கள். தன்னுடைய கிரந்தம் பகவானால் அங்கீகரிக்கப்படாமல் வெளியில் எறியப்பட்டிருந்ததால் அரசன் வெட்க மடைந்து, தலை வணங்கி நின்றான். ஜயதேவருடைய கிரந்தம் பகவானால் அங்கீகரிக்கப்பட்டதால் எல்லாரும் சந்தோஷித்து ஆரவாரித்தார்கள். அரசன் அதிக அவமானத்தினால் பகவான் முன்னே நின்று, "எம்பெருமானே! சகல உயிர்களிடத்தும் வசிக்கும் நீர், ஒருவனை நீக்கி மற்றொருவனை ஆதரிப்பது ஞாயமோ? பெற்றோர், பிள்ளைகள் எனைவரிடத்திலும் சமமான அன்புடையவரா யிருத்தல்வேண்டு மன்றோ? அப்படியிருக்க, ஜயதேவருடைய கிரந்தத்தைமட்டும் அங்கீகரித்து, என்னுடைய கிரந்தத்தை நீக்கியது மிகவும் அநீதியல்லவா? தேவரீரால் அவமானத்தை யடைந்த நான், என் சிரசைத் துணித்துத் தேவரீருடைய திருவடியில் சமர்ப்பிப்பேன்" என்றான்.

கிருபாநிதியாகிய பகவான் அவ்வரசன் முன் தோன்றி, "அன்ப! ஜயதேவன் என்னிடத்தில் உன்னைப்போல் அதிக அன்புள்ளவனா யிருப்பதுடன் அவன் வேதவியாசன்; என்னால் இப் பிறவியை அடைந்தான். ஆதலால், நீ அவனுடைய கிரந்தத்தையே மேலாகக் கொள்ளவேண்டும். உன்னுடைய கிரந்தத்திலுள்ள இருபத்துநான்கு சுலோகங்கள் மட்டும் ஜயதேவனுடைய கிரந்தத்துள் சேர்க்கப்படட்டும்" என்று சொல்லி மறைந்தார். அரசன் அதிகமாக மகிழ்ந்து, பகவானிடத்தில் அன்புபூண் டொழுகி வந்தான்.

இப்படியிருக்க, அப்பட்டினத்தில் மிகுந்த திரவியவானாகிய ஒரு பிராமணனிருந்தான். அவனுக்கு அருமையாகிய

ஒரு குமாரத்தி யிருந்தனள். அவள் செவ்விய தேகமும், நற்
குணங்களும் வாய்க்கப் பெற்றவள்; கடவுளிடத்தில் அதிக
அன்புடையவள். அவளுக்குப் பத்மாவதி என்று பெயர்.
அக்கன்னியைப் பரம பாகவத ரொருவருக்கு மணஞ்
செய்து கொடுக்க அவளுடைய தந்தை அநேக நாளாகக்
காத்திருந்தனன். ஆனால், அவ்வித புருடன் கிடைக்காமை
யால் அப்பிராமணன் துயரத்தில் மூழ்கியிருந்தான். ஒரு
நாள், பகவான் அவனுடைய சொப்பனத்தில் தோன்றி,
"பிராமணோத்தமா! உன் புதல்வியை என் அன்பனாகிய
ஜயதேவனுக்கு விவாகஞ் செய்துகொடு" என்று சொல்லி
மறைந்தார். உடனே அப்பிராமணன் விழித்தெழுந்து ஆனந்
தக் கடலில் மூழ்கினவனாகி, மறுநாளே ஜயதேவரைப் பிரி
யத்துடன் தன் இல்லத்திற் கழைத்துவந்து, விவாகமண்ட
பம் அலங்கரித்து, நல்ல சுப முகூர்த்தத்தில் பத்மாவதியை
அவருக்கு மணஞ்செய்து கொடுத்தான்.

பிறகு, ஜயதேவரும் பத்மாவதியும் இல்லறத்தில் நல்
லறத்தையே செய்துகொண்டு, பகவானை எக்காலத்திலும்
துதித்துவந்தனர். நாராயண சாஸ்திரியாரும் அவர் மனைவி
யாகிய கமலாபாயும் தவஞ்செய்யக் கானகஞ் சென்றனர்.

### கை கால்கள் அறுபட்டமை

ஒருநாள் ஜயதேவர், வீதியின் வழியே போய்க்கொண்
டிருக்கையில், பகவத்தாசன் என்னும் வணிகனொருவன் அவ
ரைச் சந்தித்தான். அவ்வர்த்தகன் மிகுந்த செல்வ முடைய
வன். அவன் பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று
முடிவில் ஜயதேவரைக் கண்டு, அவருடைய நல்லுபதேசத்
தைப்பெற இச்சைகொண்டு வந்தான். அவன் ஜயதேவரைக்
கண்டவுடன் அவரைத் தொழுது, தன் இரதத்தில் எழுந்தரு
ளச்செய்து, பில்வகாமிலிருந்து புறப்பட்டுக் காட்டைக்



கடந்து தன் ஊரை யடைந்து, தன்னுடைய அபிப்பிரா
யத்தை அவருக்கு வெளியிட்டான். ஜயதேவர், அவன்
விரும்பியபடியே அவனுக்கு நல்லுபதேசஞ்செய்து, பகவா
னிடத்தில் அன்புண்டாகச் செய்தார்.

ஜயதேவர், அவ் வர்த்தகன் வீட்டில் சிலநாள் தங்கி
யிருந்த பின்னர், ஜகநாதத்திற்குப் போகவேண்டுமென்று
நினைத்தார். அவ்வெண்ணத்தை யறிந்த வர்த்தகன், அவ
ருக்குச் சகல உபசாரங்களையும் செய்து, அவரை முன்போ
லவே தன்னுடைய இரதத்தில் எழுந்தருளச் செய்தான்.
அவர் பொருளின்மேல் இச்சையில்லாதவராதலால் அவர்
அறியாவண்ணம் அந்த இரதத்தில் அளவிறந்த இரத்தினங்
களை நிறைத்து, இரண்டு சேவகர்களை அழைத்து, "நீங்கள்
இந்த இரதத்துடன் சென்று, இந்தத் திரவியத்தை என் வந்
தனத்துடன் ஜயதேவருடைய மனைவியாருக்குச் சமர்ப்
பித்து வரவேண்டும்" என்று சொல்லி அனுப்பினான்.

ஜயதேவர், வர்த்தகனால் அனுப்பப்பட்ட இரண்டு சேவ
கர்களுடன் தமதூருக்குப் பிரயாணமானார். அப்படி அவர்
போய்க்கொண் டிருக்கையில், சேவகரிருவரும் அந்த இர
தத்திலிருக்கும் பொருளை அபகரிக்க இச்சை கொண்டனர்.
அதனால், அவர்கள் தங்களூருக்குத் திரும்பிப் போகவேண்டு
மென்று தந்திரமாய் ஜயதேவரிடம் விடைபெற்றுச்சென்று,
மீண்டும்வந்து, காடடர்ந்த ஓரிடத்தில் ஜயதேவரைத்தடுத்து,
இரதத்திலிருந்த சகல தனத்தையும் அபகரித்துக் கொண்
டனர். அத்துடன் அவர்கள் அவரை விட்டவர்களல்லர்.
அந்தோ! தருமமாகுமா? எல்லா அறங்களுள்ளும் கொல்லா
மையே சிறந்ததென்று அறநூலோர் கூறியிருக்கின்றனர்.
எந்த உயிரையும் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக்
கருதும் நெறியே வீடு பேற்றிற்கு நல்ல நெறியென்று

மூதறிஞர் பலரும் மொழியாநிற்பர். உலகத்தின்கண் கொலைப் பாவத்திற்கு அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவனே சிறந்தவன். கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு ஒழுகுவானது வாழ்நாளின்மேல் உயிருண்ணும் கூற்றும் செல்லாது. அப்படியிருக்க, ஜயதேவர் உயிரோடிருந்தால் தங்கள் களவு வெளிப்படுமென்று அந்தச் சேவகர்கள் எண்ணி அவரைக் கொல்லத் தீர்மானித்தனர். அவர் எவ்வளவு வேண்டிக்கொண்டும் அப் பாதகர்கள் இரக்கமின்றி அவருடைய கால் கரங்களைத் துண்டித்து, அவரை அங்கிருந்த ஒரு பாழ்ங்கிணற்றில் தள்ளிவிட்டனர்.

கை கால்கள் அறுபட்ட உபத்திரவத்தாலும், கிணற்றிலிருந்த முட்களும் கற்களும் தேகத்தில் காயப் படுத்தியதாலும் ஜயதேவர் மிகவும் சகிக்கக்கூடாத துன்பத்தையடைந்தார். உயிர் இனி உடலைவிட்டு நீங்குமென்று அவர் திடங்கொண்டார். ஆதலால், அவர் தம் சரீரத்தை மறந்து, பகவானைத் தியானஞ் செய்துகொண்டு பரம நிஷ்டையிலிருந்தார். இவருடைய இருக்கையை யறியாத பத்மாவதியம்மையார், பல விடங்களிலும் தேடி இவரைக் காணாது வருந்திப் பகவானைத் தியானித்துக்கொண் டிருந்தாள்.

இங்ஙனமிருக்க, விந்தியதேசத் தரசன் அக்கானகத்தில் வேட்டையாடவந்து, ஜயதேவர் விழுந்து கிடக்கும் கிணற்றை எட்டிப் பார்த்தான். அதில் மானிட வுருவம் கிடப்பதைக் கண்டு, தன் வீரரில் சிலரை விடுத்து அவரை வெளியில் எடுக்கச் செய்தான். அவர் தியான யோகத்தில் மெய்மறந் திருப்பதையும், அவருடைய கை கால்கள் அறுபட்டிருப்பதையும் அரசன் கண்டு ஆச்சரியமும், பரிதாபமுமடைந்து, "தேவரீருக்கு இத்துன்பத்தை யுண்டாக்கினவர் யாரோ?" என்று வினவ, ஜயதேவர் கண்களை விழித்து,



மன்னனைப் பார்த்து, "எனக்கு யாரும் இத்தீங்கு செய்திலர். நான் முன்னர்ச் செய்த பாவத்தின் பலனை இப்பொழுது அடையலானேன். வினைப்பயனை வெல்வதற்கு ஒரு வழியுமில்லை. என்னைப்பற்றி நீ மதிமயக்கமடைந்து வருந்தாதே. அவரவர் வினைக்குத் தக்கவாறு அவரவர் வருவார். மீண்டும் அவ்வாறே போவார். பிறப்பதும் இறப்பதும் புதுமையல்ல. ஆதலால் என்னைப்பற்றி நீ வருந்தற்க" என்றார்.

அரசன் அதுகேட்டு, "ஆ! இவர் பரம பாகவதராகக் காணப்படுகிறார். இவ்வளவு ஆபத்தை இவர் அடைந்தும், தம்மைத் துன்பஞ் செய்தவர்களுக்குக் கெடுதி நேரிடாவண்ணம் விஷயங்களை மறைக்கின்றார். இவரைப்போன்ற தயாளசிந்தையை யுடையோரும் இவ்வுலகில் இருக்கின்றனரா?" என்று தனக்குள் ஆச்சரியப்பட்டு, ஜயதேவரை வலம்வந்து வணங்கி, "சுவாமி! அடியவன் தங்களை இன்று கடவுள் செயலாற் காண நேர்ந்தது என்னுடைய முன்னோர்கள் செய்த தவப்பயன்போலும்? நான் வெகுநாட்களாகத் தங்களைப்போன்ற பெரியவர்களுட னிருந்து, நன்னெறிகளைக் கற்று, நல்லொழுக்கத்தில் வாழ்நாளைக் கழிக்கக் கருதியிருந்தேன். அதற்கு இன்றுதான் கடவுள் அருள் செய்தார் போலும்? யான் தங்களுடன் சிலநாட்களிருந்து, தங்களுக்கு ஏவல் செய்யக் கருதுகிறேன்" என்று சொல்லி, அவரை எடுத்து ஒரு பல்லக்கில் வைத்துத் தன் பட்டணத்திற்குக் கொண்டு போனான்.

## அரண்மனை வாசம்

அரசன் ஜயதேவரைத் தன னரண்மனையிலுள்ள ஒரு தனியிடத்தில் வீற்றிருக்கச்செய்து அவருக்குச் சகல உபசாரங்களையும் செய்துகொண்டு வந்தான்; அருமையான

ஔஷதங்களினுல் அவருடம்பி லிருந்த காயங்களை யாற்றி
னுன். அரண்மனை வேலைக்காரர்களும், இவ்வித பரமபாக
வதர் தொண்டு தங்களுக்குக் கிடைத்த விசேஷத்தால்,
"நமது ஜன்மம் சாபல்லிய மாயிற்று" என்று சந்தோஷித்து
அதிக ஜாக்கிரதையோடு ஜயதேவருக்குத் தொண்டுசெய்து
வந்தனர். ஒவ்வொருநாளும் அரசன் அவரிடம் வந்து, அவ
ருக்குச் செய்யவேண்டிய உபசார மனைத்தையும் செய்து,
அவரைப் பணிந்து செல்லுவான்.

இப்படியிருக்க, ஒருநாள், அரசன், ஜயதேவரைப்
பணிந்து, மோக்ஷத்தை யடையும் சுலபசாதன மொன்றைக்
காட்டி யருளும்படி வேண்டினுன். அதற்கு அவர், "சாதுக்
களை ஆராதிப்பதைக் காட்டிலும் சிறந்த சாதனம் வேறொன்று
மில்லை. பகவானை ஆராதிப்பவர்களுக்காகிலும் மோக்ஷ சித்தி
விஷயத்தில் சந்தேகமுண்டு. சாதுக்களை ஆராதிப்பவர்களுக்
குச் சந்தேகமில்லாமல் மோக்ஷம் கிடைக்கும். ஆனல் அவர்
கள் உண்மையான சாதுக்களைக் கண்டறிந்து ஆராதித்தல்
வேண்டும்.

"மெய்க்குருவை யடுத்திடுங்கால் அவர் நடையை
விசாரித்து மேவவேண்டும்
எக்குருவும் சற்குருபோ லியங்குவதால்
இழுக்குநடை யல்லோனுகி
மிக்கபா வுணாவினனுய் அகமமதை யிலனுகி
மேன்மை கூறும
அக்குருவே சற்குருவாம் அவனிடஞ் சேர்ந்
தரியபணி யாற்றல் நன்றே."

என்றபடி நாமரூடங்களி னுலேயே ஒருவனைச் சாதுவென்று
நம்பலாகாது. வைராக்கியமும் அந்தரங்க பக்தியும் உள்ள
வனே சாது என்று சொல்லப்படுவான். அவ்வித பக்தனைக்
கண்டறிவது மிகவும் பிரயாசையாகும். ஆனல் உபதேசம்



பெறுவதற்கு மாத்திரமே அவ்வித பக்தனைத் தேடவேண்
டும்; உபசரிப்பதற்கு அவ்வாறு பரீக்ஷித்தறிய வேண்டிய
தில்லை. பகவத் சொரூபங்களாகிய *சேதனர்கள் யாவரை
யுமே சாதுக்களென்று எண்ணி ஆராதனை செய்யலாம். ஒரு
இளவரசன், உன்மத்தனுகித் தன்னைப்பற்றியும், தன் பெற்
றோர்களைப்பற்றியும் மறந்திருந்தாலும் உலகோர் அவனை
இளவரசனென்றே மரியாதை செய்வார்கள். கடவுளுடைய
சாதனங்களாகிய சேதனர்களுக்குள் சிலர், தம் சொரூபத்
தையும்,கடவுள் சொரூபத்தையும் மறந்து ஜடப்பிரியர்களாகி
வசித்தபோதிலும், நீ அவர்களை அன்புடன் ஆராதிக்கவேண்
டும். அவர்களைக் கடவுளுடைய சொரூபங்களேயென்று நீ
நினைக்க வேண்டும். அப்படிச் செய்வாயானுல் கடவுள்
உனக்கு வசப்பட்டவராகி இருப்பார். ஆகையால், நீ நாள்
தோறும் தப்பாமல் பக்தர்களுக்குப் பணிவுடன் ஆராதனை
செய்துவந்தால் உனக்கு மோக்ஷம் கிடைக்கும்" என்றுர்.
அரசன், அவர் கட்டளையிட்ட வண்ணம் அன்றுமுதல்
அதிதிகளாகிய சாது ஜனங்களுக்கு யாதொரு குறைவுமின்றி
அன்ன வஸ்திரங்களை யுதவி அவர்களை ஆராதித்து வந்தான்.

இங்ஙனமிருக்க, ஜயதேவரை முன்னே கிணற்றில்வீழ்த்
திப் பொருளைக் கொள்ளைகொண்டு சென்ற கொடிய சேவ
கர்கள் வறுமை யடைந்து, விந்தியகாட்டிற்கு வந்தனர்.
அங்கே அரசன் சாதுக்களை ஆதரித்து வரும் விசேஷத்
தைக் கேள்வியுற்று, அவர்களும் சாதுக்களைப்போல வேடந்
தரித்து, அரண்மனையில் பிரவேசித்தார்கள். ஜயதேவர் ஓர்
உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பதை அவ்வேடதாரிகள்
கண்டு, பயத்தால் நடுங்கினுர்கள். பரமசாந்தரும், அன்னி
யர் குற்றத்தை மனத்திற் கொள்ளாதவருமாகிய ஜயதேவர்

* சேதனர்=அறிவுடையார்.

அவர்களைக் கண்டார். அவர், அவர்களைத் தம் சமீபத்தி லழைத்துச் சாதுக்களைப் புகழ்வதைப்போலப் புகழ்ந்து, அருகிலிருந்த ஏவலாளரை விளித்து, "இவ்விருவரும் பரம சாதுக்கள். இதுவரையிலும் இவர்களைப்போன்ற உத்தமர் கள் இங்கு வந்திலர்; ஆகையால் இவர்களை அரசனிட மழைத் துக்கொண்டுபோய் இவர்களுக்கு அதிக சன்மானஞ் செய் யும்படி சொல்லுங்கள்" என்றார்.

அந்த ஏவலாளர்கள் உடனே அவர்களை அழைத்துக் கொண்டுபோய் அரசன்முன் விட்டு,ஜயதேவருடைய விருப் பத்தை அவ்வரசனுக்கு அறிக்கையிட்டனர். அரசன் அவர் களைக் கண்டு மிகவும் ஆனந்தமடைந்து, அவர்களுக்கு நானு வித பூசைகள் புரிந்து, அவர்களைச் சிலநாள் வரையிலும் அரண்மனையிலேயே இருக்கும்படி வேண்டிக்கொண்டான். அவர்களும் மன்னனுடைய வேண்டுகோளுக்கு இசைந் திருந்தார்கள். ஆனால்,

"கன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்."

என்றபடி அவர்கள் ஜயதேவருக்கு முன் செய்த பிழையை எண்ணித் தங்களுக்கு ஜயதேவரால் என்ன தண் டனை யுண்டாகுமோ என்று சந்தேகித்து, அதனால் நாளுக்கு நாள் இளைத்துத் தேக மெலிவுற் றிருந்தார்கள். அவர்கள் அப்படி இளைத்துப்போவதை அரசன் ஜயதேவருக் கறிவித்தான்.

### அளவுகடந்த அன்பு

ஜயதேவர் அதுகேட்டு,"அரசனே! அவர்க ளிருவரும் பரம பாகவதர்கள். சுகத்தை அவர்கள் விரும்பினவர்கள் அல்லர்.



"பொய்யுலக வாழ்க்கைப் புலைச்சேரி வாதனை யின்
மெய்யருளின் மூழ்கின் விளங்காண் பராபரமே."

என்றபடி உலக வாழ்வை வெறுத்தவர்கள். ஆகையால், அவர்களுக்குத் தேகம் நாளுக்குநாள் இளைத்துப்போகின்ற து. அவர்கள் மகானுபாவர்க ளாதலால் கணப்பொழுதேனும் ஓரிடத்தில் நிலைத்து வசிக்கமாட்டார்கள். ஏதோ உன் னுடைய பாக்கியவசத்தினால் இத்தனை நாட்கள் இங்கு வசித்து வந்தார்கள். இனி நீ அவர்களை இங்கிருக்கும்படி நிர்ப்பந்திக்க லாகாது. அவர்க ளபிப்பிராயத்தின்படியே அவர்களை அனுப்பிவிடுவது நலம்" என்றார்.

அதைக்கேட்ட அரசன் அந்தக் கபட வேஷதாரிக ளிடஞ் சென்று, அவர்களுக்கு வந்தனஞ்செய்து, "மகான் களே! இத்தனைநாள் வரையிலும் என்னுடைய நிர்ப்பந்தத் தால் இவ்விடம் வசித்து, என்னைப் புனிதனைச் செய்ததற் காக நான் பெரிதும் சந்தோஷ மடைந்தேன். இப்போது நீங்கள் இவ்விடத்தினின்றும் போக எண்ணி யிருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் உங்களிச்சையின்படி நீங்கள் போக லாம்" என்று சொல்லி, இரண்டு இரதங்களைச் சித்தப்படுத்தி, அவர் அவற்றில் அளவற்ற இரத்தினுபரணங்களை நிறைத்து, அவர் களையு மேற்றிச் சில சேனைகளையும் துணையாக அனுப்பினான்.

அப்போ தந்தக் கபட பாகவதர்கள் ஜயதேவருக்கும், அரசனுக்கும் வந்தனஞ்செய்து வெளியேபோந்தனர். அவர் கள் நாட்டைவிட்டு ஒரு கானகத்தினிடையே போய்க் கொண்டிருக்கையில், துணையாகச் சென்ற சேனைகளில் சிலர் அந்த வஞ்சகர்களைப் பார்த்து, "உத்தமர்களே! இது வரையிலும் அனேக கோடி பாகவதர்கள் எங்கள் அரச னுடைய அரண்மனைக்கு வந்திருந்தனர். அவர்களுள் எவர்க் கும் ஜயதேவர் இவ்வளவு மரியாதை செய்ததில்லை. உங்கள்

விஷயத்தில் அவருக்கிருந்த விசுவாசம் அளவுகடந் திருந்தது. இப்படி அவர் செய்தது எதனாலென்பதை எங்களுக்கு அறிவிக்கவேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள்.

அதைக்கேட்ட அந்தக் களங்கமனத்தர்கள், ஜயதேவர் மேல் பொய்க்குற்றம் கற்பிக்கக் கருதி, "சேனை வீரர்களே! அவந்திநாடாளும் அரசரிடத்தில் இந்த ஜயதேவர் பிரதானியாக இருந்தார். அக்காலத்தில் நாங்கள் அங்கே சேவகர்களாக இருந்தோம். ஒருநாள் ஜயதேவர் பெருத்த அபராதம் ஒன்றைச் செய்தமையால், அரசர் கோபித்து அவரைக் கொன்றுவரும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார். அப்படியே நாங்கள் அவரைக்கட்டி மனித சஞ்சாரமில்லாத ஒரு கானகத்திற்குக் கொண்டு போனோம். நாங்கள் இரக்கமுள்ளவர்களாதலால், அவரைக் கொல்ல மனமில்லாமல் அவருடைய கால் கரங்களைமாத்திரம் வெட்டி ஒரு பாழ்ங்கிணற்றில் போட்டுவிட்டோம். அரசனுடைய கட்டளைக்கு நாங்கள் உட்படாமற் போனதால், அரச தண்டனைக்குப் பயந்து அதுமுதல் தேசசஞ்சாரிகளானோம்

பிறகு, நாங்கள் பலநாடுகளிலும் திரிந்து, உங்களரசன், பாகவதர்களை ஆதரிக்கும் விஷயத்தைக் கேள்வியுற்று அரண்மனையிற் புகுந்தோம். நாங்கள் கிணற்றில் வீழ்த்திச் சென்ற ஜயதேவர் எவ்விதமாகவோ அங்கு வந்திருப்பதைக் கண்டோம். அவரும் எங்களைக் கண்டு, நாங்கள் செய்த உதவியை எண்ணி எங்களுக் கிவ்வித உபசாரஞ் செய்தனர்'' என்றார்கள்.

இங்ஙனம் அக்கபடர்கள் சொன்ன அநியாயத்தைச் சகிக்கமாட்டாத பூமி, இரண்டு பிளவாக வெடிக்க, அந்த வஞ்சகர்கள் இரதங்களோடு அந்த வெடிப்பில் ஆழ்ந்து போயினர். பூமியின் பிளவு எப்போதும்போல் மூடிக்கொண்



டது. இந்த ஆச்சரியத்தைக் கண்ட சேனைவீரர்கள் திரும்
பித் தங்கள் நாட்டை யடைந்து, நடந்த விருத்தாந்த மனைத்
தையும் அரசனுக்கும் ஜயதேவருக்கும் அறிவித்தார்கள்.
ஜயதேவர் அதுகேட்டு மனம்பதைத்து, "ஜகதீசா! எனக்கு
அபராதஞ் செய்தவர்களுக்கு இவ்வித துன்பம் சம்பவிக்க
லாமோ. உமக்குத் தீமை செய்த * பூதகி, † கம்சன் முத
லானோருக்கும் நீர் பரமபத மளித்து இரட்சித்ததைப்போல
எனக்குத் துன்பஞ்செய்த அவ்வஞ்சக ரிருவரையும் இரட்
சிக்க வேண்டும்'' என்று கடவுளைப் பிரார்த்தித்தார்.

அப்போது பகவான் ஜயதேவருக்குப் பிரத்தியட்ச
மாகி, "அன்ப! பகையாளிகளிடத்தும் உனக்கிருக்கும் கரு
ணைக்காக நான் மிகவும் சந்தோஷித்தேன்'' என்று சொல்லி
அவருக்குக் கால் கைகள், எப்போதும்போல உண்டாகச்
செய்து மறைந்தார். இந்த அற்புதத்தைக் கண்ட அரசன்
ஆனந்த பரவசமடைந்தான். அப்பாதகர்கள் அவருக்குச்
செய்த தீங்கை எண்ணிக் கலங்கினான். அவன், ஜயதேவ
ரைப் பணிந்து, "தயாநிதி! தங்களுடைய கால் கரங்களைச்
சேதித்துப் பாழ்ங்கிணற்றிற் றள்ளிய அப்பாதகர்கள் இது

* விஷ்ணுமூர்த்தியின் அவதாரமாகிய கண்ணபிரான் குழந்தையா யிருக்கையில், கம்சனுடைய தூண்டுதலால் பூதனை என்பவள் விஷங்கலந்த பாலைக் கண்ணபிரானுக்கு உண்பிக்க, மாயாவதாரியாகிய கண்ணன் இச் சூதினையறிந்து, பால் உண்பவரைப் போல் அவளுடைய உயிரை உண்டார்.

† கம்சன், கண்ணபிரானுடைய அம்மான். பல தடவைகளிலும் கண்ணபிரானுடைய உயிரைப்போக்கப் பல சூழ்ச்சிகளையும் செய்தான். கடைசியில் கண்ணபிரான் அவனைக் கொன்றார். அவருடைய கையால் அவன் மரணமடைந்ததால் அவன் மோக்ஷத்தையடைந்தான்.

வரையில் எரிந்து சாம்பலாய்ப்போகாம லிருந்த தென்னே? தெய்வீகத் தன்மை பொருந்திய தங்களுக்கு இவ்வித தண்டனை வந்த காரண மேதோ?" என்றான்.

ஜயதேவர் அவ்வாசனை நோக்கி, "பக்த! ஊழ்வினையை யாவரே கடப்பர்? அதைத் திரிமூர்த்திகளாலும் விலக்குதல் அரிது. அதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன்.

## ஊழ்வினையின் தொடர்பு

பூர்வம், மகா யோகியாகிய ஒரு முனிவர் இருந்தார். மோக்ஷாபேக்ஷையுள்ள ஒரு சீடன் அவரை யடைந்து, அவரிடம் தொண்டு செய்துவந்தான். ஆசான் ஞானநிஷ்டையிலிருந்து கண்களைத் திறந்து எந்த வஸ்துவை நினைப்பாரோ, அவ்வஸ்துவை அவர் வெளியிடா முன்னரே அந்தச்சீடன் அறிந்து அவருக்குச் சமர்ப்பிப்பான். அவனுடைய அரிய செய்கையைக் கண்ட முனிபுங்கவர், அவனை இன்னும் சோதிக்கவெண்ணி ஒருநாள் யாதொன்றையும் எண்ணாமலிருந்தார். சீடன் அவரைப் பார்த்து, "ஆ! இன்று அபசாரப்பட்டேன். நான் அவரைக் கவனியாமல் என் சித்தத்தை வேறெங்கேயோ செலுத்தி யிருக்கவேண்டும். அதனால் அவர் விரும்பிய வஸ்துவை அப்போதே கொண்டுவரா தொழிந்தேன். குருவுக்கு அபராதஞ்செய்த கொடியோனானதால், இனி இவ்வாழ்க்கையோ டிருத்தல் குற்றமாகும்" என்று தனக்குள் எண்ணித் தன் தலையைக் கொய்துகொள்ள எத்தனித்தான்.

மாதவர் அதைக்கண்டு, சீடனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு "ஏ சீடா! நீ என்ன காரியம் செய்யத் துணிந்தனை! தினந்தோறும் நான் கோரியபொருளைக் கேட்காமுன்னமே கொண்டுவந்து எனக்குக் கொடுத்தாய். இன்று நான்



எந்தப் பொருளையும் விரும்பாதிருந்தேன். ஆதலால், நீ எனக்கு அபராதஞ் செய்தவனல்ல. உன்னைப்போல் பணிவிடைபுரியும் சீடர்கள் இவ்வுலகில் இருக்கமாட்டார்கள். இனி நான் உனக்குச் சகல சித்திகளையும் அடையக்கூடிய மந்திரத்தை உபதேசிப்பேன்" என்று அவனுடைய ஆயுட்காலத்தை ஞானதிருஷ்டியால் ஆராய்ந்தார். அவனுக்கு எழுபத்திரண்டு நாழிகை ஆயுட்காலமே இருந்தது. ஆகலான், அவர் மிகவும் ஆச்சரியப்பட்டு, சீடனைத் தன்னுடனழைத்துக்கொண்டு சத்தியலோகஞ் சென்று பிரமாவைக்கண்டு, "என் சீடனுக்கு அற்பாயுள் கொடுத்த காரணம் யாது?" என்று கேட்டார். விரிஞ்சன் அதுகேட்டு, "அந்தச் சீடனுக்கு இன்னும் இருபத்தாறு முகூர்த்தமே ஆயுள் இருப்பதால் நான் ஒன்றும் செய்யலாகா" தென்றார். அப்புங்கவர் வைகுந்தமடைந்து விஷ்ணுவைக் கேட்க, அவர், "அச்சீடனுக்கு இன்னும் பதினாறு முகூர்த்தமே ஆயுள் இருப்பதால் நாம் ஒன்றும் செய்யலாகா" தென்றார். அம்முனிநாதர் கைலைக்குச் சென்று. உமாபதியைக் கேட்க, அக்கறை மிடற்றண்ணல் முனிவரைப் பார்த்து, "அந்தச் சீடனுக்கு இனி ஆறு முகூர்த்தமே ஆயுள் இருப்பதால் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை" என்றார். உடனே அத்தவசி, கடுஞ்சினமடைந்து, 'சீடனுடைய உயிரைக் கொள்ளை கொள்ள விருக்கும் நமனை இப்போதே காட்டுவேன்' என்று எமபுரத்து வாயிலில் நுழைந்தார். பின்னால் வந்து கொண்டிருந்த சீடனுடைய தலை, கபாடத்தின்மேல் தாக்குண்டு உடைந்து, அவன் ஆசிரியர்மேல் சாய்ந்து மரணமானான். அதைக்கண்ட முனிவர் வெகுண்டு பெருமூச்சுவிட, அந்தச் சுவாசத்தினின்றும் அக்கினி எழும்பி எமனுலகை எரிக்க ஆரம்பித்தது.

அப்போது, கூற்றுவன் பயந்து முனிவரைத் தொழுது, "மாதவா! உமது சீடன் உம்மாலேயே மரண மடைந்திருக்க

நீர் என்னை அதற்காக நிந்திப்பதேன்? உமது ஆச்சிரமத்தி லிருந்தவண்ணம் இச்சிடனை ஆசிர்வதித்திருப்பீராணல் நான் இவனுடைய உயிரைக் கொள்ளை கொள்ளத் துணிவேனோ? தங்களுடைய பணிவிடையில் அவன் பிசகாதிருந்ததால் மும்மூர்த்திகளையும் தரிசித்து என்னைப் பார்க்காமல் அவனே மாண மடைந்தான். என் வாயிலில் அவன் மரணமடைய வேண்டிய விதி இருந்தபடியால் அவ்விதி உம்மையும், திரிமூர்த்திகளையும் ஆசிர்வாதம் செய்யவொட்டாமற் றடுத்தது. இதன் உண்மையை அறியாமல் என்மேல் தாங்கள் கோபிக்க லாகுமோ? உமது மாணாக்கன்மேல் உமக்குக் கருணை யிருக்குமாகில் அவன் தீர்க்காயுளுடன் ஜீவிக்க நீர் இப்போதும் அவனுக்கு ஆசிர்வாதம் செய்யலாம். அவ்வாசிர் வாதம் பெற்றவுடன் அவன் உயிர் பெற்று எழுந்திருப்பான்'' என்றான்.

நமன் சொன்னதைக்கேட்ட முனிவர், கோபந்தணிந்து சிடனை ஆசிர்வதிக்க, அவன் உயிர்பெற் றெழுந்தான். முனிவர் அவனைத் தமது ஆச்சிரமத்திற்கு அழைத்துக் கொண்டு போய்ச் சகல சித்திகளிலும் அவன் வல்லவனாகக்கூடிய மந்திர உபதேசங்களை அவனுக்குச் செய்தார்.

ஆதலால், ஊழின்படி சுகதுக்கங்கள் ஏற்படுகின்றன. என்னுடைய கால் கரங்கள் துண்டிக்கப்படவேண்டிய விதி யிருந்தமையால் அந்தச் சேவகர்கள் அப்படிச் செய்தனர். மறுபடியும் பகவானுடைய கருணையால் கால் கரங்கள் எப்போதும்போல் வாய்க்கப்பெற்றேன்'' என்றார்.

பிறகு, பகவான் பூமியில் புதைந்த சேவகர்களுக்கு நற்பதவி கொடுப்பதைப் பார்க்கும்பொருட்டு ஜயதேவர் கானகத்திற்குப் பிரயாணமானார். அரசனும் தன் சேனைகளோடு அவரைப் பின் தொடர்ந்தான். சிறிது நேரத்திற்குள் அவர்



கள் கானகம் போய்ச்சேர்ந்தார்கள். அப்போது, பகவானரு
ளால் பூமிக்குள் புதையுண்ட கபட வேஷதாரிக ளிருவரும்,
திவ்விய. விமானத்தி லெழுந்தருளி ஆகாய மார்க்கமாகச்
சென்றனர். அவர்கள் போகும்போது ஜயதேவரைப்
பார்த்து, "மகானுபாவா! தேவரீருக்கு அபாதத்தைச்
செய்த நாங்கள் தேவரீருடைய கருணையினால் வைகுண்டத்
திற்குச்.செல்லுகின்றோம்'' என்று சொல்லி மறைந்தனர்.
இந்த விநோதத்தைக் கண்ட யாவரும் ஆச்சரியமடைந்து
பட்டினம்போய்ச் சேர்ந்தார்கள்.

ஜயதேவருடைய பூர்வ விருத்தாந்தங்க ளனைத்தையும்
அறிந்த அரசன், சிலரை விடுத்துப் பத்மாவதி யம்மையை
யழைத்துவரக் கட்டளையிட்டான். பத்மாவதியம்மைத் தமது
கணவருடைய இருப்பிடத்திற்கு வந்து அவரை வணங்கி,
அவர் சேவகர்களால் துன்பமடைந்த சரித்திரத்தைக் கேட்
டுத் துன்புற்றனள். ஜயதேவர் தம் மனைவியைப் பார்த்து
"மாதே! எனக்கு நேர்ந்த துன்பத்திற்கு நீ வருத்தமடை
யாதே. அம்பை எய்தவனை விட்டு அம்பினை நோதல்போல
எம்பிரானைவிட்டுச் சேவகர்களை நிந்திக்கலாகாது. நாம் செய்த
தீவினை நம்மை வந்தணுகினால் நாராயணன் என் செய்
வான்? பகவானுடைய கிருபையால் திரும்பவும் நான் கால்
கரங்களைப் பெற்றேன். எக்காலத்தில் எதை அனுபவிக்க
வேண்டுமோ அதை அனுபவித்தே தீரவேண்டும்'' என்று
சொல்லி, அவ்வுத்தமியின் துயரத்தை நீக்கினர்.

பிறகு, அரசன்மனைவி அதிக மரியாதையுடன் பத்மா
வதி யம்மையை வரவேற்றுப் பணிந்து, "தேவி! அடியேன்
சன்மார்க்க மொன்றும் அறியாதவள். பகவானுடைய அன்பு
பூண்ட தங்கள் கணவரின் மகிமையோ இங்கு யாவராலும்
கொண்டாடப்படுகின்றது. அரசரோ அவரைப் பிரியாமல்,

அவருடைய நல்லுபதேசங்களைக் கேட்டு இன்பமடைகிறார். அதுபோலத் தாங்கள் எனக்கு நல்லறத்தைத் தெரிவித்து என்னை நற்கதிக் காளாக்கவேண்டும்" என்றாள்.

பத்மாவதி அதுகேட்டு, "அம்மா! மங்கையர் கற்பென்னும் விரதத்தை நீ கைவிடலாகாது. ஸ்திரீகளுக்குப் பதியே பரமேஸ்வரன்; பதியே முத்தியளிக்கும் நாதன்; பதியே ஞானமளிக்கும் விநோதன்; பதிக்குச் செய்யும் பணிவிடையே மேலான பூசை; பதிசொல் கடவாமையே பரகதியை அடையும் மார்க்கம். பதியைப் பிரியாமலிருந்து பதி இறந்தவுடனே தன்னுயிரை விட்டுவிடுபவளே உத்தம ஸ்திரீ" என்று சொல்லி முடித்தனள்.

## நல் லுபதேசம்.

ஒருநாள் பத்மாவதியம்மை ஒரு உத்தம ஆசனத்தில் வீற்றிருக்க, அரசன் மனைவியும், சில ஏவற்பெண்களும் அவ்வம்மையைச் சூழ்ந்திருந்தனர். அச்சமயத்தில் ஒரு சேவகன் ஓடிவந்து அரசியைப் பணிந்து "அம்மா! தங்கள் சகோதரர் மரணமடைந்தார். அதைச் சகிக்கமுடியாமல் அவருடைய மனைவியும் அக்கினிப் பிரவேசமானாள்" என்றான். அரசன் மனைவி அதுகேட்டு மிகவும் துக்கத்தை யடைந்தாள். பத்மாவதியம்மை அதனால் யாதொரு ஆச்சரியத்தையும் அடையாமல் மௌனமா யிருந்தனள்.

அரசன் தேவி அது கண்டு, "அம்மையே! என்னுடைய சகோதரன் இறந்ததுமாத்திரமன்றி அவன் மனைவியும் மரணமடைந்ததைக் கேட்டும் தாங்கள் வியப்புறாமலிருக்கும் காரணம் யாது?" என்றனள். அதற்குப் பத்மாவதியம்மை நகைத்து, "அம்மா! தேகம் மறையும்போது அதனுடைய நிழலும், சூரியன் மறையும்போது அதனுடைய கிரணங்



களும் காணாது ஒழிவதுபோல, நாயகனுடைய மரணத்தைக் கேட்ட பதிவிரதைக்கும் உடனே மரணமுண்டாக வேண்டும். இதற்குச் சான்று சூரபன்மனுடைய மனைவியாகிய பதுமகோபனைச் சூரபன்மன் இறந்தமாத்திரத்திலேயே உயிர் துறந்தனள். இதுவன்றோ தலைமையான கற்பு. அப்படியின்றிப் பிரயத்தனத்தினால் கணவனுடை சிறப்புது ஆச்சரியமல்ல. பூர்வம், மத்திரதேசத்தரசனாகிய அசுவபதி என்பான், புத்திரப்பேற்றையடைய சரஸ்வதியை நோக்கி நெடுநாள் தவஞ்செய்தான். அந்தத் தேவியாரின் அனுக்கிரகத்தால் அவ்வரசன் மனைவியாகிய மாலவி தேவிக்கு ஒரு பெண்மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு உத்தம ஸ்திரீகளுக்குரிய அங்க இலட்சணங்களெல்லாம் சரிவர நிரம்பப்பெற் றிருந்தன. சரஸ்வதியின் திருவருளால் அக்குழந்தை அவதரித்ததால் அதற்குச் சாவித்திரி என்னும் பெயர் சூட்டப்பட்டது.

சாவித்திரி, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து, அழகிலும் கல்வி முதலிய நற்குணங்களிலும் சிறந்து விளங்கினாள். அசுவபதி, தன் அரியகுமாரத்தியாகிய சாவித்திரிக்கு அநேக நாட்களாக வரன்தேடியும் தனக்கு உகந்தவன் அகப்படாமையால் தன் குமாரத்தியை அருகிலழைத்து, "குழந்தாய்! என் மனத்துக் கிசைந்தபடி உனக்குக் கணவன் கிடைக்கவில்லை. ஆதலால் நீ நம்முடைய மந்திரிமார்களுடன் சென்று உனக்கிஷ்டமான நாயகனைத் தேடி வருவாயாகில் நான் அவனுக்கே உன்னை விவாகஞ் செய்து வைப்பேன்" என்றான். சாவித்திரியும் தந்தையின் கட்டளையை மேற்கொண்டு, மந்திரிகளுடன் சென்றாள். சில நாட்களில் சாவித்திரி அங்குத் திரும்பி வந்தனள். அப்போது நாரதர் அவளைக் கண்டு, "குழந்தாய்! நீ எங்குச் சென்று வருகின்றனை?" என்றார்.

அதுகேட்டுச் சாவித்திரி, "முனிநாதா! அடியாள் தந்தையின் அனுமதியின்படி வரனைத் தேடப் பல தேயங்கள் சென்றும் கிடைக்கப் பெறாமல், சமீபத்திலிருக்கும் வனத்தினுள்ள சத்தியவான் என்பவரையே கணவராக வரித்துக் கொண்டேன். அவர் க்ஷத்திரிய வமிசத்தினர் சாளவ தேசத்தைப் பரிபாலனஞ் செய்துவந்த தியுமத்சேனன் என்னும் மன்னருடைய குமாரர். அம்மன்னர், பூர்வவினையால் கண்ணொளி இழக்கப்பெற்று, வேற்றரசனால் தம்முடைய நாட்டையும் இழந்தனர். அதுமுதல் அவர் தம் மனைவி மைந்தருடன் காட்டிற்குச் சென்று அங்கே தவஞ்செய்து வாழ்கின்றார். அந்தச் சத்தியவானையே நான், என் கணவனாக மனத்தில் வரித்தேன்" என்றாள்.

அதுகேட்ட நாரதர், "சாவித்திரி! யாது செய்தனை? மோசம் போயினையே! சத்தியவானை நீ மணம் புரிவாயாகில் நீ சுகமடையமாட்டாய். அவன் இன்றுமுதல் ஒரு வருடத்தில் மரணமடைவான்; ஆதலால் அவனை மறந்து வேறொருவனை நாடக்கடவாய்" என்றார்.

சாவித்திரி அதுகேட்டு, "முனிபுங்கவா! அப்படியும் செய்வாருண்டோ? எப்போது ஒருவரை என் கண்ணும், மனமும் காதலித்தனவோ அப்போதே நான் அவரை மணந்தவளாவேன்.

"கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறோ
ரிற்புறத் தவரை நாடார்"

என்னும் அமுதவாக்குக் கிசைய அவரைத் தவிர்த்துப் பின்னு மொருவரை விரும்புவது இழுக்கன்றோ? மனம், வாக்கு, காயம் என்னும் இம்மூன்றையும், சுத்தமாக வைப்பது குலமகளின் தொழிலாகும். என் மனம் நாடிய அவரையே நான் மணப்பேன்" என்று கூறினாள்.



தன் குமாரத்தியின் பிடிவாதத்தை யுணர்ந்த அசுவபதி, சத்தியவானுடைய தாய் தந்தையரை வரவழைத்து, ஒரு சுபதினத்தில் சாவித்திரிக்கும், சத்தியவானுக்கும் விவாகம் செய்து வைத்தார். சில நாட்கள் சென்றன. சாவித்திரி, தன் அழகிய ஆடையாபரணங்களைத் துறந்து, தவத்திற்குரிய ஆடை தரித்துத் தன் காதலனோடு கானகத்திற்குச் சென்று அங்கே வசித்து வந்தனள். நாட்கள் கழிந்தன. நாரதர் தெரிவித்துப்போன விஷயத்தை அவள் மறந்தவளல்ல. சத்தியவானுக்குக் குறிப்பிட்ட ஒரு வருடம் முடிவதற்கு மூன்று நாட்களே இருந்தன. அந்நாள் நெருங்கவே அவள் ஊண் உறக்கமின்றிக் கிடந்தனள்.

"இறப்பொடு பிறப்பை யுள்ளே
எண்ணினா னெஞ்சது பலொனும் துயிலுறாது"

என்று ஆன்றோர் அனுபவவாற்றாற் கூறிய அரிய மொழியின் பொருளுக்கிணங்க குறித்த நாள் வந்தது. அன்றுகாலையில் வழக்கம்போலச் சத்தியவான் தன் கோடாரியுடன் காட்டிற்குச் சென்றான். சாவித்திரியும் அவனைப் பின் தொடர்ந்தாள். சத்தியவான் அவளைப் பார்த்து, "மாதே! நீயோ உபவாசத்தால் வாடி யிருக்கின்றாய். கானகத்துக்குச் செல்லும் வழியோ முட்கள் நிறைந்துள்ளது. நீ அங்கு வரமுடியாது" என்றான். அதற்குச் சாவித்திரி, "நான் வனத்தைப் பார்க்க அவாக்கொண்டுள்ளேன். ஆகையால் தங்களுடன் வருகின்றேன்" என்று சொல்லி அவனுடன் சென்றனள்.

சத்தியவானும், சாவித்திரியும் வழியிலுள்ள புதுமைகளைப் பார்த்துக்கொண்டே காட்டை யடைந்தார்கள். சத்தியவான், அங்குள்ள காய்ந்தமர மொன்றைத் தன்கோடாரியால் வெட்டிக்கொண் டிருந்தான். அப்போது ஒருவித

மயக்கமும், தலைவலியும் அவனுக் குண்டாயின. அவன் அவற்றைச் சகிக்கக்கூடாமல் சாவித்திரியின் மடிமேற் சாய்ந்து நித்திரை போயினான். அப்போது, சத்தியவானுடைய ஆயுள் முடிந்துவிட்டதால் யமன் சத்தியவானுக் கருகில் ஒளிமயமான உருவத்துடன் நின்றான். அவ்வுருவத்தைக் கண்ட சாவித்திரி நடுங்கி, மடியின்மீதிருந்த சத்தியவானுடைய சிரசைக் கீழேவைத்து, அவ்வுருவத்தை வணங்கி, "சுவாமி! தாங்கள் யாவரோ? தாங்கள் இப்போது செய்ய எத்தனிக்கும் காரியம் யாதோ?" என்று வினவினாள்.

"உத்தமியே! நீ கணவனையே தெய்வமாகக் கருதினவள்; அன்றியும் நீ கற்பிற் சிறந்த தூய்மையுடையவள்; ஆதலால், நான் உன்னோடு பேசல் நேரிட்டது. நான் காலன் அவரவர்களுடைய உயிர்களைக் காலம் பார்த்துக் கொண்டு போகிறபடியால் காலன் என்னும்பெயர் இயமனாகியவெனக் கியைந்தது. உன் கணவனுடைய ஆயுள் முடிந்துவிட்டதால் அவனுயிரைக் கொண்டுபோகிறேன். மனிதருடைய உயிரைக் கொண்டுபோவது என் தூதர்களேயாயினும், சத்தியவான் தருமம் தவறாதவனாதலால், அவனுடைய உயிரைக் கொண்டுபோதல் அவர்களா லாகாது. ஆதலால், நானே வந்தேன்" என்று இயமன் சொல்லிச் சத்தியவானுடைய உயிரை அவனுடைய சரீரத்தினின்றும் பிரித்துக்கொண்டு இயமபுரத்தை நோக்கிச் சென்றான்.

அதைக்கண்ட சாவித்திரி அதிக துக்கத்தை யடைந்து, இயமனைப் பின் தொடர்ந்தாள். காலன் அவளைக் கண்டு, "அம்மா! நீ ஏன் என்பின் வருகின்றாய்? நீயோ உன் நாயகனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செவ்வனே செய்திருக்கின்றாய். இனி நீ திரும்பிப்போய் உன் கணவ



னுடைய ஈமக்கடன்களைச் செய்வாயாக!" என்றான். சாவித்திரி, அவன் சொன்னதைச் சற்றும் கேளாமல் அவனைத் தொடர்ந்தாள். அதைக்கண்ட நமன் ஆச்சரியமுற்று, "உத்தமி! உன் கணவனுடைய உயிரைத்தவிர நீ எதைக் கேட்டாலும் தருவேன்" என்றான்.

சாவித்திரி அதுகேட்டு, "தென்றிசைத் தலைவ! கண்ணிழந்த என் மாமனார் திரும்பவும் கண்காணப்பெறும் வரத்தை யருளவேண்டும்" என்றாள். "அப்படியே உன் மாமனார் கண்காணப் பெறுவார். நீ திரும்பிச் செல்வாயாக" என்றான் மறலி. சாவித்திரி நமனைநோக்கி, "நான் எவ்விடம் போவது? எனக்குக் கணவனே வீடு, பொருள் முதலிய சகல சம்பத்துக்கள். அவரைத் தாங்கள் கொண்டுபோகுமிடத்திற்கு நானும் வருகிறேன்" என்று பின்னும் அவனை விடாது தொடர்ந்தாள். அவ்வாறு தொடர்ந்ததைக் கண்ட அக்கூற்றுவன் அவளைப் பார்த்து, "சாவித்திரி! நீ மகா உத்தமி என்பதை நான் அறிவேன். சத்தியவானுடைய உயிரைத்தவிர வேறு எதைக் கேட்டாலும் தருகிறேன்" என்றான். சாவித்திரி அந்தகனைப் பணிந்து, "வேற்றரசனால் கைக்கொள்ளப்பட்ட என் மாமனாருடைய நாட்டைத் திரும்பவும் அவர் அடைய அருள் செய்வதுடன் என் தந்தையாகிய அசுவபதிக்கு ஒரு ஆண் மகவு உண்டாகவும் வரந்தரல் வேண்டும்" என்றாள்.

"அப்படியே நீ கேட்ட இரண்டு வரங்களையும் கொடுத்தேன். நீ இனிப் போகலாம். அதிகதூரம் சிரமப்பட்டு வருவதால் உபயோகமில்லை" என்றான் எருமையூர்தி. சாவித்திரி மறுபடியும் அவனைப் பணிந்து "நீர் தருமந்தவறாது எல்லா உயிர்களிடத்தும் நீதியைச் செலுத்துவதால் தருமர் என்னும் பெயரைப் பெற்றீர். உம்மைத் தொடர்ந்து வருவ

தால் துராமும், கஷ்டமும் எனக்குத் தோன்றுமோ?" என்று சொல்லிப் பின்னும் அவனைத் தொடர்ந்தாள். சண்டன் அதுகேட்டுத் திகைத்து, "அம்மா! நீ என்னைத் தொடர்ந்து வருதல் தகாது. உன் அன்பன் உயிரைத்தவிர வேறெதை யாகிலும் நான் கொடுப்பேன். அதை நீ கேட்பாயாக" என்றான்.

"எனக்குப் புத்திரபாக்கியம் உண்டாக அருள் செய்ய வேண்டும்" என்றாள் சாவித்திரி. நடுவனும் அவள் வார்த்தைக் கிசைந்து, "நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன்" என்றான். சாவித்திரி அதிக சந்தோஷமடைந்து, "சுவாமி! நான் என் கணவனை மீண்டும் பெறேனாயின் எனக்குப் புத்திரப்பேறு எவ்விதம் கிடைக்கும்? தாங்கள் கொடுத்த வரமும் பொய்யாகுமே" என்றாள். அதுகேட்டு நமன் சற்று யோசித்து, அவளது கற்பைப் புகழ்ந்து, "நீ உன் கணவனுடன் இனிது வாழக்கடவாய்" என்று சொல்லி மறைந்தான்.

"இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதெ
னில்லவள் மாணாக் கடை"

என்னும் தமிழ் வேதத்திற் கியைய சாவித்திரி, கூற்றுவனிடம் தன் கற்பின் மாட்சிமையால் எந்நலங்களையு மெளிதிலடையப் பெற்றனள். சாவித்திரி அதுகேட்டு ஆனந்தக் கண்ணீர் சொரியத் தன் கணவனுடைய சரீரம் விழுந்து கிடக்கு மிடத்திற்கு வந்து பார்க்க, அவன் சுவாசமிட்டுத் தூங்குவதைக் கண்டு இறும்பூதுற்றுக் கண்ணில்லாதவன் கண்பெற்றாற்போலவும், நித்தியத் தரித்திரனுக்குப் புதையல் கிடைத்ததுபோலவும், மாணிக்க மிழந்த பாம்பு மாணிக்கம் பெற்றாற்போலவும் அவனைத் தட்டி எழுப்பினாள். பின்னர், நிகழ்ந்த யாவும் அவனுக்குச் சொல்லி அவனுடன் தன்



இருப்பிடம் சேர்ந்தாள். முன்னே இழந்த நாட்டையும், மற்றெல்லா வரங்களையும் பெற்றுக் கணவனுடன் இன்புற வாழ்ந்திருந்தனள்.

ஆதலால் கற்புடையாள் எதை விரும்பினும் தடையின்றிப் பெறுவள். கணவ னிறந்தபின் தற்கொலை செய்து கொள்வது ஆச்சரியத்துக் கிடமாகுமா?" என்றாள். அரசன் மனைவி, பத்மாவதியம்மையின் வார்த்தையை அநுபவத்தினால் அவளிடத்திலேயே கண்டறியவேண்டுமென்று சமயம் பார்த்துக்கொண் டிருந்தாள்.

## இறந்த பத்மாவதி யம்மை உயிர் பெற்றது

ஒருநாள் ஜயதேவர் அரசனுடன் தல யாத்திரைக்குச் சென்றார். இராஜபத்தினி அதை யறிந்து, பத்மாவதியம்மையைப் பரீக்ஷிக்க அதுவே தருணமென்று கருதினாள். அவள் பிரதானியை அழைத்து, "ஜயதேவர் மரணமடைந்தார் என்று ஒரு தூதன் மூலமாகப் பத்மாவதி யம்மைக்குத் தெரிவிக்கவேண்டும். அதனால் நான் ஒரு விஷயத்தைப் பரீக்ஷித் தறியவேண்டும்" என்றாள். பிரதானி அதற்குச் சம்மதித்து அவ்விஷயத்தைப் பத்மாவதி யம்மைக் கறிவிக்கும்படி ஒரு தூதனை அனுப்பினான். அத்தூதன், அரசமாளிகையை யடைந்து, இராஜபத்தினியை வணங்கி, "அம்மா! ஜயதேவர் ஒரு காட்டினிடையில் ஒரு புலியால் திடீரெனக் கொல்லப்பட்டார்" என்று சொல்லி அதற் கடையாளமாக இரத்தம் தோய்ந்த வஸ்திரமொன்றைக் காட்டினான். இராஜபத்தினி அதுகேட்டுக் கபடமாக அழத் தொடங்கினாள். அருகிலிருந்த பத்மாவதியம்மை, தூதன் சொன்னதைக் கேட்டவுடனே தமது நாயகனைத் துதித்து, மெய்ம் மறந்து பூமியின்மேல் விழுந்து மரணமடைந்தாள். இப்படி நடக்குமென்று சற்றும் நினையாதிருந்த அரசபத்தினி, பத்மாவதி

யின் மரணத்தைக்கண்டு ஆச்சரியமடைந்து, தன்னால்நேர்ந்த அப்பழிக்காக மிகவும் பயந்திருந்தனள்.

அப்போது அரசன் ஜயதேவருடன் பட்டினத்திற்குத் திரும்பிவந்து, நடந்த விருத்தாந்தத்தைக்கேட்டு நடுங்கினான். குருபத்தினியின் மரணத்திற்குக் காரணமாயிருந்த தன் மனைவியைக் கொல்ல எத்தனித்தான். அவ்வாறு செய்வது பெண் கொலையாகுமென்று கருதினான். அவன் மனம் நிலைகொள்ளாது தவித்தான். "ஆ! இப்பழிக்கு நான் என்ன செய்வேன்? முந்திய பிறப்புக்களில் நல்லோர் உள்ளத்தை நடுங்கச் செய்தல், வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தல், தானங் கொடுப்போரைத் தடுத்து நிற்றல், கலந்த நட்பினருக்குள் கலகஞ் செய்தல், மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தல், குடிவரி உயர்த்திக் கொள்ளை கொள்ளல், ஏழைகள் வயிறு எரியச்செய்தல், தருமம் பாராது தண்டஞ்செய்தல், மண்ணோரம்பேசி வாழ்வழித்தல், களவுசெய்வோர்க்கு உளவு சொல்லல், பொருளை இச்சித்துப் பொய் பேசுதல், ஆசைகாட்டி மோசஞ் செய்தல், வரவுபோக் கொழிய வழியடைத்தல், வேலை இட்டுக் கூலி குறைத்தல் என்னும் அடாத செய்கைகளைச் செய்தேனோ? இல்லையாயின் பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ? இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்றேனோ? கோள் சொல்லிக் குடும்பங் கலைத்தேனோ? நட்டாற்றில் பற்றினோர் கையை நழுவவிட்டேனோ? கலங்கி யொளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ? குருவை வணங்கக் கூசி நின்றேனோ? குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ? கற்றவர் தம்மைக் கடுத்துப் பேசினேனோ? ஏது மறியேன்.

அந்தோ! இப்பழி எனக்கு எப்படிவந் தெய்தியது? பட்சியைக் கூண்டில் பதைக்க அடைத்தல்; கன்றுக்குப்



பால் ஊட்டாது அதைக் கட்டிவைத்தல்; ஊன் சுவை உண்டு உடலை வளர்த்தல்; கல்லும் நெல்லும் கலந்து விற்றல்; அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தல்; குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தல்; நிழல் கொடுக்கும் விருக்ஷத்தை அழித்தல்; அயலார் பயிரை அக்கிரமமாய் அழித்தல்; பொது மண்டபத்தைப் பாழ்பட இடித்தல்; ஆலயக்கதவை அடைத்து வைத்தல்; தவஞ் செய்வோரைத் தாழ்வு சொல்லல்; சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தல்; தந்தை தாய் மொழியைத் தள்ளி நடத்தல்; தெய்வத்தை இகழ்ந்து செருக் கடைதல்; சிவனடியாரைச் சீறிவைதல் என்னும் பாவ காரியங்களில் எதைச் செய்தேனோ? அறியேன். இதற்கு நானே என் உயிரை மாய்த்துக்கொள்வது மேன்மையாகும்." என்று தனக்குள் துணிந்து, தன் புதல்வனை யழைத்து, அவனுக்கு நீதிகளை யுரைத்து, அரசை அவனிடம் அளித்து, அக்கினியை மூட்டி அதிற் பாயத் திடங்கொண்டான். எல்லாப் பாதகங்களிலும் ஞானியர்களுக்குத் தீங்கிழைத்தலே மேம்பாடுற்ற தாதலின் இங்ஙனங் கூறி வருந்தினனென்க.

அக்கினியில் விழுவதற்குமுன் அவ்வரசன் ஜயதேவருடைய அனுமதியைப் பெற நினைத்து, அவரிடஞ் சென்று, அவரை வணங்கி, "தேசிகா! நான் பாவியானதால் தங்கள் தருமபத்தினிக்கு இங்கு மரணம் சம்பவித்தது. அதற்கு நானே காரணமாயிருந்ததால் நான் அக்கினியில் விழுந்திறக்கத் துணிவுகொண்டேன். இதைவிட வேறு செய்தக்க பிராயச்சித்த மொன்றுங் காணேன். தங்களுடைய சீடனாகிய நான் யமவாதைக் குட்படாமல் பகவானுடைய அருளை அடையும் வண்ணம் தாங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்" என்று வேண்டினான். அரசன் பழியைப் போக்கிக் கொள்ள எவ்வித காரணத்தினாலும் கூடாது. ஆசான்

அருளைக்கொண்டே போக்கிக் கொள்ள வேண்டு மென்பது நான் முறையாதலின் இங்ஙனம் கூறினான்.

அதைக் கேட்டு ஜயதேவர் திகைத்து, அருகிலிருந்தவர்களால் நடந்த விருத்தாந்தத்தை யுணர்ந்து "மன்னா! உன்னை யறியாது சம்பவித்த இக்கொடுமைக்கு நீ உயிர்விட துணியலாமா?" என்று அவ்வரசனை யழைத்துக்கொண்டு பத்மாவதி இறந்துகிடக்கு மிடத்திற்குச் சென்றார். அவர் தம் இரண்டு கைகளையும் சிரசின்மேற் குவித்து "ஜகநாதா! கிருபா நிதியே! ஞானக் குறைவால் நேர்ந்த இந்த அபவாதத்தினின்றும் இவ்வரசனைக் காப்பாற்றவேண்டும். என் மனைவி உயிர்பெற்றாலொழிய இவ்வரசன் உயிர் நிலைப்பது முடியாததுபோ லிருக்கிறது. அப்படிச் செய்தல் உமக் கருமையோ? பூர்வம் ஜலத்தில் மூழ்கி இறந்த * சாந்தீபினியின் புத்திரனை நீர் உயிர்பெறச் செய்யவில்லையா?" என்று

*ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி, பலராம கிருஷ்ணர்களாய் அவதாரஞ் செய்திருக்கையில், அவந்தி தேசத்திலுள்ள சாந்தீபினி என்னும் பிராமணரிடம் சகல வித்தைகளையும் கற்றுத் தேர்ந்தனர். பிறகு இராம கிருஷ்ணர்க ளிருவரும் சாந்தீபினியைப் பணிந்து, "குருநாதா! தங்களுடைய அனுக்கிரகத்தினால் சகல கலைகளையும் கற்றுணர்ந்தோம். தங்களுக்கு எங்களால் வேண்டுவது யாது?" என்று கேட்டனர். சாந்தீபினி அவர்களைப் பார்த்து "அன்புடைய சிறுவர்களே! என் புத்திரன் பிரபாக தீர்த்தத்தில் மரணத்தை அடைந்தான்; நீங்கள் அவனைக் கொண்டுவந்து கொடுப்பதே குரு தட்சணையாகும்" என்றார். இராம கிருஷ்ணர்கள் அதற்குச் சம்மதித்து இரதத்தின் மீதேறிக்கொண்டு, பிரபாக தீர்த்தத்திற்கு வந்து நின்றார்கள். இதை யறிந்த வருணன் அங்கே ஓடிவந்து இராம கிருஷ்ணர்களைப் பூசித்து நின்றான். ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி அவனைப் பார்த்து, "நதிகேள்வ! முன்பு பிரபாக தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்யவந்த சாந்தீபினியின் குமாரன் இறந்தானல்



பலவாறு தோத்திரஞ் செய்தார். பகவான் ஜயதேவருடைய
தோத்திரங்களுக்கு இரங்கி, அவர் முன் பிரசன்னமாகி,
"அன்ப! நீ உன் கவலையை ஒழிக்கக் கடவாய். உன் விருப்
பத்தின்படியே ஆகுக" என்று சொல்லி மறைந்தார்.
உடனே சவமாய்க் கிடந்த பத்மாவதியம்மை உயிர்பெற்
றெழுந்து, ஜயதேவரை வணங்கி நின்றாள். அப்போது
தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அரசனும் அவ
னுடைய பத்தினியும், ஜயதேவரைக் கொண்டாடி முன்னி
லும் அதிக பக்தியுடையவர்களாய் அவருக்குத் தொண்டு

லவா? அவன் என்னுடைய குரு புத்திரன். குரு தட்சணையாக நான்
அவனை என் குருவினிடம் சேர்ப்பிக்கவேண்டும். ஆதலால், அவனை
அதி சீக்கிரத்தில் கொண்டுவந்து என் முன் விடவேண்டும்"
என்றார்.

அந்த வார்த்தையைக் கேட்டுப் புனல் வேந்தன், கண்ணபிரா
னைப்பார்த்து "குருபுத்திரனை நான் கண்டதில்லை. சமுத்திரத்தில்
சங்குருவமா யிருக்கின்ற பஞ்சன் என்னும் அசுரன் அவனைச் சங்
கரித்தான். அவ்வசுரனைக் கொல்ல என்னாலாகாது. தாங்களே அவ
னைச் சங்கரிக்க வேண்டும்" என்றான். கண்ணபிரான் அதுகேட்டுக்
கீழே இறங்கிச் சமுத்திரத்தில் பிரவேசித்து, அந்தப் பஞ்சனைச்
சங்கரித்துக் கிழித்துப் பார்க்கக் குரு புத்திரன் அவனிடத்திற்
காணப்பட வில்லை. அவர் அவ்வசுரனுடைய சரீரமாகிய சங்கை
எடுத்துக் கொண்டு திரும்பி வந்து, பல தேவருடன் இரதத்தி
லேறிக் கொண்டு சைம்மினி என்னும் யமனூரை யடைந்தார்.

"ஆர்க்கும் வலம்புரியால் அண்டமு மெண்டிசையும்
கார்க்கடலும் வெற்புங் கலங்கினவால்."

என்னும்படி, அங்கே அவர் பாஞ்சசன்னியம் என்னும் தமது சங்
கைப் பூரித்தார். அந்தத் தொனியைக் கேட்டு யமன் ஓடி வந்து,
ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியை வணங்கி, அவர் அங்கு வந்த காரியத்
தைத் தெரிவிக்கும்படி வேண்டினான்.

செய்து கொண்டிருந்தார்கள். ஜயதேவரை முதலில் உபசரித்த வர்த்தகனும் அவருடைய விருத்தாந்தத்தைக்கேட்டு ஆனந்தமடைந்து, அவரிடம் வந்து, அவருக்குத் தொண்டு செய்துகொண்டிருந்தான். சகல ஜனங்களும் ஜயதேவருடைய மகத்துவத்தைக் கொண்டாடி, அவரால் இயற்றப்பட்ட ஸ்ரீ கீத கோவிந்தமென்னும் கீர்த்தனத்தை அதிக பக்தியுடன் சதாகாலமும் தியானஞ்செய்யலாயினர்.

> "அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
> இன்பநிலை தானேவந் தெய்தும்"

என்னும் ஆப்த வாக்கியப்படி, இப்போதும் பக்தரானோர் அவர் கீர்த்தியைக் கொண்டாடி வருகின்றனர்.

---

கண்ணபிரான் அவனைப் பார்த்து "என் குருவாகிய சாந்தீப முனியின் குமாரன், பூர்வத்தில் தன் கர்மவசத்தால் மரணத்தையடைந்திருந்தாலும் என்னுடைய அருளால் பிழைத்திருப்பான். அவனைச் சீக்கிரத்தில் கொண்டு வரவேண்டும்" என்றார். மறலி அது கேட்டு, உடனே அந்தப் புத்திரனை அழைத்து வந்து கண்ணபிரானுடைய சமீபத்தில் விட்டனன். கண்ணபிரான் அப்புத்திரனையும் இரதத்தி லேற்றிக்கொண்டு வந்து சாந்தீபமுனியின் அருகிற் சென்று, அவரை நமஸ்கரித்து "பிரபாகத்தீர்த்தத்தில் இறந்துபோன குமாரன் இதோ இருக்கிறான். இவனைக் குரு தட்சணையாக நீர் அங்கீகரித்தருள வேண்டும்" என்றார். சாந்தீபினி, தம் குமாரனைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி யடைந்து, இராமகிருஷ்ணர்களை ஆசீர்வதித்தனுப்பினர்.

ஸ்ரீ

# துளசி தாசர்

---

## அறநெறி யுணர்தல்

பூமகளின் கண்போலமைந்த இவ்விந்தியா தேசத்திற்குத் தலைநகராக விளங்குவது டில்லி என்னும் பட்டினம். அதற்குப் பூர்வம் * அஸ்தினபுரி என்ற பெயர் வழங்கி வந்தது.

பாண்டவர்கள் அரசு புரிந்த இடம் அதுவேயாகும். அங்கே முன்னொரு காலத்தில் ஆத்மராம் என்னும் பெயருடையார் ஒருவரிருந்தார். அவர் உத்தம பிராமணகுலத்தில் அவதரித்தவர்; சகல கல்வியிலும் சிறந்தவர். அப்போது அந் நகருக்கு அரசனாயிருந்த அக்பர் பாதுஷா என்பவன், ஆத்மாராம் என்பவருடைய கல்வித் திறத்தையும், நற்குணங்களையும் கேள்விப்பட்டு அவரைத் தனக்குப் பிரதானியாக நியமித்துக்கொண்டான்.

ஆத்மாராமுக்கு உத்தமி என்னும் பத்தினி இருந்தனள். அவளிடம் பூரண சந்திரனைப்போன்ற அழகுடைய மைந்தனொருவன் பிறந்தான். பூர்வம் இராம பக்தியிற் சிறந்து விளங்கி இராமாயணத்தைச் சுலோகங்களாக வகுத்த நாரதமுனியின் அவதாரமே அக்குழந்தை. கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள்மேல் காதல் என்றபடி ஆத்மாராம் அக்

---

* அத்தியென்னும் அரசனால் ஆட்சிபுரியப்பட்டதால் அத்தினபுரி யென்று பெயர்பெறும். அங்கே யானைகள் அதிகமாக வசித்தால் அத்தினபுரி யென்றுங் கூறுவர் சிலர்.

குழந்தைமீ தன்புகொண்டவராய் அதனை அதிக செல்வமாக வளர்த்து வந்தார். பிறகு அவர் அம்மைந்தனுக்குத் தகுந்த பருவத்தில் உபநயனஞ்செய்து முடித்து,

*"வெள்ளத்தால் போகாது வெந்தழலால் வேகாது
வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவொழிய
குறைபடாது;
கள்ளர்க்கோ மிகவரிது காவலோ மிகவெளிது;
கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க உலகெல்லாம் பொருள்தேடி
யுழல்வதேனோ?"

என்ற மூதோரின் மொழிப்படி, ஆத்மாராம் தம் குமாரனுக்குச் சகல கல்விகளையும் தெளிவுபடப் போதித்தார்.

மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் என ஆன்றோர் கூறியபடி துளசிதாசர் சகல சாஸ்திரங்களிலும் வல்லவரானதால் எவரினும் சிறப்புற்று விளங்கினார். அதன்மேல் ஆத்மாராம், தம் குமாரனுக்கு நல்ல குலத்திற் றோன்றிய மமதாதேவி என்னும் கன்னிகையை மணஞ்செய்து வைத்தார். அம்மங்கை மதி முகமும், கமலக் கண்களும், நற்குணங்களும் பெற்றவள். அழகில் திருமகளைப் போலவும், கற்பில் அருந்ததியைப் போலவும் விளங்கினாள்.

பிறகு ஆத்மாராம், துளசிதாசரை ஒவ்வொருநாளும் அரசசபைக்கு அழைத்துக்கொண்டுபோய் நீதிகளைப் போதித்து

* வெள்ளத்தினால் போகாது, கொடிய நெருப்பில் வேகாது, அரசர்களாலும் அபகரிக்க முடியாது, பிறருக்குக் கொடுத்தாலும் நிறையுமேயன்றிக் குறையாது, திருடர்களாலும் திருடமுடியாது, பாதுகாத்தலோ மிகவெளிது. கல்வி என்று சொல்லப்பட்ட பொருள் மனத்தினிடம் இருக்க உலகமுழுவதும் பொருளைத்தேடி யுழல்வது எதற்கோ?



வந்தனர். அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும் என்ற அரிய மொழியின்படி, அரசனும் துளசிதாசருடைய கல்வித்திறத்தைப்பற்றி மிகவும் சந்தோஷித்தான். தமக்குப் பின் பிரதானியின் தொழிலைத் துளசிதாசர் செய்யவேண்டுமென்று, ஆத்மாராம் அரசநீதிகளை அவருக்குப் போதிக்கத் தொடங்கி, அப்பா! குழந்தாய்!

"ஐயறிவுந் தம்மை யடைய வொழுகுதல்
எய்துவ தெய்தாமை முற்காத்தல்—வைகலும்
பாரேற்கு மன்னர் நிலையறித லிம்மூன்றும்
ஓரேற்ற பேரமைச்சர் கோள்"

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் அறிவுகளும் தீயநெறியில் செல்லாமல் தம்மிடத்து அடங்கி நிற்கும்படி நல்வழியில் நடத்துதலும்; அரசனை அடைவதாகிய துன்பத்தை அடையாதபடி முன் அறிந்து தடுத்தலும்; தினமும் தம்முடைய பகைமையை ஏற்றுக் கொள்ளுதற்குரிய அரசருடைய இருப்பை ஒற்றர்களால் அறிந்து அதற்குத் தக்கபடி செய்தலும் ஆகிய இம்மூன்றும் கீர்த்தியை மேற்கொண்ட பெருமையாகிய மந்திரிகளது துணிவுகளாம்.

பிரதானியா யிருப்பவன், அரசனுக்கு நன்மை பயக்கும் நன்னெறிகளை எடுத்துச் சொல்லி வரவேண்டும்; நியாய நடவடிக்கைகளில் எளியார் வலியார் என்னும் பேதமின்றித் தக்கபடி நியாய பரிசீலனைசெய்து, அறத்தைக் காக்கவேண்டும்; தன்னுயிரைப்போல மன்னுயிரையும் பாதுகாத்தலே பிரதானிக்குரிய தர்மம். அநீதியான மந்திரியால் அரசாட்சி குன்றிப் போகும். அரசன் அநீதிக் குட்படுவானாயின் பிரதானி பலவித நீதிகளை அவனுக்கெடுத்துக்காட்டி, உத்தமச் செயலுக்கு அவனை உட்படுத்தவேண்டும். அறநெறியே யாவருக்கும், புகழையும், மேன்மையையும் வரு

விக்கும். மந்திரி, கொலை களவு முதலிய துஷ்டகாரியங்கள் காட்டில் நடவாமற் செய்து அதிதிகளை ஆதரிக்கவேண்டும். சாதுக்களின் ஆசீர்வாதத்தால் பட்டினம் பிரகாசிக்கும். மூதறிஞரும்,

"சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே"

என்றாராதலின், சாதுக்கள் இல்லாதநாடு கொடிய மிருகங்கள் வாழும் காடென்றே சொல்லலாம். மந்திரி எப்போதும் பொறுமையுடனிருந்து, புத்தியையும், யுக்தியையும் சமயமறிந்து உபயோகப்படுத்த வேண்டும். பொறுமையால் அநேக நன்மைகளுண்டு. நமக்கு ஏற்படும் கஷ்டங்கள் யாவும் நன்மைக்கே யல்லது துன்பத்திற் கல்லவென்று பொறுமையுடன் சகித்திருக்கவேண்டும். இதைக்கொண்டே,

"நல்ல பரமசிவன் நம்மை வருத்துவது
கொல்லவல்ல பொல்லாக் குணம்போக்க"

என்றார் அறிஞரொருவர். அதற்கொரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன்.

## உலகானுபவ மறிந்த துறவி

மைந்தா! பொதிகை மலைச்சாரலில் மிக்க பயங்கரமான காடொன்றுண்டு. அக்காட்டின் மத்தியில் ஒரு சிறு மலையும், அம் மலையின் அடிவாரத்தில் ஒரு குகையும் இருந்தன. அக்குகையில், முற்றுந் துறந்த முழுஞானி ஒருவர் கடவுளை வழிபட்டுக்கொண்டு வாழ்ந்திருந்தார்.

"நரைவரு மென்றெண்ணி நல்லறிவாளர்
குழவி யிடத்தே துறந்தார்"

என்னுங் கொள்கைப்படி, வினையினின்றும் விடுபடக்கருதிய அத்துறவி, இளமையிலிருந்தே இல்லறத்தை விட்டுத் தவஞ்



செய்யக் கருதி அங்கடைந்தார். தமது முதுமைப் பருவம் வரையில் அக்குகையிலே கடவுளடியில் கருத்தை ஊன்றி இருந்தார் அம்முனிவர் தங்கி யிருந்த இடம் மனிதர்களின் போக்கு வரவு அற்றது.

ஒருநாள், சில கோபாலர்கள் தாங்கள் மேய்த்துக் கொண்டிருந்த ஆடுகளில் சில ஆடுகள் காணாமற்போயின மையால், அவைகளைத் தேடிக்கொண்டு அத்துறவி இருக்கும் இடத்திற்கு வந்தார்கள். அவரைக் கண்டு மிக்க பக்தியுடன் அடிபணிந்து நின்றார்கள். அந்தப் பெரியார், தமது பாதங்களில் விழுந்து பணிந்தெழுந்து, கைகட்டி வாய் புதைத்து நின்ற இடையர்களுக்கு ஆசிகூறி, அவர்களை உட்காருவித்துத் தாமும் அவர்களுக்கு முன்பு உட்கார்ந்து, மிக்க அன்புடன் உலக க்ஷேமங்களை அவர்களிடம் வினவினார். அப்பொழுது அந்தக் கோபாலர்கள் முனிவரைப் பார்த்து, "ஐயா! உலக சுகங்களை நாங்கள் என்னென்று சொல்லுவோம்? உலகத்தில் நடைபெறும் கர்மங்கள் யாவும் கடவுளின் கட்டளைப்படி சம்பவிக்கின்றன வென்பது உண்மை. ஆயினும், நல்லோர் தீமையும், தீயோர் நன்மையும் அடைய நாங்கள் பார்க்கிறோம். இஃதென்ன காலக்கேடு? கடவுள் செயல் இப்படியும் உண்டோ? நல்லோர் நன்மையும், தீயோர் தீமையும் அடைவதல்லவா முறை? இதன் காரணத்தைத் தங்களைப்போன்ற பெரியாரைக் கேட்டுத் தெளிய வேண்டுமென்று நெடுநாட்களாக நாங்கள் எண்ணிக்கொண்டிருந்தோம். இன்று, கடவுளருளால் தங்களைக் காண நேர்ந்தது; நாங்களும் நல்ல பாக்கியம் செய்தவர்களானோம். நாங்கள் கொண்டுள்ள ஐயமும் ஒழிந்துவிடுமென்று எண்ணுகின்றோம்" என்று சொன்னார்கள்.

அந்தத் தவத்தினர், ஆயர்களின் சொற்களைக் கேட்டுச் சிறிது பொழுது பதில்சொல்ல ஒன்றுந் தோன்றாது

திகைத்து, இடையர்களைப் பார்த்து, நீங்கள் தெரிவித்தவண்ணமே உலகில் காரியங்கள் நடக்கின்றனவா? அப்படியாயின் அவற்றை நான் நன்கு ஆராய்ந்து கண்டறிந்து, உங்களுக்கு இன்னும் சில நாட்களுக்குள் பதில் தெரிவிக்கிறேன்" என்றார். ஆயர்களும் அத்துறவியை வணங்கி அவரிடம் விடைபெற்று, அவர்கள் நாடிவந்த காரியத்தை மேற்கொண்டு சென்றார்கள்.

துறவியோ உலக அனுபவமில்லாதவர். இளம்பருவத்திலேயே இல்லந்துறந்து கானகம் அடைந்தவ . இடையர்கள் தெரிவித்த விஷயம் அவருடைய மனத்தை வருத்த ஆரம்பித்தது. அவர் என் செய்வார்? சிறிதுநேரம் ஏக்கமுற்று உட்கார்ந்திருந்தார். மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு "உலகில் இப்படியும் நடக்குமோ!" என்று எண்ணினார். பிறகு, அவர் எழுந்து மெல்ல உலாவிக்கொண்டே ஆராய்ந்தார். "நல்லோர்க்குத் தீங்கு எவ்வாறு சம்பவிக்கும்" என்று தம்மைத் தாமே வினவினார். "நல்லோர்க்குத் தீங்கு சம்பவிப்பதை நானே கண்ணாரக்கண்டு, அதன் காரணத்தை ஆராய்ந்து அறியவேண்டும்" என்று நினைத்தார். அக்காட்டுக் கருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, தமது கருத்தை முடித்துக்கொள்ள எண்ணித் தாமிருந்த குகையினின்றும் வெளியே புறப்பட்டார்.

உலகம் தோன்றாமல் ஞானநிலையிலேயே நின்ற இவர், உலகத்தாருடன் கூடியிருந்து தமது சந்தேகத்தை ஒழிக்க வேண்டுமென்று கருதினார். முற்றுந் தெளிந்த துறவிகள் தேக பிராரத்துவப்படிக்குப் பற்பல தொழில்களைப் புரிவார். அவர் நிலை ஞானியரல்லாதார் காண்டல் அரிது.

"தெளிந்ததுறவி யிகத்தனிலே தேகபிராரத்துவப்படிக்கு
ஒழிந்தேசிந்தை தெளிவுற்று ஒன்றே சிவமென்றிருப்பார்கள்"



என்பதற்கிணங்க, அவர் புறப்பட்டது காலைவேளை. அவர் அதிகதூரம் நடந்து, அக்காட்டை அரிதிற் கடந்து ஒருசாலையை அடைந்தார். அச்சாலையினூடே அவர் சிறிதுதூரம் நடந்தார். சூரியனது வெப்பத்தினாலும், வழி நடந்த இளைப்பினாலும், அவர் மிகக்களைப்படைந்து, அச்சாலைக் கருகிலிருந்த ஓர் ஆலவிருக்ஷத்தினடியில் தங்கிச் சிறிதுநேரம் படுத்திருந்தார். சற்றுக்களை மாறினவுடன் எழுந்து, அச்சாலைவழியே சிறிதுதூரம் சென்றார். அப்போது, அழகிய வாலிபனொருவன் அச்சாலைக்குக் குறுக்கே போகும் ஒரு பாதைவழியே வந்து அம் முனிவரைச் சந்தித்தான். அவன், முனிவரைக் கண்டதும், அவர் சமீபத்திற் சென்று வணங்கி "ஐயா! நான் கடவுள் செயலால் தங்களை இன்று கண்டேன். இது என் முன்னோர்கள் செய்த தவப்பயனே போலும். நான் தங்களைப்போன்ற பெரியாரை யடுத்து, நன்னெறிகளைக் கற்று, நல்லொழுக்கத்தில் வாழ்நாளைக் கழிக்கக் கருதியிருந்தேன். அதற்கு இன்றுதான் கடவுள் அருள்செய்தார்போலும். நான் தங்களுடன் சில நாட்களிருந்து, தங்களுக்குப் பணிவிடைசெய்யக் கருதுகின்றேன். தங்கள் திருவுளம் எத்தகைத்தோ!" என்று பணிவுடன் கூறினான்.

அம்முனிவர் அதுகேட்டு, அவ்வாலிபனுடைய முகத்தை நன்றாகப் பார்த்து, "இவன் அறிவும், நல்லொழுக்கமும் உடையவனாகக் காணப்படுகிறான். இவனை உடன் வைத்துக் கொள்வதால் குற்றமில்லை" என்று நினைத்து, அவ்வாலிபனுடைய எண்ணத்திற்கு உடன்பட்டார். அவர்களிருவரும் பல விஷயங்களைப்பற்றி வார்த்தையாடிக்கொண்டே அச் சாலைவழியே போய்க்கொண்டிருந்தனர்.

முனிவரும், வாலிபனும் அன்று பகற்பொழுதெல்லாம் நடந்து சூரியன் மறையும் வேளையில் அவர்கள் வந்துகொண்

டிருந்த சாலைக்கு அருகிலிருந்த ஒரு கிராமத்திற்புகுந்து, அங்கிருந்த ஓர் அழகிய அரண்மனையின் சமீபம் சென்றார்கள். அந்த அரண்மனையின் வாயிற்படியிலிருந்த வேலைக்காரனொருவன் அவர்களைக்கண்டு ஓடிவந்து வணங்கி, "சுவாமிகாள்! நீங்கள் அரண்மனைக்குள்ளே எழுந்தருளலாம். என்னுடைய எஜமானர் உங்களிருவரையும் அழைக்கின்றார்" என்றுசொன்னான். அவ்விருவரும் அவன் தெரிவித்தவண்ணம் அரண்மனைக்குள் நுழைந்தனர். அப்பொழுது அந்த அரண்மனைக்குச் சொந்தக்காரனான தனிகன், விருந்தினர் இருவரையும் அன்புடன் வரவேற்று, உபசரித்து, வெள்ளியினாலாகிய ஆசனங்களில் உட்காருவித்துப் பொற்பாத்திரங்களில் இனிய பானம் கொண்டுவந்து அவர்களுக்குக் கொடுத்தான்.

பிறகு, அத் தனவந்தன், தன் மேம்பாட்டை அவ்விருவரும் அரியும் வண்ணம் அவர்களைத் தன்னுடனழைத்துச்சென்று, தனக்குள்ள எல்லாச் சொத்துக்களையும் அவர்களுக்குக் காண்பித்தான். முனிவரும், வாலிபனும் அச் சொத்துக்களைப் பார்த்து இறும்பூதுற்றனர். அப்பணக்காரன் அன்றிரவு அவ்விருந்தினர்க்கு மிக்க ஆடம்பரத்துடன் அறுசுவையுண்டியை யளித்தான்.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு"

என்றபடி, அவ்விருந்தினர் அவனைப் புகழ்ந்து, களிப்புடன் உண்டு உறங்கினர்.

மறுநாட் காலையில் முனிவரும், வாலிபனும் தூக்கத்தினின்றும் எழுந்து, வேறொரு கிராமஞ்செல்ல ஆயத்தப்பட்டனர். அதை யறிந்த பணக்காரன் அவ்விருவருக்கும் அன்புடன் உணவளித்தான். உண்டபின் அவ்விருவரும் பணக்காரனிடம் விடை பெற்றுக் கொண்டனர். அப்போது,



முனிவருடன் இருந்த வாலிபன் அவ்வரண்மனையி லிருந்த பொற்பாத்திர மொன்றைத் திருடி மறைத்து வைத்துக் கொண்டு முனிவருடன் வழிநடக்கலானான்.

அவர்கள் அந்தக் கிராமத்தைக் கடந்தவுடன், வாலிபன், தான் களவாடிவந்த பொற் பாத்திரத்தை முனிவருக்குக் காண்பித்தான். அதைக் கண்டதும் முனிவர் திடுக்கிட்டு, அதிக கோபத்துடன், "ஐயோ ! இப்படியும் செய்வாருண்டோ? இவன் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தானே. இவன் பார்வைக்கு நல்லவனாகவே காணப்படுகிறான். இவனுடைய செயலோ கெட்டதா யிருக்கிறது.

"கருப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கருப்பூர மாமோ கடலுப்பு"

என்பதுபோல, உருவத்தால் நல்லவன்போல் காணப்படினும் செய்கையால் கெட்டவனா யிருக்கின்றான். உப்பிட்டவரை உள்ளவும் நினை என்ற ஆன்றோர் வாக்கை இவன் அறியான் போலும். இன்னும் இவனுடைய குணங்களைப் பரிசோதிப்போம்" என்று மனத்திற் கொண்டு அவ்வாலிபனுடன் பேசாது சென்றார்.

அன்று பகற் பொழுதெல்லாம் அவ்விருவரும் வழி நடந்து, மாலைப்பொழுது குறுகியும் எங்கும் தங்காமல் சென்றார்கள். அப்போது திடீரென்று பெருங்காற்று அடிக்கலாயிற்று. மழையும் பெய்ய ஆரம்பித்தது. முனிவரும் வாலிபனும் திகைக்கலாயினர். செய்வதொன்றும் தோன்றாது சுற்று முற்றும் பார்த்தார்கள். சிறிது தூரத்தில் விளக்கு வெளிச்சம் அவர்களுக்குக் காணப்பட்டது. அவ்விருவரும் அதிக பரபரப்புடன் நடந்து, அவ்வெளிச்சந் தோன்றிய இடத்திற்குப் போனார்கள். அங்கே ஒரு வீடு இருந்தது. ஆனால், அவ்வீட்டின் கதவு சாத்தப்பட்டிருந்தது. யாரே

னும் அங்கு வந்து அக்கதவைத் திறக்கக்கூடுமென்று அவர்கள் அவ்வாயிற்படியில் நெடுநேரம் காத்திருந்தனர். ஒருவரும் வந்து கதவைத் திறக்கவில்லை. ஆதலால் முனிவர் மெதுவாக அவ்வீட்டின் கதவைப் புடைத்தார். அந்த ஓசையைக் கேட்டு, அந்த வீட்டுக்குரியவன் உள்ளிருந்து வந்து கதவைத் திறந்தான். வெளியில் நின்றிருந்த இருவரையும் கண்டவுடன், அடிவயிற்றில் இடி விழுந்தாற்போல ஆயினன் அவன். அவன் முனிவருக்குப் பயந்து, அவ்விருவரையும் உள்ளே அழைத்துக்கொண்டுபோய், அருவருப்புடன் உருசியற்ற உணவை அவர்களுக்குச் சிறிது இட்டனன். பசிப்பிணியால் வருந்திய அப்பிரயாணிகளிருவரும் வெறுப்புடன் அச்சோற்றையுண்டு, அவ்வீட்டின் தாழ்வாரத்தில் சயனித்து அன்றிரவைக் கழித்தனர்.

மறுநாள் பொழுது புலருவதற்கு முன் அவ்வீட்டுக்குடையவன் எழுந்து "விருந்தினராக வந்த இவ்விருவரும் இன்றும் இங்குத் தங்கிவிடுவார்களாகில் இவர்களுக்கு அன்னம் அளிக்க வேண்டுமே" என்றெண்ணி அவர்கள் படுத்திருக்குமிடம் வந்து, அவர்களைத் தட்டி எழுப்பி, "ஐயா! நீங்கள் வெகுதூரம் போகவேண்டியவர்கள்போல் காணப்படுகிறீர்கள். சூரியன் உதிக்கும் வேளையாயிற்று. இந்தக் குளிர்ந்த காலைவேளையில் வழிநடந்தால் கஷ்டந்தோன்றாது. வெயில் அதிகமாவதற்குள் வெகுதூரம் நடக்கலாம்" என்று சொல்லி வீட்டிற்குள் போய்விட்டான்.

அவ்வீட்டுக்குடையவன் ஈயாத லோபி என்பதையுணர்ந்த அப்பிரயாணிகள் அவ்விடத்தினின்றும் எழுந்து வீட்டைவிட்டு வெளியே செல்வாராயினர். அப்போது முனிவருடனிருந்த வாலிபன், தான் முன்னாள் இரவில் தங்கிய தனவந்தன் வீட்டிலிருந்து களவாடி வந்த பொற்பாத்தி



ரத்தை இரண்டாம் நாள் தங்கியிருந்த லோபியின் வீட்டில் முனிவர் காணும்படி வைத்துவிட்டு முனிவருடன் புறப்பட்டான்.

அதைக்கண்ட முனிவர், மிக்கவியப்படைந்து, "அந்தோ! இவ்வாலிபனுக்குப் பித்தம் பிடித்ததோ! அல்லது இவன் அறிவை இழந்தனனோ? இவன் அடாத காரியங்களுக்கு அதிகாரியாக இருக்கின்றானே! இன்னும் இவனுடைய காரியங்களைக் கவனித்தறிவோம்" என்று எண்ணி வழி நடக்கலானார். வாலிபனும் முனிவரைப் பின்பற்றி நடந்தான்.

அன்று பகற்பொழுது முழுதும் அவ்விருவரும் வழி நடந்து, மாலைப்பொழுது குறுகியதும் ஒரு சிறு நகரத்தையடைந்தார்கள். அந்நகரத்திலுள்ள பல வீதிகளையும் அவர்கள் கடந்து ஒரு வேளாளன் வீட்டுத் தெருத்திண்ணையில் உட்கார்ந்தார்கள். அவ்வீட்டுக் குடையவனோ மிகவும் நல்லவன். இரப்போர்க்கு இல்லை என்னாது பொருள் கொடுப்பவன். பிறர் மெச்சும்படி தருமம் செய்பவன் அல்லன். தன் வீட்டை நாடிவந்த விருந்தினர் இருவரையும் அவ்வேளாளன் கண்டு வணங்கி, வீட்டுக்குள் அழைத்துச் சென்று அவர்க்கு அன்புடன் அன்னம் அளித்தான். அன்றிரவு அவர்கள் படுக்கத்தக்க இடமும், படுக்கையும் தந்தான்.

முனிவருடன் சயனித்திருந்த வாலிபன் பொழுது புலருவதற்குச் சிறிது முன்னர் எழுந்து, அவ்வீட்டுக்காரனது ஒரே குழந்தை படுத்திருந்த இடத்திற்குச் சென்று அக்குழந்தையை எடுத்து முனிவர் காணும்படி அக்குழந்தையின் கழுத்தை நெரித்துக்கொன்றான். பிறகு, மரணமடைந்த அக்குழந்தையை முன்னிருந்த இடத்திலேயே கிடத்தி வந்து முனிவர் பக்கத்தில் உட்கார்ந்தான். குழந்தை கொலையுண்ட சங்கதி அவ்வீட்டுக்காரனுக்குத் தெரியாது.

வாலிபனுடைய இக்கொடிய கொலைத்தொழிலைக் கண்ட முனிவர் பெரிதும் பயந்தார். "ஐயோ! இக்கொலைக்காரப் பாவி எங்கிருந்து வந்தான்? இவனை நான் என்னுடன் கூட்டிக்கொண்டு வந்தது என்னுடைய தப்பிதம். இவன் கொடியன் என்று நான் உணராது போனேனே! பழிபாவங்களுக்குச் சிறிதும் அஞ்சாத நெஞ்சம்படைத்த துஷ்டனாக இருக்கிறான் இவன். அந்தோ! இவ்வீட்டுக் குடையவன் பெற்ற ஒரே பிள்ளையைக் கொன்றானே. இதை வேளாளன் அறிந்தால் என்னையும் இப்பாதகனையும் இலேசில் விடுவானோ? சித்திரவதை செய்வானே" என்று நினைத்துப் பதறினார் முனிவர்.

வேளாளன், காலையில் படுக்கையினின்று எழுந்து, பிரயாணிகள் படுத்திருக்கும் இடத்தை யடைந்தான். அப்பொழுது முனிவர் வேறு கிராமம் செல்லவேண்டி அவ்வேளாளனிடம் விடை வேண்டினர். வேளாளன் முனிவரைப் பார்த்து "பெரியோர்களே! நீங்கள் இத்தெருவைக் கடந்ததும் ஓர் ஆற்றைக் கடக்கவேண்டும். அந்த ஆற்றின் மேலுள்ள பாலத்தின் வழியே சென்று அக்கரையை யடைந்தால் ஆங்குப் பற்பல கிராமங்களுக்குச் செல்லும் பல வழிகள் பிரிகின்றன. நீங்கள் விரும்பிய ஊருக்குப் போகவேண்டிய வழியைக் காட்டுவதற்கு எனது வேலைக்காரனொருவனை உங்களுடன் அனுப்புகிறேன்" என்று சொல்லி அவர்களுக்கு விடைகொடுத்து, ஒரு வேலைக்காரச் சிறுவனையும் அவர்களுடன் அனுப்பினான். அம்மூவரும் அவ்வீட்டை விட்டு வெளிப்போந்தனர்.

பிறகு, வேளாளன் வீட்டிற்குள் குழந்தை கிடக்கும் இடத்தையடைந்து, அதை மிக்க அன்புடன் தனது இரண்டு கரங்களாலும் வாரி எடுத்தான். குழந்தை பேச்சு மூச்சின்



றிக் கழுத்தைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தது. அவன் அதைக் கண்டு பயந்து நிதானித்துப் பார்த்தான். அது இறந்து போயிருந்தது. அதைக்கண்டு அவன் வயிற்றிலும் வாயிலுமடித்துக் கொண்டு கதறினான். அவனுடைய மனைவியும், சுற்றத்தாரும் குழந்தை இறந்து கிடப்பதைப் பார்த்து வாய் விட்டுக் கதறி யழுதார்கள். அன்று நடுப்பகல் வரையில் குழந்தையின் பிரிவை ஆற்றாது யாவரும் அழுது, பின்னர் அக்குழந்தையை அடக்கம் செய்தார்கள்.

இங்ஙனமிருக்க, முனிவர் முதலிய மூவரும் ஆற்றைக் கடக்க வேண்டி, பாலத்தின் மீது போய்க் கொண்டிருக்கையில் வாலிபன், வழி காட்ட வந்த வேலைக்காரச் சிறுவனுடைய காலைத் தனது காலால் தட்டினான். வேலைக்காரன் உடனே இடறிப் பாலத்தின் மீது குப்புற்று விழுந்தான். வாலிபன் அத்துடன் விடாமல் அவ்வேலைக்காரனைப் புரட்டி ஆற்றுப் பிரவாகத்தில் தள்ளிவிட்டுக் கைகொட்டி நகைத்துக்கொண்டே முனிவரைப் பார்த்தான்.

இந்தச் செயலைக் கண்ட முனிவருக்கு அடங்காக் கோபம் உண்டாயிற்று. அவருடைய இரு விழிகளும் கோவைக் கனியைப்போலச் சிவந்தன. அவருடைய உதடுகள் படபடத்துத் துடித்தன. அடாத காரியஞ் செய்த அந்த வாலிபனைக் கன்னத்தில் ஓங்கி அறையக் கையை உயரவெடுத்தார். ஆனால், அடிக்க மனமின்றிக் கையைக் கீழே தொங்கவிட்டார். அவனை இழித்துரைக்கலாமென்று எண்ணினார். அவருக்கு நாவெழவில்லை; ஒன்றுந் தோன்றாமல் நின்றார்.

அப்பொழுது வாலிபன், தான் இதுவரையிலு மிருந்த மானிட உருவைத் துறந்து, சோதிவடிவினையுடைய கடவுளாக விளங்கினான். அவ்வற்புதத் தோற்றத்தைக்கண்ட

அந்தத்தவசி திகைத்துநின்றார். கற்பதுமையைப்போல் அசைவற்று நின்றார். அப்படி, முனிவருடைய சந்தேகத்தை நீக்க வேண்டி மானிடவடிவந்தாங்கி அம்முனிவருடன் பிரயாணஞ் சென்று அவருக்கு அற்புதங்களைக் காட்டித் தம்மால் நிகழ்ந்த செயல்களைக் கண்டு அம்முனிவர் பயந்தகாலத்துச் சோதி வடிவத்துடன் நின்ற கடவுள் அந்த அறவோரை நோக்கி, "ஐம்புலன்களை வென்ற தொண்டனே! நீ பயப்பட வேண்டாம். உன்னுடைய வழிபடு கடவுளே நான். உன்னுடைய ஐயத்தை நீக்க நான் ஒரு வாலிப வடிவந்தாங்கி உன்னைப் பின்பற்றி வந்தேன். உன்னுடன் வந்தகாலத்தில் நான் செய்த செயல்களைக் காட்டிலும் அரிய செயலை நீ எப்பொழுதாவது கண்டதுண்டா? நான் என் அவ்வாறு செய்தேன் என்பதன் காரணத்தை நீ அறிவாயாகில், என்னுடைய செயல்களெல்லாம் நியாயமானவை என்று தெளிவாய். நான் செய்த காரியங்களின் இரகசியங்களை இப்பொழுது உனக்குத் தெரிவிக்கிறேன். அவைகளைக் கேட்ட பிறகு உன் மனத்தினிடம் தோன்றிய ஐயம் நீங்கும். 'மக்களுடைய நன்மைக்காகவே கடவுள் எல்லாக் காரியங்களையும் செய்கிறார்' என்னும் உண்மையை நீ அறிவாய்.

பற்றற்றவனே! நாம் இருவரும் புறப்பட்டுவந்த முதல் நாளிரவு ஓர் அழகிய அரண்மனைக்குச் சென்றதை நீ மறந்திருக்கமாட்டாய். அந்த அரண்மனைக்குரிய பணக்காரன், தான் அதிக பெருமை அடையவேண்டுமென்று உழைப்பவன். தன்னைப் பிறர் மெச்சிக்கொள்ள வேண்டுமென்னும் விருப்பமுடையவன். அதனால், அவன் தன்னிடம் வருபவர்க்குச் சகல ஆடம்பரத்துடன் உணவளிக்கிறான். அவன் உண்மையில் தருமம் செய்யவேண்டுமென்னும் கருத்துடையவன் அல்ல. அப்படி இருந்தால் பொன்னால் பாத்திரங்களும், வெள்ளியினால் ஆசனங்களும் செய்துவைத்திருக்க



மாட்டான். அவன் உள்ளன்புடன் மண் பாத்திரங்களில் தாகவிடாய்க்குத் தண்ணீர் கொடுத்தால் அவனுக்கு நற் பயன் கிடைக்கமாட்டாதா?

*"தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை"

என்றபடி, அப் பணக்காரனுடைய செருக்கினால் அவனுடைய செல்வம் விரைவில் அழிந்துபோம். அதற்காகவே நான் அவனுடைய பொற்பாத்திர மொன்றைக் கவர்ந்து வந்தேன். அதனால் அவனுக்கு அறிவு உண்டாயிற்று. "என்னிடத்தில் உள்ள பொற்பாத்திரங்களை இங்குத் தங்கி இருக்க வரும் பிரயாணிகள், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாத்திரமாகத் திருடிச் சென்றால் முடிவில் என்னுடைய பொருளுக்கு அழிவு நேரிடுமே" என்று அப்பணக்காரன் எண்ணி உடனே அவனிடமிருந்த பொன் வெள்ளிப் பொருள்களை யெல்லாம் பணத்துக்கு மாற்றிக்கொண்டான். பொற்பாத்திரங்களுக்குப் பதிலாய் மண்ணின் கலங்களையே இப்போது அவ்விடத்தில் வைத்திருக்கின்றான். அவனுக்கு அறிவு வரச் செய்த என் செயலில் குற்றம் யாதேனு முளதோ?

துறவியே! இரண்டாம் நாள் நாம் தங்கிய வீட்டுக்குரியவன் உலுத்தன். 'காசு' என்றால் காதவழி தூரம் ஓடி மறைவான்; பற்றுக்கையுடன் காக்கையையும் ஓட்டமாட்டான்.

* ஒருவன் தன்னைத்தானே நன்கு மதித்து, செருக்குக்கொள்ளுதலும், தணிதலில்லாமல் பயனின்றிக் கோபத்தைப் பெருகச் செய்தலும், முன்னுள்ள தான் கண்ட பல பொருள்களையும் வெளவக் கருதுகின்ற சிறுமைத் தன்மையும் ஆகிய இந்த மூன்றும் அவனுடைய செல்வத்தை அழிக்கவல்ல ஆயுதங்களாம்.

அவன் வீட்டில், நான் முதல்நாள் திருடிவந்த பொற்பாத்திரத்தை வைத்தது அவனுக்குத் தருமகுணத்தை உண்டாக்க வேண்டியே. "நான் இருவர்க்கு அன்னம் அளித்ததால் விலையுயர்ந்த பொற்பாத்திர மொன்று எனக்குக் கிடைத்தது. இனிப் பலர்க்கும் அன்னமிட்டால் பல பொற்பாத்திரங்கள் கிடைக்கும். அவற்றால் அதிக செல்வம் பெறலாம்" என்று அவன் எண்ணி, அவ்வழியே செல்கின்ற இரப்போர் அனைவரையும் அழைத்து அன்ன மிடுகின்றான். இச்செயலிலும் நான் குற்றஞ் செய்யவில்லை.

மூன்றாம் நாள் இரவில் நாம் கண்ட வேளாளன் மிக்க நல்லவன். அவன் தருமகுணமும் பரோபகார சிந்தையும் வாய்ந்தவன். அவனுக்கு நெடுநாட்களாகப் புத்திரப்பேறு கிடையாமையால் ஏராளமாய்த் தருமம் செய்துகொண்டிருந்தான். பிறகு, ஒரு ஆண்பிள்ளை அவனுக்குப் பிறக்கவே அவனுடைய தருமம் நாளுக்குநாள் குறைவதாயிற்று. அப்பிள்ளைக்குப் பொருள் சேகரிக்க எண்ணித் தருமத்தைக் குறைத்துப் பொருள் சேர்க்கலானான். அவனுடைய தருமத்தில் இடையூறு உண்டாகாம லிருக்க வேண்டுமென்றும்,

"வீழ்நாள் படாமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்"

என்றபடி, அவன் நல்ல பயன் அடையவேண்டுமென்றும் கருதி அவனுடைய பிள்ளையை நான் கொன்றேன். அப்பிள்ளை இறந்ததுமுதல் அவன் முன்போல் அறஞ்செய்வதில் தனது கருத்தைச் செலுத்தலானான்.

அன்ப! கடைசியாக நான் செய்த செயல் அடாததும் அக்கிரமமானதுமென்று நீ நினைக்கலாம். அதன் இரகசியத்தை நீ அறிந்தபிறகு உனக்கு மனத்தெளிவு உண்டா



கும். பிறகு நான் செய்தது நல்லதென்று எண்ணுவாய். சென்ற இரவில் நமக்கு உள்ளன்புடன் அன்னம் அளித்த வேளாளன் மிகவும் நல்லவன். அவன் அறநெறியே பெரு நெறியாகக்கொண்டு ஒழுகுபவன். நமக்கு வழிகாட்டவந்த வேலைக்காரனோ மிகவும் கொடியவன். அவன் இன்றிரவு அந்த வேளாளனது வீட்டில் கன்னம் வைத்து அந்தத் தருமவானுடைய பொருளைக் களவாடிச் செல்லத் தீர்மானித் திருந்தான். அதற்கு வேண்டிய ஏற்பாடுக ளனைத்தும் அவன் செய்து முடித்தும் இருக்கின்றான். அந்த வேலைக் காரன் உயிருடன் இருந்திருப்பானாகில் அவன் செய்யத் தீர் மானித்த காரியம் கட்டாயம் முடிவுபெறும். நற்குண முடைய வேளாளனது பொருளுக்கு அழிவு நேராவண் ணம் நான் அந்த வேலைக்காரனை ஆற்றில் தள்ளிக் கொன் றேன்.

உண்மைத் துறவியே! நான் செய்யும் காரியங்களெல் லாம் இவ்வாறே இருப்பனவாகும். என்னால் செய்யப்பட்டு வரும் ஒவ்வொரு காரியத்தின் இரகசியத்தையும் அறிவில் உயர்ந்த எனது அடியவர்கள் நன்கு ஆராய்ந்து பார்த்து என்னைப் புகழ்வார்கள். இப்போது உன் ஐயம் ஒழிந்ததால் இனி நீ முன்னிருந்த இடம் சென்று உன்னுடைய தவத் தொழிலைச் செய்துகொண்டிரு. இறுதிக்காலத்தில் என் னால் நற்கதி யடைவாய்" என்று கூறி மறைந்தார். அந்த மெய்த்தவத்தினரும் "கடவுளுடைய செயல்கள் யாவும் நன்மை யுடையனவே" என்று உணர்ந்து தம் இருப்பிடத் தைச் சேர்ந்தார்.

ஆதலால், மைந்தா! கடவுளின் அரிய செயல்களின் இரகசியங்களைப் பொறுமையுட னறிந்து சிறந்து விளங்க வேண்டும். சாந்தம் என்னும் ஆபரணத்தையே பூஷண மாக அணிந்திருக்கவேண்டும்" என்று பலநீதிகளை உரைத்து,

"மூர்த்தி தலந்தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்றபடி, தீர்த்தயாத்திரை செய்து நைமிசாரணியத்தை யடைந்தார்.

## குடும்பப் பற்று.

ஆத்மாராம் நைமிசாரணியத்தை யடைந்த பிறகு அவர் மனைவி துளசிதாசரையும், மமதாதேவியையும் அழைத்துக்கொண்டு இராஜபுரி என்னும் தன் ஊரை யடைந்தாள். துளசிதாசர், தம் தந்தை யுரைத்த நல்லுபதேசங்களை நாளாவர்த்தியில் மறந்தார். துஷ்டருடைய நேசத்தைக்கொண்டு அவர் தீய ஒழுக்கங்களைக் கைக்கொண்டார். அவர் மனைவியினிடத்தில் அதிக நேசம்பாராட்டி ஒரு நாளேனும் அவளைப் பிரிய மனமில்லா திருந்தனர்.

இப்படியிருக்க, டில்லி அரசனாகிய பாதுஷா துளசிதாசரைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி, அவரை யழைத்து வருமாறு ஏவலாளரை அவரிட மனுப்பினன். ஏவலாளர் இராஜபுரிக்குச் சென்று துளசிதாசரைக் கண்டு அரசனுடைய விருப்பத்தை அவரிடம் அறிவித்தார்கள். துளசிதாசர் மனைவியைவிட்டுச் செல்ல மனமில்லாதவராய் மன்னன்பாற் செல்ல மறுத்தனர். துளசிதாசருடைய தாய் அதுகேட்டு மைந்தனை விளித்து, "குழந்தாய்! அரசனுடைய ஆக்ஞைக்கும் மீறி நடக்கலாமா? உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டுமே. மாதம் ஒன்றுக்கு ஆயிரம் பொன் கொடுத்துக்கொண்டு வரும் மன்னன் அழைத்தால் நீ போகாமலிருக்கலாமோ?" என்று சொன்னாள். அவ்வாறு சொல்லியும், துளசிதாசர் மன்னனிடம் போக மறுத்தனர்.

இதை அறிந்த அக்பர் பாதுஷா, தானே நேரில் சென்று துளசி தாசரைப் பார்க்கவேண்டுமென்று, சதுரங்க சேனைகளுடன் பிரயாணப்பட்டான்.



அவன் புறப்பட்டுப்போய், இராஜபுரிக் கருகிலிருந்த ஒரு சோலையில் தங்கி, அவரை அழைத்து வரும்படி மந்திரி யொருவனைத் துளசி தாசரிடம் அனுப்பினான். அந்த மந்திரி விரைவில் துளசி தாசரிடம் சென்று "ஐயா! பாதுஷா உம்மைப் பார்க்க வந்திருக்கிறார். அவர் கட்டளையின்படி உம்மை அவரிடத்திற்கு அழைத்துப்போக நான் வந்தேன்" என்றான். துளசி தாசர் முன்போலவே மன்னனிடம் செல்ல மறுத்தனர். அதுகேட்டு மந்திரி மனம் வருந்தி அவரைத் தூஷித்ததுமன்றி அரசனிடம்போய் அவர்மேல் பல நிந்தைகளை எடுத்துச் சொன்னான்.

துளசி தாசருடைய மனவுறுதியைக் கேட்ட அரசன் ஆச்சரியமடைந்து, "சகல நற்குணங்களிலும் சிறந்த ஆத்மராமுக்கு இப்படிப்பட்ட குமாரனும் பிறக்கலாமோ? புலியின் வயிற்றில் பிறந்த குட்டி எவ்வகையிலும் பூனையாகுமா? பண்ணிய பயிரில் புண்ணியந் தெரியும் என்ற ஆன்றோர் வாக்கு மாறுபடுமோ? தந்தையைவிட அவர் கல்வியில் சிறந்தவராதலின் நானே நேரில்வந்து அவரை அழைக்கவில்லை என்று அவ்வாறு மறுத்திருக்கலாம்" என்று நினைத்து, துளசி தாசருடைய வீட்டுக்கு வந்து, அவரைப் பார்த்து, "ஐயா! உமது தந்தையினிடம் நான் எவ்வளவோ அன்பாய் இருந்தேன் என்பதை நீர் அறிவீர்; உம்மிடத்திலும் நான் விசுவாசத்தை மறந்தவனல்ல. என்னால் ஏதாகிலும் உமக்குக் குறை நேரிட்டிருக்குமோ? நான் உம்மைப் பார்க்க விரும்பி அழைக்கும்போது நீர் மறுத்துரைப்பதேன்?" என்றார்.

பாதுஷாவைக் கண்டவுடன் துளசி தாசர் திகைத்து, "இனி அரசன் என்னைத் தன் பட்டினத்திற்கு அழைத்துக்

கொண்டு போய்விடுவான். நான் என் மனைவியைப் பிரிந்திருக்கவேண்டி வரும்'' என்று நினைத்து, அரசனுக்குப் பதிலொன்றும் சொல்லாமல் ஓர் அறையிற் புகுந்துகொண்டனர். மமதாதேவி இதை அறிந்து, தனது மணாளனிருக்கும் அறைக்குச் சென்று, "இப்படியும் செய்வார் உண்டோ! நீர் அரசன் கட்டளையை மீறி நடக்கலாமா? அரசனைப் பகைத்தால் அபாயம் நேரிடுமே. நீர் இப்போது அரசனைக் கண்டு பேசிவராவிட்டால் இக்கணமே நான் என் பிராணனை விட்டு விடுவேன்'' என்றாள்.

அதுகேட்ட துளசி தாசர் திடுக்கிட்டு, ஏக்கத்துடன் பாதுஷாவின் அருகிற் சென்றார். பாதுஷா அவரைக்கண்டு ஆனந்தமடைந்து, தன் பட்டத்து யானையின்மேல் அவரை ஏற்றிக்கொண்டு டில்லியை நோக்கிப் பிரயாணப்பட்டார். துளசி தாசருடைய அன்னையின் கட்டளையால் மமதாதேவியும் தன் தாய்வீடு போய்ச் சேர்ந்தனள்.

பாதுஷாவுடன் யானையின்மேற் சென்ற துளசிதாசர், தம்முடைய இஷ்ட நண்பர்களையும், மனைவியையும் பிரிந்திருக்க ஆற்றாதவராய், மிகவும் உருகி, முகங்கருகி, பாதுஷாவிடம் விடைபெற்றுக் கொண்டு, கன்றை நாடிவரும் பசுவைப்போல விரைந்து வீட்டை அடைந்தார். மமதாதேவி தன் தாய் இல்லம் சேர்ந்ததைக் கேட்டு, அவர் மிகவும் வாட்டமடைந்தார். உடனே அவர் வீட்டைவிட்டுப் புறப்பட்டு, வலைக்குள் ளகப்பட்டு விடுபட்டோடும் கலைமானைப் போல தமது மனைவியிருக்கும் ஊரைநாடி ஓடத்தொடங்கினார். அவர் இல்லறத்தை வெறுக்கும் நாள் வந்ததென்று பகவான், காற்றும் மழையும் கலந்தடிக்கும்படி செய்தார். அதை அந்தப் பரம பாகவதர் சட்டைசெய்யாமல் காலடி புட்டத்திற் படும்படி ஓடத்தொடங்கினார். அவருடைய



முத்துமாலைகள் கழன்று விழவும், அங்கவஸ்திரம் சேற்றில் புரளவும், அகமும், நாவும் வறளவும் ஓடி அவர் 'யமுனு நதியை அடைந்தார்.

## இல்வாழ்க்கையைத் துறந்தது

யமுனை யாற்றில் வெள்ளம் பெருகி வழிவதாலும் காரிருள் கப்பி இருப்பதாலும், காற்று மழையும் கலந்தடிப்பதாலும், துளசிதாசர் சற்றுநேரம் மயங்கி நின்றார். எவ்விதத்திலும் அவர் அந்த ஆற்றைக் கடக்கத் துணிந்தார். அவர் உடனே ஆற்றில் விழுந்து அமிழ்ந்தெழுந்து நீந்தி ஆற்றைக் கடந்தார். அவ்விடமிருந்து அவர் அவ்விரவிலேயே தம் மனைவி இருக்கும் இல்லம் சேர்ந்தார். வீட்டின் வாயிற் கதவுகள் சாத்தப்பட்டிருந்ததால் அவர் உள்ளே புக வழி அறுது தவித்தார். காற்று மழையின் பேரொலியால் அவர் கூப்பிடும் ஓசை உள்ளிருப்பவர்களுக்குக் கேட்கவில்லை. அவ்வீட்டின் ஒரு பலகணிமாத்திரம் திறந்திருந்தது. அவர் அதைக் கண்டு அதன்வழியாக ஏறிச் செல்ல நினைத்தார். ஆனால், அது உயரமாயிருந்தபடியால் எப்படி ஏறுவதென்று அவர் யோசித்தார். அப்போது பகவான் ஒரு நீண்ட சர்ப்பமாகி அந்தச் சாளரத்துக்கும், துளசிதாசர் இருக்கும் இடத்திற்கும் இடையில் ஒரு கயிற்றைப்போலத் தொங்கினார். அதைச் சர்ப்பமென் றறியாத துளசிதாசர், கயிறு என்றே தீர்மானித்து அதைப் பிடித்துக்கொண்டு ஏறி உள்ளே குதித்தார். அவருடைய மேனி யாவும் சேறு நிறைந்து உடைகள் தாறுமாறாய்த் தொங்கிக்கொண்டிருந்ததால் அங்கு படுத்துக்கொண்டிருந்தவர்களெல்லாம் பயந்து, அவரைப் பேய் என மதித்து, மூலைக்கொருவராக ஓடத் தொடங்கினார்கள்.

மமதாதேவி மாத்திரம் அவரைத் தன் கணவனென வறிந்து அவரைப் பணிந்து, "நீர் உள்ளே எப்படி வந்தீர்?" என்று விசாரித்தாள். அவர், "சாளரத்தின் கீழ் தொங்கும் கயிற்றின் உதவியால் உள்ளே வந்தேன்" என்றார். மமதாதேவி சற்று யோசித்து, "சாளரத்தில் கயிறு இருக்கவேண்டிய காரணம் யாது? அதைப் பார்த்து வருவோம்" என்று சொல்லி, அவரை அழைத்துக்கொண்டு போய் அங்குப் பார்க்க, அது பருத்து நீண்ட ஒரு சர்ப்பமாயிருந்தது. மமதாதேவி அதைப்பார்த்துப்பயந்து, "ஆ! ஆ! என்னிடத்திலுள்ள அன்பின் பெருக்கால், நீர் மழையால் நனைந்து, காற்றால் அலைந்து, ஆற்றைக் கடந்து, கட்செவியின் மீதேறி வீட்டில் நுழைந்தீர். என்மேல்வைத்த இவ்வன்பினைக் கடவுளின்மேல் வைத்திருப்பீரானால் மேலான பேரின்பத்தை அடைவீர்" என்றாள்.

அதுகேட்ட துளசிதாசர், கருடனொலியைக் கேட்ட நாகம்போலவும், கேசரியின் கர்ச்சனையைக் கேட்ட குஞ்சரம் போலவும் கலங்கி, "ஆ! என்ன காரியஞ் செய்தேன். துஷ்டர்களுடைய நேசத்தால் என்னறிவைப் பாழாக்கினேன். தந்தையினுடைய உபதேசங்களையும் மறந்தேன். என் மனைவியாலல்லவோ இப்போது ஞானம் வரப்பெற்றேன்" என்று தமக்குள் சொல்லிக்கொண்டு, மமதாதேவிக்கு வந்தனம் புரிந்து "நீயே எனக்கு நன்னெறியைக் காட்டினையாதலால் நீ என் தாய்; இன்றுடன் உனக்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் நீங்கிற்று. நீயும் இனி இறைவனிடத்தில் அன்பு பூண்டு பக்தியைச் செலுத்திக்கொண்டிரு," என்று சொல்லி இல்லறத்தைத் துறந்து, நாட்டை விட்டுக் காட்டின் வழியே சென்றார்.

மமதாதேவி அவரை வழி மறித்து, "இப்படியும் செய்வாருண்டோ? நான் இனி என்ன செய்வேன். பதி



யைப் பிரிந்தும் நான் உயிர் வாழ்வ தெவ்வனம்? நான் உரைத்த கடுஞ் சொற்களால் நீர் இவ்வித வைராக்கியம் கொண்டீரோ?

*"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்"

என்ற முதுமறை மொழியின்படி இல்லறத்தை நீர் கைவிடுதல் நீதியோ?" என்று சொல்லி அவரைப் பணிந்து நின்றனள். துளசிதாசர் அவ்வுத்தமியின் வார்த்தையைச் சற்றும் கவனித்தவரல்லர். அவர் அம்மாதைப் பார்த்து, "நீ யினில் என்னை மறக்கின்றாய். நீ உன் தந்தை வீடு சேர்ந்து பகவானுடைய பாதங்களைச் சிந்தித்துக்கொண்டிரு. பதியே தெய்வமெனும் சதி நீயானால் என்னுடைய வார்த்தையைத் தள்ளாதே" என்று சொல்லி நடந்தார். மமதாதேவி பதியின் வாக்கை மீறச் சக்தியற்றவளாய் அவர் பாதங்களிற் பணிந்து, "அந்தோ! உம்மைப் பிரிந்தும் நான் உயிருடன் இருப்பேனோ?" என்று அலறிச் சோர்ந்து நிலத்திற் சாய்ந்தனள்.

### காசியை யடைந்தது

துளசிதாசர், பகவானைக் காணவேண்டுமென்ற எண்ணத்தால் அதிக விரைவாக அடவியின் வழியே சென்றார். தம் எதிரில் வருபவர்களைப் பார்த்து "நீங்கள் பகவானைப் பார்த்தீர்களா? அவரைச் சரணாகதி அடைந்தீர்களா? உங்களுடைய ஆசைகளையெல்லாம் ஒழித்தீர்களா? பகவான் எவ்வழியாகச் சென்றார்? அவருடைய காட்சி எனக்குக் கிடைக்குமோ?" என்று சொல்வாராயினர். அவர் பித்தனைப்போல

* ஒருவன் இல்வாழ்க்கையைத் தருமத்தின் வழியிலே செலுத்துவானாயின் அவன் மனைவியைத் துறந்து வனத்திலே சென்று பெறும் பயன் யாது?

இவ்வாறு பேசிக்கொண்டே வழியில் எங்கும் தங்காமல் காட்டில் பிரவேசித்தார். சூரியன் மறைவதற்குமுன் அவர் ஒருமலைமேல் பிரவேசித்து, ஆயாசத்தால் மெய்ம்மறந்து தூங்கி அன்றிரவை அங்கே கழித்தனர்.

மறுநாள் பகலவன் உதயங் கண்டு, துளசிதாசர், அம்மலையை இழிந்து, பலநாடுகளிலும், காடுகளிலும் சஞ்சரித்தார். "இன்றைக்குப் பகவானைக் காண்பேனோ? இன்றைக்கு என் குறை நீங்குமோ?" என்று இடைவிடாது சொல்லிக்கொண்டே திரிவாராயினார். தமது கண் முன் தோன்றும் ஆலயங்களிற் பிரவேசித்து, விக்கிரகங்களைத் தழுவிக்கொள்ளுவார்.

"பனிக் கடலில் பள்ளி கோளைப்
பழகவிட் டோடி வந்தேன்
மனக் கடலில் வாழ வல்ல
மாயம ணாள நம்பி!
தனிக் கடலே தனிச் சுடரே!
தனி யுலகே! என்றென்று
உனக் கிடமா யிருக்க என்னை
உனக்குரித் தாக்கினையே"

என்று அவ்விக்கிரகங்களைப் பார்த்து "இறைவா! உம்மைக் காணவேண்டிக் காடு மலைகளைக் கடந்து வந்தேன். நீர் திருவாய்மலர்ந்தருளி என்னை ஆட்கொள்ளாததேனோ? என்னிடத்தில் உமக்கென்ன பகை? கருணாநிதி! ஒரு வார்த்தையாகிலும் என்னுடன் பேசலாகாதா?" என்று துதிசெய்வார். பிறகு ஆலயங்களைவிட்டுப் பலவிடங்களுக்கும் பரிந்துசென்று "பகவான் என்னை எப்போது உரிமையாக்கிக் கொள்ளுவர்? நான் அவருடைய பாதமலர்களை எப்போது காண்பேன்? பவசாகரத்தை நான் எப்போது கடப்பேன்? எனது கவலை



எப்போது நீங்கும்?" என்று சொல்லிக்கொண்டே திரிந்தார். கடைசியில் அவருடைய கால்கள் சோர்ந்து, சரீரம் வாடி, முகம் கரிந்து காசி என்னும் பதியைச் சேர்ந்தார். அங்கே எழுந்தருளியுள்ள விஸ்வநாதக் கடவுளைப் பூசித்து அரிய சாதுக்களை நேசித்து, பரம பக்தராய் நாள்களைக் கழிக்கத் தொடங்கினார்.

துளசிதாசருடைய பிரிவாற்றாமையால் மிகவும் வருந்திய அவருடைய தாயாரும், மமதா தேவியும் அவரைப் பலவிடங்களிலும் தேடலானார்கள். கடைசியில் அவர், வாரணாசியில் இருப்பதாக வறிந்து அங்குப் போயினர். அங்கே துளசிதாசர் மேலாடையின்றி வெயிலென்றும், மழையென்றும் பாராமல் பகவானைக் கூப்பிட்ட வண்ணம் தெருக்களில் திரிந்துகொண்டிருந்தார். அவருடைய சரீரம் அதிகமாய் இளைத்துப்போ யிருந்தது. உன்மத்தனைப்போல அவர் யாரிடத்தும் பேசாதிருந்தனர். கிழிந்த உடையுடன் புழுதியில் கிடந்து பகவானைத் தியானிப்பவராயினார்.

அவருடைய தாயார் அவரைக் கண்டவுடன் கண்ணீர் விட்டழுது "மைந்தா! உனக்கு இவ்வித விதியும் வந்ததோ! உன் மனைவி சொன்ன கடுஞ்சொல்லால் மனம் நொந்ததோ. நீ வீட்டிலிருந்தபடியே பகவானை வழிபடலாகாதா? ஆகாரமின்றி உன் தேகத்தை மெலிவுறச் செய்தாயே. இஃது என்ன கொடுமை? உன்னுடைய நிலைமையை உன் தந்தை அறிந்தால் உயிர் தரிப்பாரா? உன்னைத் தனியேவிட்டு நான் போகமாட்டேன்" என்று சொல்லி அவருடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு ஓவெனக் கதறினாள். அதற்கு அந்தப் பாகவதோத்தமர், "அம்மா! பகவானை நீ பார்த்தாயா? எனக்கோ அவர் காணப்படவில்லை. அவரை எப்படியாகிலும் கண்டு தரிசித்து ஆனந்தமடைந்து, அவ

ருடைய அருளைப்பெற்று வருகின்றேன்" என்று சொல்லி, மறுபடியும் தம்மை மறந்து பகவானைத் துதிக்கலானார்.

மமதாதேவியும் அவருடைய பாதங்களில் பணிந்து, "என் உயிர்த்துணையே! நான்செய்த குற்றத்தை மன்னித்து வீட்டுக்கு வாரும். அந்தோ! உம்முடைய தேகம் வாடலாயிற்றே. நீர் புழுதியிலும் சயனிக்கலாமோ? இவ்விதி வந்த காரணத்தை நான் அறியேன். உமக்குள்ள அபிமானம் எவ்வாறு நீங்கிற்று? என்னை நீர் இவ்விதம் சோதிப்பது தருமமோ?" என்று கல்லும் உருகக் கரைந் தழுதாள். அதற்கந்த அரிதாசர், "மமதாதேவி! உன்னுடைய உபதேசத்தால் நான் நல்லறிவைப் பெற்று இல்லம் துறந்தேன். ஆனால், பகவானுடைய தரிசனத்தை இன்னும் காணப்பெற்றிலேன். அவரைக் காணும் பாக்கியம் எனக்கு எப்போது கிடைக்குமென்பதை நீ அறிவிக்கமாட்டாயா? இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்காகிலும் நான் அவரைக் காண்பேன்" என்று மறுபடியும் தம்மை மறந்து பகவானுடைய தியானத்தி லிருந்தார்.

அவருடைய மன உறுதி மாற்ற முடியாததா யிருந்தது. அதைக் கண்ட அவர் தாயும், மமதாதேவியும் அதிகமாய்த் துக்கித்தார்கள். அவர்கள் இவ்விஷயத்தில் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஆலோசித்தார்கள். கடைசியில் மமதாதேவி வாரணாசியில் ஒரு மடம் ஏற்படுத்தி துளசிதாசருக்கு அன்னமும் ஆடையும் குறைவறநல்கி, அவரைப் பாதுகாத்து வரவும், துளசிதாசருடைய தாயார் நைமிசாரணியம் சென்று தன் கணவனை அழைத்து வரவும் தீர்மானஞ் செய்துகொண்டனர். அத் தீர்மானத்தின்படியே அவ்விருவரும் செய்யத் தொடங்கினர்.



## ஆத்மராம் ஆவியை விட்டது.

நைமிசாரணியத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த ஆத்மராம், தம்முடைய மனைவியைக் கண்டு, "நீ இங்கு எப்படி வந்தாய்? துளசிதாசனைப் பிரிந்து நீ தனியாய் வந்த காரணம் என்ன? உனக்கு என்ன இடையூறு சம்பவித்தது? நீ கலங்கும் காரணம் யாது?" என்றார். அதற்கந்த உத்தமி, துளசிதாசருடைய வரலாற்றை ஆதியோடந்தமாகப் புகன்று அவர் பாதங்களில் விழுந்து பணிந்தாள். மனைவி சொன்னதைக் கேட்ட ஆத்மராம் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினார். "ஆ! இன்றல்லவோ நான் புனிதனானேன்.

* "மகன் றந்தைக் காற்று முதவி யிவன் றந்தை
யென் னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்றபடி, எனக்குச் செய்யவேண்டிய கடமையை என் குமாரன் செய்து முடித்தான். பகவானுடைய அருளைப் பெற அவன் திரிகின்றான் என்னும் சொல் என் செவிக்கு இன்பம் விளைவித்தது. என் கண்களும் அவனைக்காணப் பெற்று ஆனந்த மடையும்" என்று சொல்லி ஆரணியத்தைக் கடந்து வாரணாசியை அடைந்தார். அவர், துளசி தாசரைக் கண்டு ஆனந்தங்கொண்டு அவரை மார்புடன் சேர்த்து அணைத்துக்கொண்டார். "அப்பா! நீ விஷய போகங்களை வெறுத்தாயோ! உலக ஆசையை ஒழித்தாயோ? பரமனைக் காண அலைகிறாயோ? இனி நீ நாராயணமூர்த்தியைக் காண்பாய். உன்னை இந்த ஸ்திதியில் கண்ட எனக்கு இவ்வுலகில் வேறு என்ன தேவை? இப்போதல்லவோ நான் மோட்ச

---

* தன்னைக் கல்வியுடையவனாக்கிய தகப்பனுக்குப் புத்திரன் செய்யும் எதிர் நன்றியானது, தன்னறிவையும் ஒழுக்கத்தையும் கண்டவர், இவனது தகப்பன் இவனைப் பெறுதற்கு என்ன தவத்தைச் செய்தானோ என்கிற சொல்லை யுண்டாக்குதலாம்.

மென்னும் உன்னத பதவியை அடைந்தேன். உன்னைத் தழுவிக்கொண்டே நான் என் ஆவியை விடுவதே நன்மை. இனி ஆக்கையோடு இருக்க நான் பிரியப்படவில்லை. பந்த பாசங்கள் என்னை விட்டு ஒழிந்தன உன்னுடைய கைகளால் என்னைக் கங்கையில் எறிந்து விடு" என்று சொல்லிக் கொண்டே ஆவியை விட்டார்.

அவருடைய ஆவியானது குளிர்ந்த சந்திரனைப்போலப் பிரகாசித்து ஆகாயத்தில் மறைந்துவிட்டது. அதைக் கண்டதும் அவர்மனைவி அடங்காவியசனத்தினால் அங்கம்சோர்ந்து "ஆ! இஃது என்னமாயம்! பிள்ளை வரத்துக்குப்போய்ப் புருஷனைப் பறி கொடுத்ததைப்போல ஆயிற்றே என் காரியம்" என்று பதைத்து மெய்ம்மறந்து மூர்ச்சை யடைந்தாள். துளசிதாசர், தந்தை உயிர் விட்டதைக் கண்டு துயரக் கடலில் மூழ்கினார். தந்தையின்மேல் அவர் விழுந்து, "ஆ! என் தந்தையே! உமது மரணம் விந்தையாக இருக்கின்றதே. இப்படி உயிர் விட்டவர்களும் உலகிலிருப்பார்களா? நீர் தெளிந்த ஞானியாயிருந்தும் என் பொருட்டுப் பிராணனை விடலாமா? என்னைப் பார்த்த பிறகே உமது ஆயுள் முடிய வேண்டும் என்னும் விதி ஏற்பட்டிருந்ததோ. இதுவரையிலும் நீர் உடலை ஆரணியத்திலும் உயிரை என்னிடத்திலும் வைத்திருந்தீரோ? இனி எனக்குத் தருமத்தைப் போதிப்பார் யார்?" என்று பிரலாபித்தார். பிறகு, தந்தை சொல் மிக்க மந்திர மில்லை என்ற முதுரை அவர் நினைவுக்கு வந்து, பிதாவின் உடலைத் தன் தோளின்மேல் சுமந்து கொண்டு போய்க் கங்கையில் விட்டுவிட்டார்.

அப்போது, துளசிதாசருடைய தாய் மிகவும் வருந்தித் தன் குமாரனைக் கட்டியணைத்துப் பலதரம் முத்தமிட்டு, "மைந்தா! உன் தந்தையோ பரமன் பதியை யடைந்தார்.



இனி நானும் அவரிடம் போக வேண்டியவளே. நீ அச்சுதனடியை மறவாமல் அவர் அருளைப் பெறுவாயாக" என்று சொல்லிக் கங்கையில் குதித்து மறைந்தாள். அதைக்கண்ட துளசி தாசர் மனம் பதைத்துக் கதறி அழுதார். "ஐயோ! மாதா பிதாக்களை ஒரே காலத்தில் இழந்தவனானேனே. நானும் அவர்களுடன் கூட இக்கங்கையிற் குதித்து மடிவேன்" என்று கங்கையைப் பார்ப்பார். "பகவானை இன்னும் கண்டிலேனே. அவரைப்போய்த் தேடவேண்டும்" என்று சொல்லித் திரும்பிப்போவார். மீண்டும், அவர் கங்கையின் சமீபம் வருவார். "இன்றைக்குப் பகவானைத் தேடிப் பார்த்து நாளைக்குக் கங்கையில் விழுவேன்" என்று நினைத்துத் திரும்புவார்.

இப்படியிருக்க, அந்தக் காசியிலுள்ள ஒரு விப்பிரர், துளசி தாசரைப் பலவந்தமாய்த் தமது இல்லத்திற்கு அழைத்துவந்து, "பக்த சிரோமணி! நானும் உன்னைப்போல் கடவுளிடத்தில் பக்தியுள்ளவன். எனக்குத் துணைவர் வேறு ஒருவரும் இல்லை. ஆதலால் நீ இவ் வீட்டிலிருந்துகொண்டு பகவானைத் தியானம்பண்ணலாம்" என்றார். சாதுக்களின் நேசம் தகுந்ததென மதித்த துளசிதாசர், அப்பிராமணருடைய அபிப்பிராயத்திற் குட்பட்டு அவ்வீட்டில் வசிப்பாராயினர்.

## பேயின் தோற்றம்

துளசி தாசர் பன்னிரண்டு வருஷங்கள் அப்பிராமணருடைய வீட்டில் தங்கி யிருந்தனர். ஒரு நாள் அவர் வழக்கம்போல் அவ் வீட்டின்முன் இருக்கும் கல்லின்மேல் கால்களை அலம்பினர். அப்போது அக்கல்லிலிருந்து ஒரு பேய் வெளிப்பட்டுத் துளசி தாசரை வணங்கி, "ஐயா! உமது பரிசுத்தமான கால்களின் ஸ்பரிசத்தைப் பன்னிரண்டு வரு

டங்களாக நான் பெற்றதால் என் கல்லுருவம் நீங்கிற்று.' உமக்கு என்ன வரம் வேண்டும்? அதை நான் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றது. துளசிதாசர் அது கேட்டு நகைத்து,

"பேஎய்ப் பிறப்பிற் பெரும்பசியும் பாஅய்
விலங்கின் பிறப்பின் வெருவும்—புலந்தெரியா
மக்கட் பிறப்பி னிரப்பிடும்பை இம்மூன்றுந்
துக்கப் பிறப்பாய் விடும்"

என்றபடி, உன்பிறப்போ துன்பமுள்ளது. நீயா எனக்கு வரந்தரப் போகின்றாய். கற்பக தருவை நாடினவன் காஞ்சிரங்காயை இச்சிப்பானா? பகவானை நாடின நான் நாய்க்குங் கடையான உன்னை ஒரு பொருட்டாக மதிப்பேனா? பேயே! மோட்சத்தைக் கோரும் எனக்கு நீ என்னவரம் தருவாய்" என்றார். அதற்குப் பேய், "பாகவதோத்தமா! நான் அற்பகுணமுடைய பேயாயிருந்தாலும் என்னாலான உதவியை உமக்குச் செய்யாமற் போகேன். சிற்றுளியால் கல்லும் பிளவு படுமன்றோ? என்னுடைய முயற்சியால் நீர் பகவானைத் தரிசிக்கக்கூடும். இதில் சந்தேகம் கொள்ளவேண்டாம். இப்போதே என் பின் வருவீராகில் எங்களுக்கிறைவனாகிய வேதாளத்தினிடம் அழைத்துக்கொண்டு போகிறேன். அவரால் பகவானுடைய தரிசனம் உமக்குக் கிடைக்கும்" என்று சொல்லிற்று.

துளசிதாசர் அது கேட்டு "அலகையே! உனக்குப் பகவானைக்காணும் வழி தெரிந்திருந்தால் நீ ஏன் இவ்விழிந்த

* பேயினது பிறப்படைந்த உயிர்களில் மிக்க பசியும், பாபமியல்பினையுடைய மிருகப் பிறப்படைந்த உயிர்களில் அச்சமும் அறிவாகிய பொருளை உணராத மனிதப் பிறப்படைந்த உயிர்களில் வறுமையும் துன்பந் தருவனவாம். ஆதலால் இம்மூன்று பிறப்புயிர்களும் துன்பமாகிய பிறப்புள்ள உயிர்களாய் முடியும்.



பிறவியை அடைந்தாய்?" என, அந்தப் பேய் அவரைப் பார்த்து, "விப்ரா! அவரவர் செய்த தீவினையின் பலனை அவரவரே அநுபவிப்பார். இது நீர் அறியாததன்று. நான் பகவானை வழிபட்டு அவரைத் தரிசிக்கும் உபாயத்தை அறிந்திருந்தாலும், முன் பிறவியில் செய்த குற்றத்தால் அதனைச் செய்தல் இயலாமற்போயிற்று. ஐயா! நான் பூர்வம் இவ்வீட்டுக்குடைய பிராமணனுக்கு மனைவியாயிருந்தேன். ஆனால், கற்பென்னும் தருமவழியில் நில்லாமல், கணவனுக்குக் கஷ்டத்தையே கொடுத்துக்கொண்டு வந்ததால் அவர் வெகுண்டு பேயாய்ப்போக என்னைச் சபித்தார். அது முதல் நான் பேயாக இக்கல்லில் வசித்து வந்தேன். பன்னிரண்டு வருடங்களாகத் தங்களுடைய திருவடி ஸ்பரிசம் என்மேல் பட்டமையால், எனக்கு இப்பேய் உருவம் நீங்கும் காலம் வந்தது. இனி நான் புண்ணியலோகத்துக்குப் போகின்றேன். ஆனால் இந்த உபகாரஞ்செய்த உமக்கு என்னாலான உதவியைச் செய்யாமற் போவது சரியாகாது. நீர் என்பின் வருவீராகில் பகவானைக் காணும் உபாயத்தை உமக்குக் காட்டுகிறேன்" என்று சொல்லி, அவரை வேதாளத்தினிடம் அழைத்துக்கொண்டு போயிற்று.

வேதாளம் அவர்களைக் கண்டு அவர்கள் அங்கு வந்த காரணத்தைக்கேட்க, அலகை, அந்தவேதாளத்தை வணங்கி, "பூதமே! என்னுடைய சாபத்தை ஒழித்த இந்த விப்பிரருக்குப் பகவானைத் தரிசிக்கும்படியான உபாயத்தைச் சொல்லவேண்டும்" என்று வேண்டிற்று. அதற்கந்தப் பூதம், துளசிதாசரைப் பார்த்து, "பூசுரா! பகவானிடத்தில் அதிக பக்தியுடைய ஆஞ்சனேயரைக் காட்ட என்னாலாகும். பகவானைக் காணும் உபாயத்தை அவராலே நீ அறிந்துகொள்ளலாம். வாரணாசியில் "அசி" என்னும் வீதியில் ஒரு புராணிகர் ஸ்ரீ வால்மீகி இராமாயணத்தைப் பிரசங்கம் செய்து வருகின்றார்.

ஒவ்வொருநாளும் அதைக்கேட்க ஆஞ்சனேயர் ஒரு வயது சென்ற பிராமண வடிவந்தாங்கி அங்கு வருகின்றார். அவர் எல்லாருக்குமுன் வருவதும், எல்லாருக்குப் பின் போவதும் வழக்கம். ஆனந்த மேலீட்டால் அவர் நடக்கும்போது சற்றுத் தாமதமாகவே நடப்பார். அவரை உமது வசப்படுத்துவீராகில் பகவானுடைய தரிசனத்தைப் பெறுவீர்" என்று சொல்லி அங்கு வந்த அலகையுடன் மறைந்தது.

## ஆஞ்சநேயரைக் காணுதல்.

அலகைகள் இரண்டும் மறைந்தபின், துளசிதாசர், வேதாளம் தெரிவித்த வீட்டை நாடிச்சென்று, ஆஞ்சநேயருக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆஞ்சநேயர் ஒரு விருத்தப் பிராமணன்போல வந்தார். வேதாளம் சொன்ன குறிகள் அவரிடம் விளங்குவதைக் கண்ட துளசிதாசர் அவரைப் பணிந்து, "சுவாமி! தாங்கள் எங்கு வசிப்பவர்?" என்றார். அவ்வேதியர் அவருக்குப் பதிலொன்றும் பகராமல் பாராயணம் நடக்கும் வீட்டிற்குள் பிரவேசித்தார். துளசிதாசர் பாராயண முடியுமட்டும் அங்குக் காத்திருந்து, எல்லா வேதியருக்கும் பின்னாற் போகும் அந்தணரை வழிமறித்து, "சுவாமி! நீர் புண்ணியபுருஷராகக் காணப்படுகிறீர். ஆதலால் உம்முடன் இருக்க நான் பிரியப்படுகிறேன். தங்களுடைய உபதேசங்களைப் பெற விரும்புகிறேன். என்னுடையவேண்டுகோளை அங்கீகரிக்க வேண்டும்" என்றார். ஆஞ்சநேயர் அவரைப் பார்த்து, "நான் தனித்திருக்கிறவன். என்னுடன் யாரும் வசிக்கலாகாது. நானோ ஏழைப் பிராமணன். எனக்கு உபதேசத்திற்குரிய மந்திரமொன்றும் தெரியாது. இங்குள்ள புராணிகர் மிகவும் அறிந்தவர்; அநேகருக்கு உபதேசிக்கின்றனர். அவரை நீ அடுத்தால்



நன்மை பெறுவாய்" என்று சொல்லி, அங்குள்ள கூட்டத்தில் புகுந்து மறைந்தார்.

துளசிதாசர் அக்கூட்டத்திற் புகுந்து ஒவ்வொரு பிராமணரையும் கவனித்துப்பார்த்தார். "இவர் பித்தம்பிடித்தவர்" என்று அப்பிராமணர்களெல்லாம் அவரைப் பரிகசித்தனர். அந்த முதுமறையோரைக் காணாமையால் துளசிதாசர் வருந்தி மறுநாள் அவருடைய வாவுக்காக அப்புராணிகருடைய வீட்டின் சமீபத்தில் காத்திருந்தனர். அனுமார் வழக்கப்படியே அன்றும் வந்து, துளசிதாசரைப் பார்த்து, வேறொரு பக்கமாக உட்சென்றார். துளசிதாசர் விரைந்து சென்று அவர் பாதங்களைப் பிடித்துக்கொண்டு, "சுவாமி! நேற்று நீர் மோசஞ்செய்து கூட்டத்திற் புகுந்து, மாயமானதைப்போல இன்று நீர் போவதை நான் பார்க்கிறேன்." என்று அவரை அசையவொட்டாமல் நிறுத்தினர். ஆஞ்சநேயர் கோபமடைந்து "அடா மூடா! பாராயணம் கேட்கப் போகும் என்னை ஏன் தடுக்கின்றாய், என் பாதங்களை விட்டுவிடு. வீணாக ஏன் என்னை வருத்துகின்றாய். உனக்கு உபதேசஞ் செய்வதற்காக ஏதாவது ஒரு மந்திரத்தை இந்தப் புராணிகரிடம் தெரிந்து வருகின்றேன்" என்றார்.

துளசிதாசர் அவரைப் பார்த்து "நீர் யார்? எவ்விடத்திலிருப்பவர்? உமது பெயரென்ன? பகவானறிய நீர் உண்மையைச் சொல்லவேண்டும். அதுவரையிலும் உமது பாதங்களை நான் விடமாட்டேன்" என்றார். அனுமார் அதுகேட்டு, "நான் யாராயிருந்தால் உனக்கென்ன? உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் உண்டு? நீ நடுக்கொள்ளைக்காரன்போல இரண்டு நாளாக என்னை வழிமறித்து வம்புக்கிழுக்கின்றாய். இனி என் பாதங்களை விட்டுவிடு" என்று கடின வார்த்தைகளாடினர். என்ன சொல்லியும் துளசி

தாசர் அவருடைய பாதங்களை விட்டவரல்லர். அநுமார் கோபித்துக் கால்களைத் திமிறிப் பிடுங்கிக்கொண்டு, "இனி ஒருதரம் இப்படிச் செய்வாயானால் உன் பற்களைத் தட்டிவிடுவேன்" என்று சொல்லி, விரைவாகப் புராணிகருடைய வீட்டில் நுழைந்தார்.

துளசிதாசர் முன்போலவே அநுமாருடைய வரவுக்காக வீட்டின் வெளியே காத்திருந்தார். புராணம் யாவும் முடிந்தவுடன் மறையோரெல்லாம் வெளிவந்தனர். மாருதி மாத்திரம் துளசிதாசருக்காக அஞ்சி வெளிவாராமல் சற்று நேரம் உள்ளேயே இருந்தார். பிறகு அவர் மெதுவாக வாயிலின் வெளியே எட்டிப் பார்த்தார். உடனே துளசிதாசர் அவரைக் கண்டு, "சுவாமி! உமது வரவுக்காகவே காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிப் பரபரப்பாய் வீட்டின் உள்ளே புகுந்தார். அதுகண்ட அநுமார் மாயமாய் மறைந்தார். துளசிதாசர் அவரை நாலாபக்கங்களிலும் தேடிப்பார்த்துக் காணாமையால், மறுநாளும் அந்த இடத்திற்கு வந்திருந்தார்.

அநுமார், துளசிதாசருக்குப் பயந்து, வழக்கம்போல வரும் வழியை விட்டு மாயமாய்ப் புராணிகர் வீட்டில் பிரவேசித்து, பிராமணர் வடிவந்தாங்கி இராமாயணத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார். துளசிதாசர் நெடுநேரம் காத்திருந்தும் வேதியர் வரக் காணாமையால் வியாகூலத்துடன் புராணிகர் வீட்டில் எட்டிப் பார்த்தார். அவ்விருத்தர் அங்கே இருக்கக் கண்டு, ஆனந்தங்கொண்டு, அவர் அருகிற்சென்று, "சுவாமி! நேற்று நீர் எந்த வழியாகச் சென்றீர்? இன்று எவ்வழியாக வந்தீர்?" என்றார். அநுமார் அவரைப்பார்த்து, "ஆ! இவன் உள்ளேயும் துணிந்து வந்து விட்டானே" என்று திகைத்து, அவர் முகத்தைப் பார்க்காமலும், பதில்



சொல்லாமலும், இராம கதையை அன்புடன் கேட்டுக் கொண்டிருந்தார். துளசிதாசர் அவரை விட்டவரல்லர். "சுவாமி! என்மீதில் உமக்கு அருவருப்பேன்? என் கேள்விகளுக்கு விடை அளிக்கலாகாதோ?" என்று ஓயாமல் கேட்டுக் கொண்டே இருந்தார் துளசிதாசர். மறையவ வுருவங் கொண்ட அநுமார், "அடா மூடா! சிவ பூசை வேளையில் கரடி புகுந்ததைப்போலப் பக்தியுடன் இராமாயணத்தைக் கேட்கும் சமயத்தில் ஏதோ பிதற்றிக்கொண்டிருக்கின்றாய்" என்று சொல்லி, அவ்விடத்தை விட்டு மற்றொரு பக்கத்தில் போய் உட்கார்ந்தார்.

துளசிதாசர் அவரை விடாமல் அங்கேயும் சென்று முன் கேட்ட கேள்விகளையே கேட்கத் தொடங்கினார். அநுமார் மறுபடியும் துளசி தாசரைக் கடிந்து பேசினார். என்ன பேசியும் துளசிதாசர் அவரை விட்டவரல்லர். "மகானுபாவா! நீரே இராமாயணத்திற்கு ஆதிகாரணராய் இருந்தும் அந்த இராமசரிதையை ஒருவர் சொல்ல நீர் கேட்கவேண்டுமா?" என்றார்.

அதைக்கேட்ட அநுமார் திகைத்து, "இவன் எப்படி என்னை அறிந்தான். பிராமணனைப்போலிருக்கும் என்னைக் கண்டு கொண்டானே. இவனால் இச்சபையிலுள்ளோரும் என்னை அறிவார்களாகில் சங்கடம் உண்டாகும்" என்று நினைத்து மாயமாய் மறைந்து போனார். புராணமும் அப்போது முடிவு பெற்றது. கூடியிருந்த பிராமணக் கூட்டமும் கலைந்தது.

உடனே துளசிதாசர் எழுந்து, ஆஞ்சநேயரைக் காணாது திகைத்து, அங்குச் செல்லும் ஒவ்வொரு பிராமணரையும் கவனித்துப் பார்த்தார். அவர்களெல்லாம் இவரைப் பல நிந்

தனை வார்த்தைகளால் தூஷித்து, அவ்விடத்தினின்றும் போகச் செய்தார்கள்.

## உயிர்விடத் துணிந்தது.

அதற்கு மறுநாளும், துளசிதாசர் அனுமாரைக் காண வேண்டி அங்கு வந்திருந்தனர். மாருதி எப்போதும்போலப் பூசுர வடிவுடன் அவ்வீட்டிற்குள் பிரவேசித்து, இராமாயணத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார். துளசிதாசர், புறத்தில் காத்திருந்தும் விப்பிர ரூபங்கொண்ட ஆஞ்சனேயர் காணப்படாமையால் வீட்டில் புகுந்தார். அங்கே பாராயணத்தில் கவனஞ் செலுத்திக்கொண்டிருக்கும் ஆஞ்சனேயரைத் துளசிதாசர் கண்டு, "மாயா விநோதா! உம்முடைய பெருமையை அறிவார் யார்? ஸ்ரீராமருடைய தரிசனம் எனக்குண்டாகச் செய்யவேண்டும்" என்று அவரைத் தோத்திரஞ் செய்யத்தொடங்கினார். மாருதி அதுகேட்டு, "அடா பேயா! நீ உன்மத்தனோ? ஸ்ரீராமர் வைகுந்தத்திலிருக்கிறார். நீ உண்மையான பக்தனானால் அவரைப்போய்ப் பார்க்கலாம். நான் அப்பரமாத்மனை எப்படி உனக்குக் காட்டுவது? என்னைவிட்டுத் தூர விலகி இரு" என்றார்.

துளசிதாசர் அவரைப்பார்த்து, "குருவே! உம்முடைய கருணை எனக்குக் கிடைக்குமாகில் நான் வைகுந்தம் போவது பிரயாசையாகுமோ? நீர் விஸ்வரூபங்கொண்டு சஞ்சீவி பர்வதத்தை ஒரு கரத்தில் தாங்கிச் சென்று, இராம லட்சுமணர் முதலானோரைக் காத்தவரல்லவா! உம்மாலாகாத காரியமும் உண்டோ?" என்று பலவாறு புகழ்ந்தார். முந்தியநாட்களைப் போல அவர் மறைந்துபோகக் கூடுமென வறிந்த துளசிதாசர், தம்முடைய அங்கவஸ்திரத்தினால் அவருடைய கைகளைக் கட்டினார். அனுமார், துளசிதாசருடைய அக்கிரமத்தை அங்குள்ளாருக்குச் சொல்லி அங்கு மிங்குமாய்த்



திரிந்தார். யார் என்ன சொல்லியும் கேட்காமல் துளசிதாசர், அங்கவஸ்திரத்தின் மற்றோர் முனையை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு அவருடன் கூடவே சென்றார். துளசிதாசருடைய மனவுறுதியைச் சோதிக்கவேண்டி அனுமார் வேகமாக ஓடலானார். துளசிதாசரும் அவரை விடாமல் ஓடினார். மாருதியின் வேகத்தால் துளசிதாசர் கீழேவிழுந்து, சரீரத்தின் பலவிடங்களில் படுகாயமுண்டாய் இரத்தப் பிரவாகம் ஓடிற்று; அவர் ஸ்மரணையற்றுப் பூமியில் விழுந்து, மூர்ச்சையடைந்தார். சற்றுநேரத்திற்கெல்லாம் அவர் மூர்ச்சையினின்றும் தெளிவையடைந்து, ஆஞ்சநேயரைக் காணாமல் நொந்து, "இனி இந்தத் தேகத்தைச் சுமந்திருப்பதினும் உயிர்விடுதலே உத்தமம்" எனத் துணிந்து, தரையில் தலையை மோதிக்கொள்ளப் போனார்.

உடனே, அங்கு மறைந்திருந்த கருணாநிதியாகிய மாருதி, துளசிதாசரைப் பிடித்துக்கொண்டு, "அன்ப! பக்தியில் சிறந்தவனே! உனக்குத் துன்பம் வரச்செய்ததற்காக நீ வருத்தப்படாதே. என்னால் உனக்கு ஆகவேண்டிய காரியம் என்ன?" என்றார். துளசிதாசர் ஆஞ்சநேயருடைய தரிசனம் கண்டு ஆனந்தங்கொண்டு, பலமுறை அவரை வணங்கி எழுந்து, "மாதவனே! உம்மை இன்று நான் தரிசனம் செய்ய என்னபாக்கியம் செய்தேனோ? இனி நான் பகவானையும் தரிசித்தவனானேன். என்னுடைய ஜன்மம் சாபல்யமாயிற்று. நீர் கண்டு மகிழ்ந்த அந்த ஸ்ரீராமமூர்த்தியை நான் காணும்படி கிருபை செய்ய வேண்டும். அப்பரமாத்மனுடைய தரிசனம் கிடைக்காவிடில் நான் இவ்வுலகில் ஜீவித்திருக்கமாட்டேன். இது சத்தியம்" என்றார்.

ஆஞ்சநேயர் அதுகேட்டு, அந்தப் பக்தருடைய வைராக்கியத்திற்கு வியந்து, "அன்ப! நாளையதினம் நீ வசிக்

கும் வீதியில் பகவானை வரும்படி செய்கிறேன். நீ அவரைத் தரிசனஞ் செய்து ஆனந்தமடையலாம்" என்று சொல்லி மறைந்தார்.

வாயு புத்திரர் மறைந்த பின், துளசிதாசர் ஆனந்தவாரியில் மூழ்கித் தம் இருப்பிடஞ் சேர்ந்து அருணோதயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். மறுநாள் சூரியன் உதயமானவுடன் ஆஞ்சநேயர் வைகுந்தத்திற்கு எழுந்தருளி, அதிக பக்தியுடன் பகவானை வலம் வந்து பணிந்து, "பராந்தாமா! வால்மீகரவதாரமான துளசிதாசர் உம்மிடத்தில் அதிக பக்தியைச் செலுத்திக்கொண்டு வருகிறார். இதை நீர் அறியாதவரல்ல. இன்றையதினம் உம்மை ஸ்ரீராமாவதாரத்துடன் தரிசிக்க விரும்பி இருக்கின்றார். நீர் அவ்விதம் அவரிடம் கிருபை புரியாவிடில் அவர் உயிர்விடத் துணிந்திருக்கிறார்" என்று விண்ணப்பித்தனர். முன்னமேயே யாவும் அறிந்திருந்த பகவான் ஸ்ரீராம, லட்சுமண, பரத, சத்துருக்கரின் வடிவெடுத்து, சீதா சமேதராய்க் கருடன்மேலூர்ந்து துளசிதாசரிருக்கும் வீதியி லெழுந்தருளினர். துளசிதாசர், பகவானுடைய தரிசனத்திற்காக எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்போது பகவான் துளசிதாசரைச் சோதிக்கவேண்டி உடனே தமது ரூபத்தை மாற்றிக்கொண்டார். அவர் கோணல் பாகையும், நீண்ட அங்கியும், நீண்ட தாடியும் உள்ள மகம்மதிய ரூபமானார். பரத சத்துருக்க லட்சுமணரும் அப்படியே உருவெடுத்தனர். கருடனே அசுவமானான். இலட்சுமி மாத்திரம் "துளசிதாசருக்கு என்ன வரமளிக்கலாம்" என்று யோசித்துக்கொண்டு, துளசிதாசருக்கு எதிரில் நின்றனள். துளசிதாசர் இவர்களைக் கவனிக்காமல் பகவானுடைய வரவுக்காக அவ்வீதியையே பார்த்துக்கொண்



டிருந்தார். பகவான் இலட்சுமியைப் பார்த்து, "மாதே! துளசிதாசருடைய மடமையைப் பார்த்தாயா? என்னை யறிய சக்தியற்றவராயிருந்தாலும் உன்னையாகிலும் கவனித்திருக்கலாமே. இனி இவன்முன் நிற்கலாகாது" என்று சொல்லி அந்தர்த்தானமானார்.

துளசிதாசர் அன்று மாலை வரையிலும் பகவானுக்காக எதிர்பார்த்து, ஆஞ்சநேயருடைய வாக்குறுதி வீணானமைக்காக வெகுண்டு, பாராயண சபையை அடைந்தார். அங்கே விருத்த வடிவுடன் வீற்றிருக்கும் ஆஞ்சநேயருடைய பாதங்களிற் பணிந்து அவர் அழத்தொடங்கினர். அவ் வழுகுரலோசையைக் கேட்ட அங்குள்ளார் அனைவரும் திடுக்கிட்டு, "அவருடைய துக்கத்திற்குக் காரணம் யாதாயிருக்குமோ" என்று யோசித்துக்கொண்டிருந்தனர்.

துளசிதாசருடைய மகிமையை அங்குள்ளாருக்குக் காட்ட எண்ணங்கொண்ட ஆஞ்சநேயர் துளசிதாசரை நோக்கி, "நீ இன்று பகவானைத் தரிசனம் செய்யவில்லையா?" என்றார். "சுவாமி! காலைமுதல் மாலைவரையிலும் காத்திருந்தும் தாங்கள் தெரிவித்திருந்தபடி பகவான் எழுந்தருளவில்லை" என்று துளசிதாசர் கூற, அநுமார் "ஓ! நீ மோசம் போனாய். பகவானை அறியும் சக்தி உன்னிடத்தில் இல்லாமல் போய்விட்டது. அசுவத்தின்மேல் ஊர்ந்து, சீதாசமேதராய் மகமதிய வேடத்துடன் வந்து, உன் எதிரில் சற்றுத் தங்கி மறைந்தவரை யாரென்று நினைத்தாய்? அவரே பகவான்" என்றார். துளசிதாசர் அதுகேட்டு "ஆ! மோசம் போனேனே. பகவான் மாறுவேடத்துடன் என்னை ஏமாறச் செய்தனரே. நான் கொடும் பாவியாய் இருக்கவேண்டும்" என்று இன்னும் அதிகமாக அழத் தொடங்கினர்.

ஆஞ்சநேயர் அவரைத் தேற்றி, "அன்ப! உனக்கு இன்று எவ்விதத்திலும் பகவானுடைய தரிசனம் கிடைக்

கச் செய்கின்றேன். உன் மனைவி மமதாதேவி யம்மையின் மடத்தில் பகவான் இன்று எழுந்தருளுவார்" என்று சொல்லித் தம் சுயரூபத்தை யாவரும் காணும்படி செய்து மாயமாய் மறைந்தார். அங்கிருந்த பாகவதர்கள் யாவரும், இவ்வதிசயத்தைக் கண்டு ஆனந்தமடைந்து, துளசிதாசருடன் பகவானுடைய தரிசனத்தைக் காண மமதாதேவியின் மடத்திற்குச் சென்றார்கள். அதுகேட்ட அவ்வூர் அரசன் முதலானோரும் அம்மடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

## ஸ்ரீராம தரிசனம்.

இப்படி யிருக்க, அநுமார் வைகுந்தமடைந்து எம்பெருமானை வணங்கி, "இறைவா! தங்களிடம் அன்பைச் செலுத்தும் பரமபாகவதனை இப்படி மோசஞ் செய்யலாமோ? எவ்விதத்திலும் இன்றையதினம் உம்முடைய சுயரூபத்துடன் துளசிதாசருக்குத் தரிசனம் தரவேண்டும்" என்று விண்ணப்பித்துக்கொண்டனர். கருணை வள்ளலாகிய இறைவன் கருடவாகனரூடராய், இலட்சுமண, பரத, சத்துருக்கர்களுடன் சீதாசமேதராய்த் தேவர்களும், ரிஷிகளும் புடைசூழ எழுந்தருளினர். தேவதுந்துபி முதலிய வாத்தியங்கள் ஆகாயத்தில் ஒலித்தன. மலர்மாரி பொழிந்தது. பகவான் மமதாதேவியின் மடத்திற்கு நேராய்த் தோன்றினர். அவரைக் கண்ட காசி மன்னன் முதலானவர்கள், "ஆ! துளசிதாசருடைய கருணையினால் நாமெல்லாரும் பகவானைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றோம். அவர் மகா யோகி யாதலால் பகவான் அவர் பொருட்டு எழுந்தருளினர். அப் பரமபாகவதர் இந்நகரில் வந்தமையால் நாமெல்லாம் புனிதரானோம்" என்று சொல்லிப் பகவானைப் பலவாறு புகழ்ந்து தோத்திரஞ் செய்தார்கள்.



துளசிதாசர் பகவான் வரும் வைபவத்தைப் பார்த்துக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய, "ஆ! நான் பிறவிக் கடலைக் கடந்தேன். இவ்வித அலங்காரத் தோற்றமுடைய மணிவண்ணனை எவ்வாறு புகழ்வேன்" என்று சொல்லித் தம்மையும் மறந்து அசைவற்று நின்றார். அப்பொழுது பகவான் துளசிதாசரின் அருகில் வந்து அவரை மார்புடனணைத்துக்கொண்டு, "அன்ப! உன்னைப்போன்ற பக்தி வைராக்கியத்திற் சிறந்தவர்கள் இவ்வுலகில் யாருமில்லை. உனக்கு வேண்டும் வரம் யாது?" என்றார். துளசிதாசர் பகவானுடைய பாதகமலங்களில் பன்முறை விழுந்து பணிந்து, "கேசவா! ஜனார்த்தனா! கார்வண்ணா! மாதவா!" என்ற பல நாமங்களால் துதித்து, "எம்பெருமானே! நான் எப்போது நினைக்கின்றேனோ அப்போது தாங்கள் சீதாசமேதராய் ஸ்ரீராமருடைய தரிசனத்தை எனக்குக் கடாட்சித்தருளவேண்டும். எல்லாப் பதவிகளிலும் மேலான பதவி யாதோ அதைக் கிருபை செய்யவேண்டும். நாரதாதி ரிஷிகளெல்லாம் எந்த நிலையில் இருக்கின்றார்களோ அந்த நிலையை எனக்கு அநுக்கிரகம் செய்யவேண்டும்" என்று விண்ணப்பித்துக்கொண்டனர்.

பகவான் அவரைப் பார்த்துப் புன்னகை கொண்டு, "அன்ப! உன் பூர்வ ஜன்மத்தை நீ அறிந்தாயில்லை. நீ என் பக்தியிற்சிறந்த வால்மீகி அல்லவா?" என்று ஞானதிருஷ்டி அறியும் சக்தியை அவருக்குக் கொடுத்தனர். அவர் உடனே தம்முடைய பிறப்பை அறிந்து, "தேவாதி தேவா! நான் இவ்வுலகிலுள்ள மாந்தர்களுக்குப் பக்தி மார்க்கத்தைப் போதிக்க அவதரித்தும் அதை மறந்து, உலக இச்சையில் உழன் றிருந்தேனே. இஃது என்ன மாயம்? தங்களுடைய கடாட்சம் பெற்ற எனக்கும் இத்துயர் நேரிடலாகுமோ?" என்றார்.

பகவான் அவரைப் பார்த்து, "நான் திரேதாயுகத்தில் இராமவதாரமெடுத்து, என் பூர்வ ஞானத்தை மறந்து பிறகு வசிஷ்டரால் தெளிந்து, அநேக நாள் அரசுபுரிந்து நாட்டில் தருமத்தையும் காட்டில் தவத்தையும் நிலைநிறுத்தி வைகுந்தம் அடைந்தேன். மாயா சம்பந்தமான மனிதப் பிறவியை எடுத்தோரெல்லாம் துன்பப்படுவது இயல்பேயாகும். அதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன்.

## மாயா விநோதம்

முதல் யுகத்தில், யாழ்வல்லவரான நாரதர் தேவலோகத்தை விட்டுக் காட்டையடைந்து, பதினான்கு வருஷங்கள் தவஞ் செய்தார். அவர் அதனால் உலக ஆசைகளை வெறுத்ததாகக் கர்வமடைந்து, சத்திய லோகத்திற்குச் சென்று சதுர்முகனைப் பார்த்து, நாட்டிலிருப்பதிலும் காட்டிலிருப்பதே உத்தமமென்றார். அவர் கைலைக்குச் சென்று பரமசிவனைப் பணிந்து ஆசையை விட்டவர்கள் காட்டில் வாழுவது உத்தமமென்றார். பிறகு, அவர் என்னிடம் வந்து சேவித்து, "உம்முடைய மாயை என்னைப் போன்ற தவசிகளை என்ன செய்யும்" என்று சொல்லிக் காட்டை நோக்கிச் சென்றார். அப்போது நான், அவர் போகும் வழியில் மாயையால் ஒரு நகரத்தை உண்டாக்கி, அந்நகர மன்னனுக்கு ஒரு அழகிய பெண்ணிருக்கவும், அப்பெண்ணுக்கு சுயம்வரம் நடக்கவும், சகலதேச மன்னர்களும் அங்குக் கூடியிருக்கவும் ஏற்பாடு செய்தேன். அம்மன்னன் அவ்வழியே வந்துகொண்டிருக்கும் நாரதரைப் பணிந்து, அவரைத் தன் குமாரத்தியினிடம் அழைத்துக் கொண்டுபோய், "மாதவ! இந்தக் கன்னியை எத்தேசத் தரசன் மாலையிடுவான்?" என்று கேட்டனன். நாரதர் அப்பெண்ணைப் பார்த்தவுடன் உலக இச்சையில் மனங்கொண்



டார். அவருடைய வைராக்கியம் அவரை விட்டு ஒழிந்தது. அவர் அப்பெண்ணை விவாகம் செய்துகொண்டு உலக வாழ்க்கையில் இருக்க விரும்பினார்.

ஆதலால், நாரதர் அரசனைப் பார்த்து, "வேந்தே! உன் மகளுக்குரிய ஆடவன் தேவலோகத்திலிருந்து அதிக விரைவில் வருவான். அவனுக்கே அவளைக் கொடுத்து வதுவை செய்" என்று சொல்லி அவ்வணங்கைப் பார்த்து, "உனக்கு எவ்வித புருஷன்மேல் இச்சை" என்று வினவினர். அதற்கு அந்த மாது, "முனிவரே! எனக்கு மகாவிஷ்ணு மூர்த்திக்கு நிகரான புருஷன்மேல் இச்சை" என்றாள். நாரதர் அப்பால் சென்று, என்னைத் தியானித்து என்னுடைய ரூபம் அவருக்கு உண்டாகவேண்டுமென்று விரும்பினார். அவருக்குப் பச்சைநிறமும் பீதாம்பரமும் உண்டாகச் செய்தேன். அவர் மகிழ்ந்து, சுயம்வர மண்டபத்தில் பூமாலையுடன் நிற்கும் அம்மங்கையின் எதிரில் போய் நின்றார். அச்சுந்தரி அவருடைய * காருக வதனத்தைக் கண்டு சிரித்து, அவரை விட்டு அப்பால் சென்றனள். நாரதர் அவளை விடாது பின்பற்றித் தம்மை மாலையிடும்படி வேண்டினார். அவள் அவரை வெறுத்து நாலாபக்கங்களிலும் ஓடினாள். அவர் அவளை விடாது தொடர்ந்துபோகக் கடைசியில் அம்மாது ஒரு தடாகத்தில் குதித்தாள். நாரதரும் அவளுடன் குதிக்க அத்தடாகத்தை அணுகினார். அந்தத் தடாக நீரில் தம்முடைய சாயையைப்பார்த்து "ஆ! என் முகம் † யூகத்தின் வடிவமாயிருப்பதால் அம்மாதும் அங்கிருந்த மற்றவர்களும் சிரித்து வெறுத்தார்கள்?" என்று திகைத்தார். அப்போது நான் அங்கிருந்த கேணியும், கன்னியும், பட்டினமும், அர

* காருகம்=கருங்குரங்கு.

† யூகம்=கருங்குரங்கு.

சர்களும், சுயம்வரமண்டபமும் மாயமாய் மறைந்துபோகச் செய்தேன். நாரதர் அதுகண்டு வெட்கி மாயையின் சக்தி வலிதென்று நிச்சயித்துத் தம்முடைய அகந்தையை விட்டொழித்தார்.

ஆதலால், மாயையைக் கடத்தல் பிரமாதி தேவர்களாலுங்கூடாது. நீ இன்றுமுதல் அநேக சாதுக்களின் சங்கத்திலிருந்து, தேர்ந்த நவ வியாகரண பண்டிதரான இந்த ஆஞ்சநேயரிடம் பிரமோபதேசம் பெற்றுக்கொண்டு, என் சரித்திரமாகிய இராமாயணத்தை முன்னே தேவபாஷையில் செய்ததுபோல, இப்போது இந்துஸ்தானி பாஷையில் செய்ய வேண்டியது. அந்தக் கிரந்தத்திற்குத் துளசி ராமாயணம என்று பெயரிடுவித்தும், யாவரையும் பாராயணஞ் செய்யும்படி செய்வித்தும் வருவாயானால் என் பதவிக்குப் பாத்திரராகச் செய்விப்போம்" என்று திருவாய்மலர்ந்தருளிப் பல ஆசிகள் கூறி மறைந்தனர்.

பிறகு துளசிதாசர், ஆஞ்சநேயருடைய அரிய பிரமோபதேசத்தைப் பெற்றுப் பரமஞானியாய்ச் சாதுக்களை ஆதரித்து வந்தார். பகவான் கட்டளையிட்ட வண்ணம் இராமாயணத்தை இந்துஸ்தானி பாஷையில் மொழிபெயர்த்துப் பலரும் வாசித்து இன்புறச் செய்தனர்.

## கள்ள சாதுக்கள்

ஒரு நாள் இரவில், துளசிதாசருடைய மடத்தில் நெடுநாளாயிருந்த சாதுக்களில் நால்வர், மடத்திலுள்ள சில விலையுயர்ந்த வஸ்துக்களைக் களவாடிச் செல்ல நினைத்தார்கள். நடுநிசியில் அந் நால்வரும் அப் பொருள்களுடன் பிறர் அறியாமல் மடத்தினின்றும் வெளிப்படலாயினர். அதை அறிந்த பகவான், இராமரைப்போலவும் இலட்சுமணரைப் போலவும் உருவெடுத்து, அக் கள்வரை மறித்து அதட்டினர்.



அவர்களைக் காவலர்களென மதித்த அக்கள்ளர்கள் மடத்திற்குள் வந்து, மற்றோர் வாயிலாக வெளிப்பட முயன்றார்கள். அங்கும் அக்காவலர்கள் அவர்களை அதட்டி மிரட்டினார்கள். மறுபடியும் அந்தச் சாதுக்கள் பயந்து வேறொரு வழியாக வெளிச்செல்ல ஆயத்தப்பட்டனர் அக்காவலர்கள் அங்கும் வந்து அவர்களை மறித்தார்கள். கள்ள சாதுக்கள், தங்கள் முயற்சி வீணாவதைக் கண்டு பயந்து முடிவில் வேறொரு வழியாகப் பரபரப்புடன் ஓடலானார்கள்.

அப்போது அக்காவலர்கள் அவர்களைப்பிடித்துக்கொண்டு "துரோகிகளே! சாதுக்களெனப் பெயர் வகித்து இப்படியும் செய்யலாமா? பலருக்கும் பயன்தரக்கூடிய பொருள்களைக் கள்ளத்தனமாக அபகரிக்கலாமா?" என்றுசொல்லி,அங்குள்ளார் அறியும் வண்ணம் "கள்ளர், கள்ளர்" என்று கூச்சலிட்டார்கள். அக் கூச்சலைக்கேட்ட மடத்திலுள்ளார் யாவரும் விழித்துக்கொண்டு அங்குவருவதற்குள் அக்காவலர்கள் மாயமாய் மறைந்தனர். சாதுக்கள் நால்வரிடமும் களவாடிய சொத்துக்கள் இருப்பதைக் கண்ட சாதுக்கள், அவர்களைப் பலவாறு தூஷித்துத் தள்ளிக்கொண்டே மடத்துக்குள் கொண்டுபோய்த் தீபவெளிச்சத்தில் பார்க்க, அவர்கள் தங்களில் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள். அவர்களை யாவரும் வெறுத்து, "அடா விசுவாசமற்ற மகா துரோகிகளே!" என்று தூஷித்து, துளசிதாசரிடம் சொத்துக்களுடன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். துளசிதாசர் அவர்களுடைய செயலை அறிந்து, அவர்களைப் பணிந்து, "சாதுக்களே! உங்களை அக்கிரமமாக அடித்துத் தூஷித்து இங்கழைத்துவந்த சாதுக்களை மன்னிக்க வேண்டுகின்றேன். அவர்கள் அறியாது இப் பிழை செய்தனர். உங்களுக்குத் தேவையான வஸ்துக்களை நீங்கள் தடையின்றி எடுத்துக் கொண்டு போகலாம்." என்றார்.

களவாடிய அந்தச் சாதுக்கள், துளசிதாசரைப் பார்த்து, "மகானுபாவா! இந்தச் சொத்துக்களை நாங்கள் விரும்பிக் களவுசெய்தது உண்மையே. ஆனால், நாங்கள் அவற்றை எடுத்துக்கொண்டு போகவிடாமல் இம்மடத்துக் காவலர்கள் எங்களை மிரட்டி அதிக வருத்தத்துக்குள்ளாக்கினர்" என்றார்கள் அதுகேட்ட துளசிதாசர் மிகவும் கோபித்து, "உங்களைத் தூஷித்துத் துன்புறச்செய்த அந்தக் காவலர்களைக் காட்டுங்கள். அவர்களை இரண்டு துண்டாக வெட்டி எமபுரத்திற் கனுப்புகிறேன்" என்று வாளை ஏந்திக்கொண்டு, அவர்களுடன் அக்காவலர்களைத் தேட ஆரம்பித்தார். எங்குத் தேடியும் அக்காவலர்கள் காணப்படாமையால் "அக்காவலர்கள் எவ்வித ரூப முடையவர்கள்? என்ன ஆயுதத்தைப் பிடித்துக்கொண் டிருந்தார்கள்?" என்று அந்தச் சாதுக்களை வினவினர். அப்போது, பகவான் ஸ்ரீராம லட்சுமண பரத சத்துருக்க ரூபங்களுடன் பிரசன்னமாய், "நாங்களே அக்காவலர்கள். எங்களை உன்னுடைய வாளால் வெட்டு" என்று தங்கள் கைகளிலுள்ள வில் அம்புகளைக் கீழே வைத்துக் குனிந்து நின்றார்கள்.

துளசிதாசர் அவர்களைக் கண்டவுடன் ஆனந்த பரவசமடைந்து, வாளைக் கீழே எறிந்து, இரண்டு கைகளையும் சிரமேற் குவித்து "ஸ்ரீராமா! பரந்தாமா! பத்மநாபா! பரமசொரூபா! நீங்களென் றறியாமல் நான் அபசாரஞ் செய்தேன். சாதுக்கள் செய்த புண்ணிய விசேஷத்தால் உங்களுடைய தரிசனம் கிடைக்கப் பெற்றேன். உங்களுடைய மாயா விசேஷத்தை நான் அறிய சமர்த்துடையவன் ஆவேனோ? கருணாநிதி! நான் செய்யத் துணிந்த குற்றத்திற்காக என்னை மன்னித்து ஆட்கொள்ளவேண்டும்" என்று பலமுறை நிலத்தில் விழுந்து பணிந்தார். பகவான் அவரைக் கருணையுடன் நோக்கி, "பாகவதோத்தமா! உன்னை யறியா



மல் உன் சொத்துக்களைக் களவு செய்துகொண்டுபோகும் கள்வரை மறித்தோமே யல்லது வேறு அபசாரம் யாதும் செய்யவில்லை. உன்னை அடுத்திருக்கும் சாதுக்கள் கெட்ட வழிகளில் பிரவேசித்ததால், நான் அவ்வழிகளினின்றும் அவர்களை விலகச்செய்து ஆட்கொள்ளவேண்டியது என் கடமையாகும். அவர்களைத் தீய வழிகளில் செலுத்தி நாசமடையச் செய்வது கூடாது. இனி உன் சொத்துக்களை யாருக்குக்காகிலும் கொடு" என்று சொல்லிப் பல ஆசிகள் கூறி மறைந்தனர்.

பிறகு துளசிதாசர், களவுசெய்த நால்வரையும் பார்த்து, "சாதுக்களே! உங்களுடைய கிருபையால் நான் பகவானைக் கண்டு சேவித்தேன். அவருடைய திருக்கரங்களால் அடியுண்ட தங்கள் மகிமையை நான் எவ்வாறு புகழ்வேன்" என்று சொல்லி, அவர்கள் விரும்பிக் களவாடிய சொத்துக்களை அவர்களுக்கே கொடுத்து, அவர்களுக்குத் தொண்டு செய்துகொண் டிருந்தார்.

## கல்லுருவான இடபம் அன்னம் புசித்தது

ஒருநாள், மமதாதேவி அநேக சாதுக்களுக்கு அன்னமிட எண்ணங் கொண்டனள். சுத்த ஏகாதசியின் மறுநாள், இரண்டாயிரம் பிராமணர்களுக்கு அன்னம் படைக்கப்பட்டது. எல்லாரும் அன்னம் புசிக்குந் தறுவாயில், பகவான் ஒரு வேதியரைப்போல மடத்தில் பிரவேசித்துத் துளசிதாசருக்கு வந்தனஞ்செய்து, "ஐயா! நான் ஏழைப் பிராமணன்; அடியேன் மிகவும் பசியோடும் வந்திருக்கின்றேன். எனக்கு அன்னம் அகப்படுமா?" என்றார். உடனே அவர் பந்தியில் உட்கார்ந்து சாப்பிட அவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அப்போது, அந்த மாய மறையோன் அங்குள்ளாரைப் பார்த்து, "சாதுக்களே! நீங்கள் புனிதர்களாயிருக்கின்

தீர்கள். நானோ மிகவும் பாவியாயிருக்கின்றேன். எப்படியெனில், நான் ஒரு விப்பிரனை அறிவீனத்தினால் கொன்றேன். அந்தப் பாவம் நீங்க, நான் கங்கையில் ஸ்நானஞ் செய்து இங்கடைந்தேன். உற்றது சொன்னால் அற்றது பொருந்தும் என்றபடி உண்மையைத் தெரிவித்துவிட்டேன். ஆதலால், அடியேன் உங்களுடன் உண்ணும்படி ஒப்புக்கொள்ளுவீர்களோ? அல்லது தள்ளிவிடுவீர்களோ?'' என்றார்.

அதுகேட்ட பூசுரரெல்லாம் எழுந்து, அந்த அந்தணர் மேல் விழுந்து, அவரை அடித்து அவமரியாதையாய் வெளியிற் போகும்படி நிர்ப்பந்தஞ் செய்தார்கள். உடனே துளசிதாசர் சாதுக்களை யமர்த்தி, மாயா வேதியரைப் பார்த்து, "பிராமணோத்தமா! 'சீதாராமா' என்று சொல். அப்படிச் சொல்வீரானால் உம்முடைய பாபம் நீங்கும். நீர் பரிசுத்தமாவீர்'' என்றார். அதற்கந்த மாயா வேதியர், "ஐயா நீர் தெரிவித்த வாசகத்தை என் நாவினால் சொல்லமாட்டேன். நான் அநேக வேதசாஸ்திரங்களை ஆராய்ந்திருக்கின்றேன். அவற்றில் இந்த நாமதேயத்தை நான் கண்டதில்லை. அவ்வார்த்தை உச்சரிப்பதற்கு அதிக கடினமாகவும் காணப்படுகிறது'' என்றார்.

சாதுக்கள் அதுகேட்டு, "விப்பிரா! எல்லாரும் அதிக இலேசாக உரைக்கும், "சீதாராமா'' என்னும் திவ்விய நாமம் கொடும் பாவியாகிய உன் வாயிலும் நுழையுமா? அப்படி நுழைவதாயிருந்தாலும் அஃது உனக்குப் பயனையளிக்குமா? துஷ்டா! எங்களுடன் அன்னம் புசிக்க நீ தகுதியுடையவனல்ல. சீக்கிரம் வெளியில் போ'' என்றார்கள். துளசிதாசர் அந்தச் சாதுக்களின்மேல் கோபித்து, மாயா விப்பிரரைப் பார்த்து, "வேதங்கள் புகழும் தாரக மந்திரத்தை நீர் இது



வரையிலும் கேட்டதில்லையா? அடியேன் மற்றும் ஒருமுறை அந்த மந்திரத்தைச் சொல்லுகின்றேன்'' என்று சொல்லி அவர் காதின் சமீபத்தில் தம் வாயைவைத்து, "சீதாராமா'' என்று உச்சரித்து, "இப்போதாகிலும் அவ்வார்த்தையைச் சொல்லும்'' என்றார்.

அந்த மாயா மறையோன் அதுகேட்டு, "மரித்த பிரேதத்தைச் சுமந்துகொண்டு போகும் போதும், ஒருவர் மரிக்கும்போதும் ஓதும் இழிவான வார்த்தையைச் சுபமாக ஜீவித்திருக்கும் காலத்தில் நினைக்கலாகுமா? அமங்கலத்திற்கு உதவுவது சுமங்கலத்துக்கு உதவுமா? இனி அந்த வார்த்தையைச் சொல்லவேண்டாம்'' என்றார். அதற்குத் துளசிதாசர், "ஐயா! அநுதினமும் பரமசிவனார் தியானிக்கும் குரு மந்திரத்தை நீர் இழிவுபடுத்தலாமா? நீர் அம்மந்திரத்தைச் சொல்லுவீரானால் உம்முடைய பாவம் ஒழியும்''என்றார். மாயா மறையோன் அதுகேட்டு நகைத்து, வேண்டாமென்கிறவன் கழுத்தில் லிங்கம் கட்டுவது போல நான் அவ்வார்த்தையைச் சொல்ல மறுத்தும் நீர் என்னைக் கட்டாயப்படுத்துதல் தகுதியல்ல. நான் பரமசிவனைப் பூசிப்பவன். நான் அரா வென்றும் உமா வென்றும் தியானம் செய்வது வழக்கம். ஆதலால் நீர் சொல்லும் அந்த மந்திரத்தை நான் சொல்லவே மாட்டேன்'' என்றார்.

துளசிதாசர் அதுகேட்டு ஆனந்தமடைந்து, மற்ற மறையோரைப் பார்த்து, "இந்தப் பிராமணன் அரா, உமா வென்னும் இருநாமங்களைச் சொல்லிவிட்டான். இவ்விரண்டு பதங்களும் சேர்ந்ததே ராமநாமம். பூர்வம் தசரதமன்னனுக்குப் புதல்வராகப் பிறந்த விஷ்ணுமூர்த்திக்கு, வசிஷ்டர், அரா என்னும் சிவநாமத்தின் இரண்டாவது எழுத்தையும், உமா என்னும் பார்வதி நாமத்தின் இரண்டாவது எழுத்தை

யும் சேர்த்து ராமா என்ற நாமதேயமிட்டார். இதுவுமன்றி, 'ரா' சகல பாபங்களையும் வெளிப்படுத்தும், 'மா' வெளிப்பட்ட பாபங்கள் தன்னை அடையாமல் நிக்கிரகிக்கும். அதற்குத் திருஷ்டாந்தம், 'ரா' என்றால் வாய்திறக்கும், 'மா' என்றால் வாய்மூடும். ஆதலால், இந்தப் பிராமணருடைய பாபம் ஒழிந்துவிட்டது. இவருடன் நீங்கள் உண்ணலாம்" என்று சொல்ல, அப்பிராமணர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை.

அப்போது துளசிதாசர், அந்த மாயா வேதியருக்கு வட்டித்திருந்த அன்னத்தைத் தம் கரங்களில் எடுத்துக்கொண்டு, "சாதுக்களே! ராமா என்னும் திருமந்திரத்தின் பலனை உங்களுக்குக் காட்டுகிறேன், வாருங்கள்," என்று அவர்களை அழைத்துக்கொண்டு, விசுவநாதர் ஆலயத்திற்குள் பிரவேசித்தார். அங்கே கல்லுருவான இடபத்தின் முன்னே அவர் கொண்டு வந்த அன்னத்தை வைத்துப் பரமசிவனைத் தியானித்து, நந்தியைப் பணிந்து, 'ரா' என்பது பரமசிவனும், 'மா' என்பது ஆதி சத்தியுமாகி, அவ்விரண்டு எழுத்துக்களும் சேர்ந்த, 'ராமா' என்னும் தாரக மந்திரமே சகல பாபங்களையும் ஒழிக்கும் என்பது உண்மையானால் இந்த அன்னம் உம்மால் புசிக்கப்படவேண்டும்" என்றார். உடனே, கல்லுருவா யிருந்த இடபம் எழுந்து நின்று, பலதரம் முக்காரம்போட்டது. பிறகு பிராமண ரூபமாய் நிற்கும் பகவானை அது பார்த்து, முன் கால்களால் வந்தனஞ் செய்து, தன் முன் வைக்கப்பட்ட அன்னத்தைப் புசித்து முன்போலக் கல்லுருவாயிற்று. தேவர்கள் ஆகாயத்தினின்றும் பூமாரி பொழிந்தார்கள். தேவ துந்துபி முழங்கிற்று. அப்போது மாயப் பிராமணரும் மறைந்தார். பிறகு, யாவரும் ஆச்சரியப்பட்டுத் தங்களுக்கு அறிவு புகட்ட, பகவானே எழுந்தருளி இவ்வித காரியங்களைச் செய்தார் என்று தெளிந்தார்கள்.



## பிரேதமான பிராமணன் உயிர் பெற்றது

துளசிதாசர் பற்பல தேசங்களில் தம்முடைய பெயர் விளங்க, அதிகமாகப் புகழ்பெற் றிருந்தார். அக்காலத்தில் டில்லி நகருக்கு அரசனான அக்பர் பாதுஷா, துளசிதாசருடைய மகிமையைப் பலரும் சொல்லக் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க வாரணாசியை அடைந்தான். அவன் ஒவ்வொரு நாளும் துளசி தாசரிடம் சென்று அவரைப் பணிந்து, அவருடைய நல்லுபதேசங்களைக் கேட்டுக்கொண் டிருந்தான்.

அப்போது அந்நகரில் ஒரு விப்பிரன் தேகவியோகமடைந்து விண்ணாடு சேர்ந்தான். மகா பதிவிரதையான அவ்வேதியன் மனைவி, தன் காவலன் மரித்ததைக்குறித்து, மிகவும் புலம்பிக் கண்ணீரால் கணவனைக் கழுவி, "அந்தோ! இனி என்ன செய்வேன்? நான் விதவையானபின் இவ்வுலகில் இருப்பது பழுதல்லவா? பதியே தெய்வமென்றும், பதி சேவையே மோட்சமென்றும் எண்ணி இருந்த எனக்கு இத் துன்பம் நேரிடலாமோ? பிராண நாயகனைப் பிரிந்து நான் பிராணனுடன் எப்படி இருப்பேன்? கடவுளே! சீதையை இராவணன் எடுத்துக்கொண்டு போனபோது, நீர் சொல்வதற்கு அபாரமான துக்கசமுத்திரத்தில் அமிழ்ந்தீர் அல்லவா? சகல சத்திகளிலும் வல்லமையுடைய சீதாபிராட்டி உம்முடைய பிரிவாற்றாமல் அழலில் வைத்த மெழுகைப்போலக் கதறி யழுதிருக்க, ஒரு வல்லமையும் இல்லாத என்னால் பிராணநாயகனைப் பிரிந்திருக்க லாகுமோ! பதியின் பட்சத்தைப் பட்சிகளே சகிக்காமல் தட்சணம் இறக்குமாயின் ஐந்தறிவுள்ள நான் மரணமடையாமல் இருப்பேனோ? கங்கையிற் போடக் கொண்டுபோகும் என் கணவனுடன் நானும் போய் அந்த நதியில் குதித்து இறப்பதே நன்மையாகும்" எனத் துணிந்து, பிரேதத்துடன் கங்கையை நாடிச் சென்றாள்.

அவள் போகும் வழியில், துளசி தாசருடைய மடத்தைக் கண்டு, துளசி தாசரைச் சேவித்துப்போக அவாவுற்று உள்ளே நுழைந்தாள். அங்கே அக்பர் பாதுஷா முதலானவர்கள் கூடி யிருந்தார்கள். அம்மாது, துளசிதாசருடைய பாதங்களில் பணிந்தாள். துளசி தாசர் அப் பிராமண ஸ்திரீயை நோக்கி, "அம்மா! நீ அஷ்ட ஐஸ்வரியமும், புத்திரபாக்கியமும் பெற்றுச் சுமங்கல ஸ்திரீயாய் வாழக்கடவாய்" என்று ஆசிர்வாதஞ்செய்தார். அதைக்கேட்ட பிராமணோத்தமி நகைத்து, "சுவாமி! தங்களுடைய ஆசிர்வாதம் எவ்வித பலனைத் தரும்? என் கணவன் இறந்து ஒரு ஜாமப் பொழுதாயிற்று. பந்துக்கள் அவருடைய சவத்தைக் கங்கையில் போடக் கொண்டுபோகிறார்கள். நானும் அவருடன் பாகீரதியில் குதித்திறக்க எண்ணங்கொண்டு தொடர்ந்து போகின்றேன். வழியில் உம்மைக்கண்டு தரிசனம் செய்து போக வந்தேன். உம்முடைய ஆசிர்வாதத்தைப் பெற்றேன். புருஷன் இறந்தபின் எனக்குப் புத்திர பாக்கியம் எங்ஙனம் உண்டாகும்? நான் சுமங்கலியாக வாழ்வது எப்படி? பகவானைப் பிரத்தியட்சத்தில் கண்ட மகானுபாவா! தங்களுடைய வாயில் பயனற்ற வார்த்தையும் பிறக்குமோ? உத்தமர்களுடைய ஆசிர்வாதம் எப்போதும் தப்பிப் போகமாட்டாது.

* "அடைந்தார் துயர்கூரா வாற்ற வினிதே
கடங்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்வியா ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற வினிது"

* தம்மை அடைந்தவர்கள் துன்பம் அடையாமைக்குக் காரணமான காரியங்களைச் செய்தல் இனிதாகும்; கடன் வாங்கியானாலும் செய்யத் தகுவனவாகிய காரியங்களைச் செய்வது இனிதாகும்; சிறந்து பொருந்திய கேள்வியை யுடையவர்களானாலும் நன்கு ஆய்ந்து, தகுவது இஃதெனத் தெரிந்து பிறகு சொல்லுதல் மிகவும் இனிதாகும்.



என்றபடி, உம்மை அடைந்த எனக்குத் துயரம் நீங்க நீர் அனுக்கிரகம் செய்யவேண்டும். நான் சுமங்கலியாய்ப் புத்திர பாக்கியத்தைப் பெறுதற் பொருட்டு என் கணவனை உயிர்ப்பிக்கவேண்டும்" என்று அவர் பாதங்களில் பணிந்தாள்.

அக்பர் பாதுஷாவும், அவனைச் சேர்ந்தவர்களும் இவ்வதிசயத்தைக் கேட்டு, "இப்போதுதான் துளசிதாசருடைய மகிமையை நேரில் பார்க்கவேண்டும். இறந்தவர்களை எழுப்ப எவராலாகும்? இவர் இந்த மாதுக்கு எப்படி உதவி செய்வார்?" என்று எண்ணிக்கொண் டிருந்தார்கள். துளசி தாசரோ, பிராமணமாது சொன்ன வாக்கியங்களைக் கேட்டுத் திடுக்கிட்டு, "ஆ! மோசம்போனேன்; என் வாயில் இவ்வித வார்த்தைகள் ஏன் பிறந்தன. இறந்தவர்களை எழுப்பல் எவராலாகும்?

* பிறக்குங்காற் பேரெனவும் பேராதிறக்குங்கால்
நில்லெனவு நில்லா துயிரினைத்தும்
* * * *

என்றபடி, நான் இறந்தவனுக்கு உயிர் வரச்செய்வது எப்படி?" என்று யோசித்துப் பகவானைத் தியானித்துப் பிறகு அம்மாதைப் பார்த்து, "அம்மா! என் வாயினின்றும் வந்த வார்த்தை நானே சொன்னதல்ல. அது பகவானுடைய வார்த்தையாகும். அதற்கு நான் செய்வதொன்றுமில்லை. எல்லாம் உன்னபடியே ஆகும். என் வாக்குப் பொய்த்துப்

* உயிரானது பிறக்குங் காலத்தில் இவ்வுடலை விட்டு நீங்கு என்று வேண்டிக்கொள்ளவும் எவ்வளவாயினும் நீங்காது; இறக்கின்ற காலத்தில் நீங்காதே என்று வேண்டிக்கொள்ளவும் எவ்வளவாயினும் நீங்காதிராது.

போனால் நான் என்ன செய்வது? நீ நாடிவந்த காரியம் எதுவோ அதைக் கவனித்து உன் கணவனுடன் போய்ச் சேர்" என்றார்.

அப்போது, பக்தவச்சலனாகிய பகவான் கங்கையிற் போடக் கொண்டுபோகும் பிரேதத்தினிடம் துளசிதாசரைப்போல் ரூபந் தரித்துச் சென்றார். அவர் பிரேதத்தைப் பார்த்து, "பிராமணா! உன் மனைவிக்கு நான் செய்த ஆசீர்வாத வார்த்தையின்படி, நீ எழுந்து என்னுடன் வா" என்றார். உடனே பிரேதமாய் இருந்த பிராமணன் உயிர்பெற்றெழுந்தான். அவனைச் சுமந்துசென்ற அந்தணர்கள் இதைக்கண்டு அதிசயித்து நின்றனர். அவ்வந்தணன், துளசிதாசருடைய பாதங்களில் விழுந்து பணிந்து, அவரைப் பலவாறு புகழ்ந்து, அவர் பின்னே சென்றான். கங்கையில் குதித்து இறக்க எண்ணங்கொண்டு வந்த பிராமணோத்தமி, துளசி தாசரும், மரித்த மணாளனும், வருவதைக்கண்டு ஆனந்தங்கொண்டு, மடத்திலிருந்த துளசி தாசர் இங்கெப்படி வந்தார்? என் கணவனுக்கு எப்படி உயிர் வரச்செய்தார்?" என்று ஆச்சரியப்பட்டு, அவர்களுடன் மடத்திற்குள் வந்தாள். அப்போது தன் கணவனுடன் வந்துகொண்டிருந்த துளசிதாசர் மாயமாய் மறைந்ததையும் துளசிதாசர் எப்போதும்போலத் தான் கண்ட இடத்தில் உட்கார்ந்திருப்பதையும் கண்டு திகைத்து மெய் மறந்திருந்தனள்.

நடந்த வர்த்தமானத்தையும் கேட்ட அக்பர் பாதுஷா ஆனந்தங்கொண்டு துளசி தாசரை நமஸ்கரித்து, "ஆ! உம்முடைய மகிமையை நான் அறியாதிருந்தது என் அறிவீனமேயாகும்? பூனைபோலிருந்து புலிபோற் பாய்ந்தது என்னும் பழமொழிப்படி நீர் உலக இச்சையிலிருந்து இப்பதவிக்கு உயர்ந்து, இறந்தவர்களை எழுப்பும் சக்தி வாய்க்கப்



பெற்றீர். இனி நான் ஒரு கணமும் உம்மை விட்டுப் பிரிந்திருக்கமாட்டேன். உம்முடைய சொந்த நாட்டுக் கெழுந்தருளி நாள்தோறும் எனக்குச் சேவைதந்து என்னை ஆட்கொள்ளவேண்டும்" என்று அவரை யானையின்மேல் ஏற்றிக்கொண்டு பிரயாணமானான். பகவான், தம்முடைய வாக்குப் பொய்யாகா வண்ணம் தம் வடிவந்தாங்கிப் பிராமணனை உயிர்பெறச் செய்த மகிமையைத் துளசி தாசர் புகழ்ந்து கொண்டாடினார். டில்லியில் துளசி தாசர் ஸ்ரீராமர் கோயிலொன்று கட்டிச் சாதுக்களை ஆதரித்துக்கொண்டிருந்தார்.

## வானரப் படையின் ஆரவாரம்

டில்லியிலுள்ள மகமதியர்கள், தங்கள் மன்னனாகிய அக்பர் பாதுஷா துளசிதாசருடைய உபதேசங்கொண்டு தெய்வத்தை வணங்குவதால் வியாகுலமடைந்தனர். அதற்காக அவர்கள் ஒரு சூழ்ச்சிசெய்தனர். அதாவது, அவர்கள் மன்னனை யடைந்து, "வேந்தே! நாம் அதிக பக்தி செலுத்தியும் விஷ்ணு தரிசனம் கிடைக்கப் பெற்றிலோம். வீணாக நாள்கள் கழிகின்றன. நீர் பகவானிடத்தில் மிகவும் அன்புடையவராய் இருக்கின்றீர். உமக்கே அவர் தரிசனம் கிடைக்காவிடில் எங்களைப்போன்ற பாவிகளுக்கு எங்ஙனம் கிடைக்கும்? துளசி தாசர் உண்மையாய் உம்மிடத்தில் பட்சமுடையவராயிருந்தால் ஒரு கணத்தில் இராமனை வரவழைப்பார். ஆதலால், நீர் துளசி தாசரிடம் போய் இன்று முதல் மூன்று தினங்களுக்குள் ஸ்ரீராமனை வரவழைக்கும்படி வேண்டிக்கொள்வீராகில் நம்முடைய விருப்பம் கைகூடும். நாங்களும் உம்மைத் தொடர்ந்து அவருடைய மனம் உருகும்படி மன்றாடுவோம்" என்றார்.

அதுகேட்ட அக்பர்பாதுஷா, துளசிதாசரிடம் போய், "நான் உம்மை அடுத்திருந்தும் உமக்குக் காட்சிதந்த

ஸ்ரீராமனை நீர் எனக்குக் காண்பிக்கா திருக்கின்றீர். இன்று முதல் மூன்று தினங்களுக்குள் அவருடைய தரிசனம் எனக்குக் கிடைக்கக் கிருபை செய்ய வேண்டும்'' என்று சொல்லித் தன்னிருப்பிடஞ் சென்றான். அவனைத் தொடர்ந்து வந்த மகமதியர்கள் துளசிதாசரை யணுகி, "ஹரிதாசரே! மன்னனுடைய அபிப்பிராயத்தின்படி நீர் உங்கள் பகவானை நாங்கள் காண வரவழைக்கவேண்டும். நீர் உண்மையாய்க் கடவுளை வழிபட்டவரா யிருந்தால் இன்னும் மூன்று தினங்களில் பகவானை எங்கள் முன்னிலையில் காட்டவேண்டும். அதுவரையில் நீர் இருக்கும் இந்த ஆசனத்தைவிட்டு அசைய லாகாது.'' என்று பிடிவாதம் செய்து, அவரை மூன்றுநாள் வரையிலும் அன்னபானாதிகளுக்குக் கூடப் போகவொட்டாமல் துன்பப்படுத்தினார்கள்.

"மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
வினத்தா லிகழப் படுவர்—புனத்து
வெறிகம் சந்தனமும் வேங்கையும் வேமே
யெறிபுனந் தீப்பட்டக் கால்"

என்றபடி, துளசிதாசர் தீய இனத்தோராகிய மகமதியருடைய நேசம் பெற்றதால் இவ்வித துன்பத்துக்குள்ளானார். அவர் என்ன செய்வார்? அவர் தம்முடைய வேதனையைப் பொறுக்கமாட்டாமல் ஆஞ்சநேயரைத் தோத்திரஞ் செய்தார். அவருடைய கஷ்டத்தை அறிந்த ஆஞ்சநேயர், மகமதியருடைய அக்கிரமத்தை ஒழிக்க எண்ணித் தம் சேனைகளாகிய வானரங்களைப் பார்த்து, "நீங்கள் டில்லிநகரத்

* காடு தீப்பட்டால் அதைச்சார்ந்த சந்தனமரமும் வேங்கைமரமும் வேகும்; அதுபோலக் குற்றமற்றவரானாலும் தீயோர் இனத்தைச் சார்ந்தால் இகழப்படுவார்கள்.



தில் பிரவேசித்து, துளசிதாசரைத் துன்புறுத்துவோரைப் பயந்தோடச்செய்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டார்.

அனுமாருடைய ஏவலைக்கொண்ட பதினாயிரம் வானரங்கள் டில்லிநகரை அடைந்து, சிங்காரத் தோட்டங்களைப் பாழாக்கி, மேடை மாளிகைகளைத் தகர்த்து, எதிர்த்தவர்களை மிதித்துத் துன்பப்படுத்தின. அவைகள் அரசமாளிகையில் பிரவேசித்து, அக்பர் பாதுஷாவைப் பங்கப்படச் செய்தன. பிறகு அந்த வானரங்கள் துளசிதாசரிடம் போய் அவரைச் சூழ்ந்திருக்கும் துஷ்டர்களைத் தாக்கிப் பலவிதங்களில் துன்பப்படுத்தின. அக் கூட்டத்தார்களில் அநேகர் மாண்டனர். சிலர் படுகாயமடைந்தனர். சிலர் பதுங்கி ஓடி ஒளித்தனர். சில நிமிஷங்களுக்குள் டில்லி நகரம் அல்லோல கல்லோல மாயிற்று.

அக்பர் பாதுஷா, துளசிதாசரிடம் வந்து அவரைப் பணிந்து, "மகானுபாவா! என் நகரம் அழிந்தது; என்னைச் சார்ந்தவருள் அநேகர் எமபுரம் சேர்ந்தார்கள். இந்த வானர சேனை எங்கிருந்து வந்தது?'' என்றான். அதற்குத் துளசிதாசர், "மன்னா! நீ இராம தரிசனத்தை விரும்பினாய். ஆகலால், அப்பகவான் வருவதற்குமுன் அவருடைய சேனையின் ஆயிரத்தில் ஒருபாகம் இப்போது வந்தது. மற்றத் தொளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதுபாகமும் இனி வரும். அதற்குப் பிறகு இராமர் வருவார். அவருடைய தரிசனத்தை அப்போது நீ காண்பாய்'' என்றார்.

அக்பர் பாதுஷா அதுகேட்டுப் பயந்து, "ஸ்ரீராமருடைய தரிசனம் எனக்குத் தேவையில்லை. அவருடைய சேனைகளாகிய யூகங்களை இந்நகரைவிட்டுப் போகும்படி செய்தால் போதுமானது. இவ்வளவு உபகாரம் தாங்கள் செய்யவேண்டும்'' என்று வேண்டினான். உடனே துளசி

தாசர் ஆஞ்சனேயரைத் தியானஞ்செய்து வானர சேனைகளை அழைத்துக்கொள்ளும்படி பிரார்த்தித்தார். அப்படியே அனுமார் அச்சேனைகளைத் தமதிடத்திற்கு அழைத்துக் கொண்டார். துளசிதாசருடைய மகிமையை அக்பர்பாதுஷாவும் அவனுடைய இனத்தாரும் புகழ்ந்தனர். பிறகு துளசிதாசர் அவ்வரசனைப் பரம பக்தனாகச்செய்து, தாம் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று பரமஞானியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தார்.

## ஞானதேவர்

——:o:——

திருமகள் உறையும் கங்காதீரத்தில் அப்பு நகரம் என்னும் ஒரு சிறந்த பட்டினம் உண்டு. அந்த நகரத்தில் கோவிந்த பண்டிதர் என்னும் ஒரு வைணவோத்தமர் இருந்தனர். அவருக்கு நற்குணங்கள் வாய்ந்த நீராபாய் என்னும் மனைவி இருந்தனள். அவர்களுக்குச் சந்ததி இல்லாமையால் வியாகுலமடைந்து நெடுநாள் வரையிலும் பகவானைத் துதிசெய்துகொண்டிருந்தார்கள். பிறகு, பகவானுடைய கடாட்சத்தினால் அவர்களுக்கு ஒரு புதல்வர் பிறந்தனர். அக்குமாரர் பிறந்த பன்னிரண்டாம் நாளில் அவருக்கு விடோபா என்னும் திருநாமமிட்டு, அவர்கள் அப்புதல்வரை அதிக செல்வமாக வளர்த்து வந்தனர். அவர் வளர்பிறைச் சந்திரனைப்போல நாளுக்குநாள் விருத்தியடைந்து, எட்டாவது வயதில் உபநயனம் செய்விக்கப்பெற்றுப் பிறகு கல்வியும் கற்கப் பெற்றார். வேதசாஸ்திர இதிகாச புராணங்களில் அவர் மிகுந்த தேர்ச்சியடைந்து இல்லறத்தில் வெறுப்பும் துறவறத்தில் இச்சையும் கொண்டார். தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்ற வைராக்கியமும் அவருக்குண்டாயிற்று. ஆதலால் அவர், தம் இச்சையைத் தாய் தந்தையர்களுக்குத் தெரிவித்து, அவர்களின் உத்தரவைப் பெற்றுப் பிரயாணப்பட்டார். அவர், பல தீர்த்தங்களிலும் முழுகி அநேக திவ்விய க்ஷேத்திரங்களிலுள்ள மூர்த்திகளை வணங்கி முடிவில் அளகாபுரி என்னும் நகரத்தை யடைந்தார். அந்நகரில் உள்ள சக்கரதீர்த்தத்தில் அவர் ஸ்நாநம் செய்துகொண்டிருக்கையில் அவ்வூரிலுள்ள

சித்த பண்டிதர்—ஒரு அந்தண சிரேஷ்டர் அவரைக் கண்டார்.

விடோபாவின் ஒழுக்கத்தைக் கண்ட சித்த பண்டிதர் சந்தோஷமடைந்து அவரை நமஸ்கரித்து, "ஐய! உமது தேசம் யாது? இவ்விடத்திற்கு நீர் வந்த காரணம் என்ன? உமது தாய் தந்தையர் ஜீவனோடு இருக்கின்றார்களா?" என்று கேட்டார். அதற்கு விடோபா, "நான் கங்கா தீரத்திலுள்ள அப்புநகரத்தில் வசிப்பவன். அவ்விடத்தில் என் தாய் தந்தையர் இருக்கின்றனர். நான் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டு அநேக திவ்விய க்ஷேத்திரங்களைத் தரிசித்துப் புண்ணியதீர்த்தங்களில் ஸ்நாநம் செய்துகொண்டே இங்குவந்தேன்" என்றார். அதைக் கேட்டுச் சித்தபண்டிதர் சந்தோஷமடைந்து, அவரைத் தம்முடைய இல்லத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அவருக்குச் சகல உபசாரங்களுஞ் செய்து, அறுசுவையுடன் கூடிய அன்னமிட்டனர். பின்னர், அந்நாள் முழுவதும் தம் வீட்டில் அவர் வசிக்க வேண்டுமென்று சித்த பண்டிதர் விரும்பியதால், விடோபா அதற்கிசைந்து அங்கே இருந்தனர்.

அன்றிரவு சித்த பண்டிதருடைய சொப்பனத்தில் பகவான் எழுந்தருளி, "உன் வீட்டில் இன்று வந்திருக்கும் பிரமசாரிக்கு உன் புதல்வியைச் சகல அலங்காரத்துடன் விவாகஞ் செய்து வைக்கவேண்டும்" என்று நியமித்து மறைந்து போயினர். சித்த பண்டிதர் உடனே விழித்துக்கொண்டு, தாம் கண்ட சொப்பனத்தை விடோபாவுக்குச் சொல்லினர். அதற்கு விடோபா, "பகவான் எனக்கு நியமித்தபடி நான் செய்கிறேன்" என்றார். மறுநாள் விடோபாவின் கனவில் பகவான் எழுந்தருளி, "அன்ப! உனக்கு நான்கு திவ்ய மூர்த்திகள் அவதரிக்க வேண்டியிருப்பதால்,



என் நியமனத்தின்படி சித்த பண்டிதருடைய குமாரத்தியை நீ விவாகம் செய்து கொள்ளவேண்டும்" என்று சொல்லி மறைந்தார். விடோபா நித்திரை விட்டெழுந்து, தாம் கண்ட கனவின் விருத்தாந்தத்தைச் சித்த பண்டிதருக்குத் தெரியச் சொல்லினர். அவர் அதுகேட்டு ஆனந்தமடைந்து, அப்போதே பிராமணர்களை வரவழைத்து, முகூர்த்தநாள் நிச்சயித்துச் சகல வைபவங்களுடன் தமது கன்னிகையை விடோபாவுக்குத் திருமணஞ் செய்துவைத்தார்.

விவாகம் நடந்த பிறகு சித்த பண்டிதர், தம் புதல்வியையும் மருமகனையும் அழைத்துக்கொண்டு, பரம பாகவதர்கள் வசிக்கும் பண்டரி புரத்திற்குச் சென்று பாண்டுரங்கனைச் சேவித்தார். பிறகு விடோபா, சேது யாத்திரை செய்ய விரும்பி மாமனாரிடம் உத்தரவு பெற்றுப் பிரயாணமானார். சித்த பண்டிதர் தமது மனைவி மக்களுடன் அளகாபுரத்தைச் சேர்ந்தனர். விடோபா அநேக புண்ணிய தீர்த்தங்களில் முழுகியும், ஆங்காங்குள்ள க்ஷேத்திரங்களில் எழுந்தருளி இருக்கும் மூர்த்திகளைத் தரிசித்தும் சென்று, சேதுவில் ஸ்நானம் செய்து, திரும்பி மாமனார் வீட்டை அடைந்தார்.

சில தினங்கள் சென்ற பிறகு விடோபா, சித்த பண்டிதரைப் பார்த்து, "அப்பு புரத்தில்வசிக்கும் என் தாய் தந்தையரைத் தரிசிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆகையால், நான் அங்குப் போய் வர உத்தரவளிக்க வேண்டும்" என்று கேட்டு விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார். அப்போது பண்டிதர், "இவருக்கு என் புதல்வியைக் கொடுத்து விவாகஞ் செய்வித்ததை இவருடைய தாய் தந்தை அறியார்கள். ஸ்ரீ பண்டரி நாதரே காரணமாயிருந்து அவ்விவாகத்தை நிறைவேற்றினர். ஆகையால், நாம் குடும்

பத்துடன் புறப்பட்டு, இவருடன் போய், இவருடைய தாய் தந்தையரைப் பார்த்து வருவதே தகுதியாகும்" என்று எண்ணித் தமது மனைவி மகளுடன் விடோபாவைப் பின்பற்றிச் சென்றார். அப்பு புரத்திற்குச் சென்றவுடன் விடோபா, கோவிந்த பண்டிதரை நமஸ்கரித்துப் பகவானுடைய நியமனத்தினால் நடந்த விருத்தாந்தத்தை அவருக்குத் தெரிவித்தார். விடோபாவின் தாய் தந்தையர் அது கேட்டு, ஆனந்தக் கடலில் மூழ்கினவர்களாகித் தங்களுக்கு வந்தனம் செய்து நின்ற புதல்வனுக்கும், மருமகளுக்கும் ஆசி கூறினார்கள். சித்த பண்டிதருக்கும், அவர் மனைவிக்கும் அவர்கள் அதிக உபசாரஞ் செய்தார்கள். சித்த பண்டிதர் அங்குச் சிலநாள் வசித்துத் தம் புதல்விக்குப் புத்திமதிகளைச் சொல்லிக் கோவிந்த பண்டிதரிடம் விடை பெற்றுத் தம் மனைவியுடன் அளகாபுரத்தைச் சேர்ந்தார்.

பிறகு, விடோபா, மனைவியுடன் தாய் தந்தையர்களுக்குப் பக்தியுடன் பணிவிடை செய்துகொண்டிருந்தார். அவருடைய தாய் தந்தையர் சிலநாள்களுக்குப் பின் வயோதிகத்தால் விண்ணுலகத்தை அடைந்தார்கள். விடோபா அவர்களுக்குப் பிரேதச் சடங்குகள் முதலானவைகளை நடத்திப் பக்தி யோகத்தினால் பகவானைச் சேவித்துக் கொண்டிருந்தார். இதைச் சித்தபண்டிதர் கேள்வியுற்று அதிக விசனமடைந்தார். அவர் உடனே அப்பு நகரத்திற்குவந்து, வைராக்கிய சீலராயிருக்கும் தம் மருமகரைப் பார்த்து, "மகானுபாவா! நீர் இப்படி விரக்தியுடனிருந்து சம்சாரத்தைக் காப்பது கஷ்டமாகும். ஆகையால், என் வீட்டிற்கு வந்து சுகத்துடனிரும்" என்றார். விடோபா அதற்குச் சம்மதித்தார். சித்த பண்டிதர், தம் புதல்வியுடன் அவரையும் அழைத்துக் கொண்டு அளகாபுரத்தைச் சேர்ந்தார். யாவரும் ஒரு வீட்டில் வசித்து, ஸ்ரீ பண்டரிநாதரைத் துதிசெய்தும், ஆஷாட



கார்த்திகை மாதங்களில் பண்டரி புரத்திற்குச் சென்று பிரமோற்சவத்தைச் சேவித்தும் சுகித்திருந்தார்கள்.

இப்படியிருக்க, விடோபாவுக்கு நாளுக்குநாள் வைராக்கியம் அதிகரித்தது. அவர் ஒருநாள் தம்முடைய மனைவியைப் பார்த்து, "நமக்கு விவாகம் நடந்து நெடுநாட்களாயின இதுவரையிலும் நமக்குச் சந்ததி உண்டாகாமற் போயிற்று. இனிமேல் உண்டாவது கடினமென்று தோற்றுகின்றது. ஆகையால், நான் காசிக்குச்சென்று, சந்நியாசம் பெற்றுக்கொள்ளலாமென்று யோசிக்கிறேன். இதற்காக உன் அனுமதியைப் பெற இச்சிக்கின்றேன்" என்றார். பர்த்தாவின் மொழியைக் கேட்ட, ருக்மாபாய் அதிக விசனமடைந்து, பதிலொன்றும் சொல்லாமல் தன் தந்தையை நோக்கி, "பிதாவே! உமது மருமகன் இப்போது சந்நியாசம்பெற விருப்புற்று என் அனுமதியைக் கேட்கின்றனர். நான் அவருக்குப் பதில் ஒன்றும் தெரிவிக்கவில்லை" என்று சொல்லித் தன் கண்களில் நீரை விட்டனள்.

சித்த பண்டிதர், தம் புதல்வியைப் பார்த்து, "அம்மா! நீ வருத்தப்படாதே. சந்ததியடைந்து பிதுர்க்கள் கடனைத் தீர்க்கா முன்னம் மனிதர் சந்நியாசங் கொள்ளல் தகாதென்று வேதம் முறையிடுகின்றது. ஆதலால், உன் மணாளன் சாஸ்திரத்திற்கு விரோதமாய் எப்படி நடக்கலாகும்? அது முடியாத காரியம். நீயும் அவருக்கு அனுமதி கொடாமல் மௌனமாயிருத்தல் நலமாகும்" என்றனர். அவ்வுத்தமியும் தன் கணவனுக்குப் பதிலொன்றும் சொல்லாமலிருந்தனள்.

சில நாட்கள் சென்ற பிறகு, ஒருநாள் ருக்மாபாய் மெய்மறந்து நித்திரை செய்கையில், விடோபா அவள் சமீபத்திற் சென்று, "மாதே! நான் கங்கா யாத்திரை செய்யப் போகின்

றேன்" என, ருக்மாபாய் நித்திரை மயக்கத்தினால், விஷயம் இன்னதென்று அறியாமல், "அப்படியே செய்யுங்கள்" என்றாள். விடோபா, உடனே கருடன் வாயினின்றும் தப்பிய பாம்பைப்போல வீட்டினின்றும் வெளிப்பட்டு, பிரயாகைக்குச் சென்று, மூன்று நதிகள் சேரும் வேணியில் மூழ்கி, புஷ்கரத்திற்கு வந்து, அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அவ்விடமிருந்த வைஷ்ணவர்களுடன் பகவத்கீதை பாராயணஞ் செய்துகொண்டிருந்தார்.

இப்படி விடோபா ஒவ்வொரு நாளும் பாராயணம் செய்துகொண்டிருக்கையில், அதில், "தனிமையில் வாசஞ்செய்தும், மிதமாகப் புசித்தும், மனம் வாக்குக் காயங்களைத் தன்வயப்படுத்தியும், வைராக்கியத்தை அடைந்து, துர்க்குணங்களை விடுத்துத் தானென்னும் அகம்பாவத்தைப் போக்கினவன் பரப்பிரமத்தை அடைவான்" என்ற விஷயமிருக்கக் கண்டார். அதை யுணர்ந்ததும், "ஆ! நான் ஏன் கெட்ட வியாதி என்னும் புலியினால் பிடிக்கப்பட்டவனாயிருக்கிறேன்? விஷயங்களென்னும் பேய் என்னை ஏன் பிடித்துக்கொண்டிருக்கிறது? அந்தோ! நான் ஆசை என்னும் வலைக்குள் சிக்கியிருக்கின்றேன்; பந்துமித்திரர்களென்னும் சிங்கத்தினால் விழுங்கப்பட்டவனாயிருக்கிறேன்; சம்சாரமென்னும் கடலில் மூழ்கியிருக்கின்றேன். இனி நான் கீதாசாரியரின் உபதேசத்தின்படி பரப்பிரமத்தைக் காணும் பாக்கியத்தைப் பெறுவேன்" என்று நிச்சயித்துக்கொண்டார். அதன்மேல் அவர் அதிக தூரங் கடந்து காசிக்குச்சென்று, இராமாநந்த சுவாமிகள் ஆச்சிரமத்தில் பிரவேசித்து, அவரைச் சரணமடைந்து, "சுவாமி! எனக்குச் சந்நியாசம் அளித்துக் கிருபை செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.



அப்போது, இராமாநந்த சுவாமிகள் விடோபாவைப் பார்த்து, "நீ புத்திரனைப் பெற்றுப் பிதுர்க்களுடைய கடனைத் தீர்த்து விமுக்தனானாயா? தாய் தந்தைகள், புத்திர களத்திரங்களுக்கு ஏதுங் குறைவின்றி அவர்களைத் திருப்தியடையும்படி செய்து, அவர்கள் அனுமதியைப் பெற்று வந்தனையா? அன்றியும், நீ இந்த உலக வியாபாரத்தில் வெறுப்படைந்தவனாகி இருக்கின்றாயா?" என்று கேட்டார்.

அதுகேட்ட விடோபா உண்மையை மறைத்து, "சுவாமி! தேவரீர் கேட்டதுபோல சகலமும் எனக்கு அனுகூலமாயின. என் தாய் தந்தையர்கள் பரலோகத்தை அடைந்தார்கள்" என்றார். ஸ்ரீராமாநந்த சுவாமிகள் அதை உண்மையென்று நம்பி, விடோபாவைச் சந்நியாசி ஆச்சிரமத்திற் பிரவேசிக்கச் செய்தார்.

இந்த விருத்தாந்தத்தை யறிந்த ருக்மாபாய் மெய் சோர்ந்து, சற்றுநேரத்தில் தெளிந்து, தன் துக்கத்திற்குக் கரைகாணாமல் தவித்துக்கொண்டிருந்தாள். அவளின் துக்கத்தைக் கண்ட அவளுடைய தாய் தந்தையர்கள், அநேக இனிய வசனங்களை அவளுக்குச் சொல்லிச் சமாதானப்படுத்தியும் அவள் துக்கத்தை விட்டவளல்ல. "அந்தோ! இனி நான் என்ன செய்வேன்? அனாதி யானேனே. என் பிராணநாதர் என்னை மோசப்படுத்திச் சந்நியாசியாயினார்" என்று துக்கித்துத் தன் நாயகனைக் காணவேண்டுமென்னும் நோக்கத்துடன் ஒவ்வொருநாளும் அரசமரத்திற்குப் பயபக்தியுடன் பூசனைசெய்து; வலம் புரிந்து நமஸ்கரித்துக்கொண்டிருந்தனள்.

இப்படியிருக்க, அரசமரத்து நாராயணனுக்குக் கிருபையுண்டாகி அவர் ருக்மாபாய் கோரிய கோரிக்கைகள், சித்திக்கும்படியான பரிபக்குவகாலம் சமீபிக்கச் செய்தார். விடோ

பாவின் ஆசிரியரான இராமானந்த சுவாமிகள், சேதுயாத்திரைசெய்ய வெளிப்பட்டு வரும் வழியில் அளகாபுரத்தையடைந்து, ருக்மாபாய் ஆராதித்திருக்கும் அரசமரத்தடியில் வந்து மார்க்காயாசத்தைப் போக்கிக்கொள்ள அமர்ந்தார். அப்போது அந்த அரசமரத்தைப் பூசித்துப் பிரதட்சணம் செய்துகொண்டிருந்த ருக்மாபாய் அந்தமுனிவரைக் கண்டு, பயபத்தியுடன் நமஸ்காரம் செய்தாள்.

இராமாநந்த சுவாமி அந்த மா[illegible] பார்த்து, "அம்மா! நீ நல்ல புத்திரர்களைப் பெற்றுத் தீர்க்க சுமங்கலியா யிருப்பாய்" என்று ஆசி கூறினர். அதைக்கேட்டு ருக்மாபாய் புன்னகை செய்தனள். உடனே இராமாநந்த சுவாமி அவளைப் பார்த்து, "அரிவையே! நீ புன்னகை புரிந்தநின் காரணம் யாது?" என, ருக்மாபாய், "சுவாமி! புருடனில்லாமல் புத்திரர்கள் எப்படி உண்டாவார்கள்? என்னுடைய கணவரோ சந்நியாசி யாயினர். அதை நீர் அறியாமையால் இவ்வித ஆசி கூறினீர். நீர் அருளிச்செய்த மங்களவாக்கு எனக்குப் பயனற்றதாயிற்று. அவ்வாக்கை ஏற்றுக்கொள்ளும் பாக்கியத்தை நான் பெற்றிலேன். அந்தத் துர்ப்பாக்கியத்தை நினைத்தே நான் நகைத்தேன்" என்றாள்.

அதைக்கேட்டு இராமாநந்த சுவாமி திடுக்கிட்டு, "இஃது என்ன விந்தை? புத்திரனில்லாதவன் சந்நியாசியாகத் தகாதென்பது சாஸ்திரங்களில் விதித்திருக்க, அதற்கு விரோதமாய்ச் சந்நியாசி யானவனும், அப்படிப்பட்டவனுக்குச் சந்நியாசமளித்தவனும் பாவத்துக் குட்படுவார்களே" என்று நினைத்துத் தாம் செய்த காரியம் அவர் ஞாபகத்திற்கு வந்து கிலேசமடைந்தார். அவர் ருக்மாபாயினால் முன்நடந்த விருத்தாந்தங்களைக் கேட்டு, "ஆ! இப்படிப்பட்ட பிரமாதத்திற்கு நானே காரணன் ஆயினேன். விடோபா என்னை வஞ்சித்து, என்னால் சந்நியாசத்தைப் பெற்றுக்கொண்டான்.



224697

"ஐங்குரவ ராணை மறுத்[illegible]ர்வற்ற
எஞ்சாத நட்பினுட் பொய்[illegible]க்கும்—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்த[illegible]மும்
நற்புடையி லாளர் தொழில்"

என்றபடி என்னிடத்தில் அவன் பொய் யுரைத்ததுமன்றி அவன்பால் விருப்பமுள்ள மனைவியையும் துறந்தான். நான் அவனைப் பரீக்ஷை செய்யாமல் அவனுடைய சொற்களை விசுவாசித்து நம்ப[illegible]பாதகத்திற் குட்பட்டவனானேன்" என்று சிறிதுநேரம் சிந்தித்தார். பிறகு அவர் அத்தெரிவையை நோக்கி, "அம்மணி! உன் தாய் தந்தையர் ஜீவனுடன் இருக்கின்றார்களா?" என்று கேட்டனர். அதற்கு அந்த உத்தமி, "சுவாமி! எனக்குத் தாய் தந்தையர் முதலான பந்துக்க ளிருக்கின்றார்கள். யாவர் இருந்தும் என்ன பயன்? பிராணநாதனை விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியவில்லை" என்று சொல்லிக் கண்ணீரைப் பெருக விட்டாள்.

அந்த மானினியின் சோகத்தைக் கண்ட இராமாநந்தர், அம்மாதின் தந்தையை வரவழைத்தார். அவரும் வந்து, அந்த யோகியை வணங்கி, "அறிஞ! தேவரீர் எங்கு வசிப்பவர்? இங்கிருந்து எங்குப் போகின்றீர்?" என்றார். அதற்கு இராமாநந்த சுவாமிகள், "நான் காசிப்பதியில் வசிப்பவன். சேது யாத்திரை செய்யப் புறப்பட்டு இவ்விடத்திற்கு வந்தேன். இங்கு உமது புதல்வி தன் சரிதையைச் சொல்லினள்; அவள் பால் நடந்த அனர்த்தத்திற்கு நானே காரண

* அரசன், போதகாசிரியன், தந்தை, மூத்தோன், வமிசகுரு ஆகிய ஐந்து குரவருடைய கட்டளையை மறுத்து நடத்தலும், விரும்பிய குறையாமல் வளர்கின்ற நட்புச் செய்வாரிடத்து பொய் பேசுதலும், தன்னை மனத்தால் மகிழ்ந்த கற்புடைய மனைவியை விடுதலும், ஆகிய இம்மூன்றும் அறத்தினது இன்மை ஆறாதுடையாது (தீவினையுடையாது) தொழில்களாம்.

மானேன் என்பதை அறிந்திலேன். ஆகையால் என்னுடைய குற்றத்தை நீக்கிக்கொள்ளும் பொருட்டு மறுபடியும் காசிக்குப் போகின்றேன். நீரும் உமது சுதையை அழைத்துக்கொண்டு, என் பின்னே வாரும்" என்று கட்டளையிட்டார். உடனே சித்தபண்டிதர் தம் புதல்வியுடன் இராமானந்தரைப் பின் தொடர்ந்து, வாரணாசியைச் சேர்ந்தனர்.

பிறகு, இராமானந்த சுவாமிகள் தம்முடைய ஆசிரமத்தைச் சேர்ந்தவுடன் விடோபாவை அழைத்து, "நீ சந்நியாசம் பெறுதற்பொருட்டு, ஏன் பொய் சொல்லி, என்னை வஞ்சித்தாய்? இப்போதாகிலும் உண்மையைச் சொல்" என்றார். விடோபா அதுகேட்டுத் திடுக்கிட்டு, உடல் நடுங்க, "தேசிகரே! நான் சந்நியாசி ஆச்சிரமத்தை யடைய வேண்டுமென்ற பேராவினால் பொய் சொல்லி, வஞ்சகன் ஆயினேன். ஆதலால், என்னை மன்னிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

இராமானந்தர் அதுகேட்டு, விடோபாவின்மீது கிருபை கூர்ந்து, "நான் உன்னுடைய மனைவியை அழைத்து வந்தேன். ஆகையால், நீ என் வார்த்தையைத் தட்டாமல் உன் மனையாளுடன் உன் ஊரைச் சேர்ந்து, இல்லறத்தை நடத்திக்கொண்டிரு. இது பயனற்றதென்று எண்ண வேண்டாம். அருச்சுனன் மச்சயந்திரத்தைச் சேதித்துப் பாஞ்சாலியை அழைத்துக்கொண்டு, குந்திதேவியினிடம் வந்து, "அம்மா! நான் ஒரு கனி கொண்டு வந்தேன்" என்றான். மறைவிலிருந்த குந்திதேவி ஆலோசியாமல், "அக்கனியை, நீங்கள் ஐவரும் புசியுங்கள்" என்று சொல்லிப் பிறகு அதிக ரூபவதியான பாஞ்சாலியைக் கண்டு, "நான் பிழை செய்தேன். சங்கதி இன்னதென்று அறியாமல், 'நீங்கள் ஐவரும்



புசியுங்கள்' என்றேன். என்னுடைய சொல் எப்போதும் பொய்த்ததில்லை. நீங்களும் என் சொல்லை எக்காலத்திலும் மறுத்ததில்லை. என் சொல் நிறைவேறத் தக்கது. இதற்கு என்ன செய்யலாம்?" என்று சிந்திக்கலாயினள்.

தருமபுத்திரர், "அன்னையின் கட்டளையை மீறலாகாது; இதற்குச் செய்யவேண்டுவது யாது?" என்று யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது வேதவியாசர் அங்கு எழுந்தருளி, பாஞ்சாலி ஐவருக்கும் மனைவியாகத் தகுந்த சில காரணங்களைத் தெரிவித்துக் குந்திதேவியின் வாக்குப் பொய்யாகா வண்ணம் பாண்டவர்கள் ஐவருக்கும் திரௌபதையை மணஞ் செய்வித்தனர். உலகத்தில் ஒரு புருடனுக்கு ஒரு மனைவியா யிருக்கத்தக்க ஸ்திரீ ஐவருக்கு மனைவியாகியும், குந்திதேவியின் வாக்கு விசேஷத்தால் பதிவிரதையென்று மூவுலகங்களிலும் கொண்டாடப்பட்டிருக்கின்றனள். அதைப்போல, என் வார்த்தை இதுவரையிலும் பொய்யானதில்லை. 'நல்ல புத்திரர்களை நீ பெறுவாய்' என்று நான் உன் மனைவிக்கு ஆசி கூறினேன். என்னை அறியாமல், பகவான் என் வாயால் இவ்விதம் சொல்லச் செய்தமையால் அந்த மங்கல வாக்கு வீணாய்ப் போகலாகாது. இதுவுமன்றி, ருக்மாபாயை நீ மணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று பகவான் உன் சொப்பனத்தில் சொன்னகாலத்தில், 'உன்னால் நான்கு திவ்விய புருஷர்கள் அவதாரம் செய்யவேண்டியவர்களாயிருக்கின்றனர்' என்று அருள்புரிந்திருக்கின்றனர். ஆகலால், நீ உன் மனைவியுடன் கூடி வாழ வேண்டும்" என்று சொல்லி விடோபாவையும், ருக்மாபாயையும், சித்த பண்டிதர் முதலானவர்களையும் அளகாபுரிக்கு அனுப்பினர்.

விடோபா தம்முடைய மனைவி முதலியவர்களுடன் அளகாபுரம் சேர்ந்து, இல்லறத்தை நடத்திக்கொண்

டிருந்தார். அதுகண்ட அவ்வூரிலுள்ள சில பிராமணர்கள் அவர்மீது பொறாமை கொண்டு "சந்நியாசியான விடோபா மறுபடியும் எவ்வாறு இல்லறத்தானாகக் கூடும்? இவன் பூர்வம் செய்த கர்மத்தால் மறுபடியும் இல்லறத்தில் பிரவேசித்தான்" என்று பலவாறு அவரை நிந்திக்கலாயினர். விடோபா, அவர்கள் சொல்லைக் கவனியாமல், தம்முடைய ஆசான் இட்ட கட்டளையின்படி ஒழுகலாயினர். அவரை நிந்தித்து வந்த அவ்வூர்ப் பிராமணர்கள் அவரைத் தமது ஜாதியினின்றும் விலக்கிவிட்டனர். அதனால் விடோபா, அவ்வூரில் வசிக்க முடியாமல், காட்டில் ஒரு குடிசை கட்டிக்கொண்டு, அதில் தம் மனைவியுடன் காலங் கழித்து வந்தார்.

அவ்வாறிருக்க, ருக்மாபாயின் கருப்பத்தில் மூன்று புத்திரர்களும், ஒரு புத்திரியும் பிறந்தனர். இவர்களில் முதலில் அவதரித்தவர் சிவாம்சம்; அவருக்கு நிவர்த்தி தேவர் என்று பெயர். இரண்டாம் புத்திரர் விஷ்ணுவாம்சம்; அவர் பெயர் ஞான தேவர். மூன்றாவதாக அவதரித்தவர் சுயம்புவாம்சம்; அவர் பெயர் சோபான தேவர். கடைசியில் அவதரித்தவள் யோக மாயை அம்சம்; அவள் பெயர் முக்தாபாய். இந்த நால்வரும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டிருந்தார்கள். அதன்மேல் ருக்மாபாய் ஒருசமயம் தன் பதியை நோக்கி, "பிராணேசா! நமது மைந்தர்களுக்கு உபநயனச் சடங்கை முடிக்காம லிருப்பது எனக்குக் கவலையாய் இருக்கிறது" என்றாள்.

விடோபா தமது பிள்ளைகளை அழைத்துக்கொண்டு பிராமணர்களிடம் சென்று, "வேத பாரகர்களே! என்னுடைய பிழையை மன்னித்துத் தருமசாஸ்திர விதிகளின்படி எங்களுக்கு நற் கிரியைகளை நிறைவேற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதுகேட்ட அவ்வந்தணர்கள் "நீங்



களோ பாவிகள். உங்களுக்கு மாணபரியந்தம் விமோசனம் இடையாது. உங்களுடைய சரீரங்களைத் திரிவேணிகள் கூடும் நதிப்பிரவாகத்தில் விழத் தள்ளவேண்டும். அதுவே உங்களுக்குத் தகுதியாகும்" என்று உரைத்தார்கள். அது கேட்டு விடோபா வெறுப்படைந்து, பெண்டு பிள்ளைகளைத் துறந்து தேசாந்தரம் போயினர்.

பிதா சென்ற மறுநாள், நிவர்த்தி தேவர் முதலானவர்கள் மறுபடியும் அந்தப் பிராமணர்களிடம்சென்று, "உங்களால் வெறுக்கப்பட்ட எங்கள் தந்தை தேசாந்திரியானார். இனி நாங்கள் செய்யத்தக்கது யாது? எங்களுக்கு நீங்கள் என்ன விதிக்கின்றீர்கள்?" என்றனர். அதற்கந்தப் பிராமணர்கள், "உங்களுக்கு நாங்கள் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. நீங்கள் பைட்னி புரத்திற்குப் போவீர்களானால் அங்கிருக்கும் சாஸ்திர வல்லவர்கள், உங்கள் தோஷம் நிவர்த்தியாகக்கூடிய வழிகளைத் தெரிவிப்பார்கள். ஆதலால், அவர்களுடைய அநுமதியைப் பெற்று வந்தால் விதிப்படி உங்களுக்குச் செய்யவேண்டிய நற் கருமங்களை நாங்கள் செய்வோம்" என்று சொல்லி, அந்தப் பிராமணர்களுக்கு ஒரு கடிதத்தையும் எழுதி அவர்கள் கையில் கொடுத்தனர்.

அக்கடிதத்தைப் பெற்றுக் கொண்ட நிவர்த்திதேவர் முதலானோர் பைட்னிபுரம் சென்று, அங்குள்ள பிராமணர்களிடம் கொடுத்துத் தங்கள் குறையைச் சொல்லிக்கொண்டார்கள். பிராமணர்கள் அவர்களைப் பார்த்து, "நீங்களோ சந்நியாசிக்குப் பிறந்தவர்கள். அந்தத் தோஷ நிவர்த்தியின் பொருட்டு வேதங்களில் யாதும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், நீங்கள் பகவானை வழிப்பட்டு, அனவரதமும் பகவத் தியானிகளாய் இருக்கவேண்டும். அப்படிச் செய்வதனால் நீங்கள் புனிதராவீர்கள்" என்றார்கள். பிறகு, அவ் விப்பி

ரர்கள் அவர்களுடைய நாமதேயங்களைக் கேட்டு, ஞானதேவரைப் பார்த்து, "உனக்கு இப்பெயர் தகுமா? ஆதியோடந்தமாக வேதத்தை யறிந்தவனல்லவோ ஞானதேவன். மேலும், அப்பெயருக்கு உரித்தானவன் பதினெண்புராணங்களையும், அஷ்டமா சித்திகளையும் கற்றுணர்ந் திருக்க வேண்டுமே; தரித்திரனைச் சீமானென்றும், துர்ப்பலமுடையவனைச் சூரனென்றும், சொல்வதைப்போல ஏது மறியாத உனக்கு ஞானதேவன் என்ற பெயர் இடப்பட் டிருக்கிறது" என்று பரிகாசஞ் செய்தனர். அப்போது, ஒரு மகமதியன் ஒரு எருமைக் கடாவை ஓட்டிக் கொண்டு அவ்வழியாக வந்தான். அப் பூசுரர்கள் அதைக்கண்டு, "இந்த எருமைக் கடாவுக்கும் ஞானதேவன் என்ற பெயர் இடலாம்" என்று பின்னும் பரிகசிக்கலாயினர்.

ஞானதேவர் அது கேட்டு, வேதியர்களைப் பார்த்து, "ஆய்ந்தோர்களே! இந்த எருமைக் கடாவுக்கும் ஞானதேவன் என்ற பெயரை இடலாம். எனக்கும் இவ்வெருமைக் கடாவுக்கும் சிறிதும் பேதமில்லை. பகவான் ஒருவனே சகல உயிர்களிடத்திலும் வியாபித் திருக்கின்றான். அநேகவித ஆபரணங்களிடத்தில் சொர்ணம் ஒன்றே வியாபித்திருப்பதுபோலச் சகல பிரபஞ்சங்களிடத்திலும் பகவான் ஒருவனே வியாபித்திருக்கின்றான். ஆகலால், நீங்கள் தெரிவித்ததில் வித்தியாச மொன்றுமில்லை" என்று கூறினார். அந்தத் தொழு குலத்தோர் அதுகேட்டு, "நீ சொல்வது உண்மையானால் இந்த எருமைக் கடாவை அடித்தால் உன்னுடைய தேகத்தில் காயம் ஏற்படவேண்டுமே" என்று சொல்லி அந்த எருமைக் கடாவை அடித்தார்கள். அந்த அடி ஞானதேவர் முதுகில் பட்டுக் காயமுண்டாயிற்று. அதைக்கண்ட பிறகு அவ் விப்பிரர்கள் திருப்தி யடையாமல் ஞானதேவரை நோக்கி, "உனக்கும் இந்த மகிடத்திற்கும் சிறிதாயினும்



பேத மின்மை உண்மை யானால் இதனுடைய வாயினால் வேதங்களை ஓதச் செய்யும்" என்றார்கள். உடனே ஞானதேவர் அந்த மேதியின் அருகிற் சென்று, தமது கரங்களால் அதைத் தடவிக் கொடுத்து, "மகிடமே! உன் வாக்கினால் வேதத்தை உச்சரித்து, இந்த வேள்வியாளர்களுக்குச் சந்தோஷம் வரச் செய்வாய்" என்றார்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

என்று பெருநாவலரின் பொதுமறை வாக்கியத்தின்படி, ஞானதேவரால் முடியாத காரியமும் உண்டோ? உடனே அந்த எருமைக்கடா, தன் தலையை உயர்த்தி, வேத வாக்கியங்களை உச்சரிக்கத் தொடங்கிற்று. இந்த ஆச்சரியத்தைக் கண்ட யாவரும் சந்தோஷ சித்தர்களாகி, "இவ்வதிசயத்தை நாங்கள் எங்கும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை" என்று சொல்லிக்கொண்டார்கள். சூரியனைக் கண்ட பனிபோல அவர்களுடைய கர்வம் அவர்களை விட்டு ஒழிந்தது; அவர்கள் மிக்க அவமானத்தையும் அடைந்தார்கள். "நாம் வேதபாரகர்களாகி உலகத்தில் என்ன அற்புதத்தைச் செய்தோம். ஞானதேவரைப்போல எருமைக் கடாவினால் வேதங்களை ஓதச் செய்யும் மகிமை நமக்கில்லாமற் போயிற்று. இந்த மகிமை, பிரமாதிகளுக்கும் இராது. இம்மூன்று சகோதரர்களும் திரிமூர்த்திகளின் அம்சமா யிருக்கவேண்டும். இவர்களுக் கிளையவன் யோக மாயையே எனத் தோன்றுகிறது. இல்லையாயின், இவ்விதமகத்துவம் இவர்களிடத்தில் எப்படி உண்டாகும்? இவர்களுடைய திருவடிபட்டமாத்திரத்தில் சகல

* பயனிறைந்த சொல்லை யுடைய முனிவரது மகிமையை இவ்வுலகத்தில் அவ ராணையாகச் சொல்லிய மந்திரங்களே காட்டி விடும்.

தீர்த்தங்களுக்கும் மகத்துவ முண்டாகத் தடையுண்டோ? இந்த மகான்களுக்குப் பிராயச்சித்தம் எதுக்கு? இவர்களே புண்ணிய சீலர்கள்.

> * "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
> செந்தண்மை பூண்டொழுக லான்"

என்றபடி, இவர்களே உண்மை அந்தணர்கள். நாம் சிட்டர்களின் திரவியத்தை அபகரிக்கும்படியான ஆசான்கள்" என்று சொல்லிக்கொண்டார்கள்.

ஞானதேவர் அவர்களைப் பார்த்து, "விப்பிரர்களே! நாங்கள் அறிவாளிக ளல்ல. நீங்களே சிறந்த ஞானிகள். உங்களால் எக்காரியமும் எளிதில் சித்தியாகும். எருமைக்கடா வேதம் ஓதியதும் உங்களுடைய மகிமையேயன்றி என்னாலானது ஒன்றுமில்லை" என்றார். அவருடைய சாந்தகுணத்திற்கு அம்மறையோர் வியந்து, அவரையும் அவருடைய சகோதரர்களையும், தங்களுடன் வைத்துக்கொண்டு அவர்களைப் பெருமைப்படுத்தி வந்தனர்.

பிறகு, ஞானதேவர், தம் துணைவர்களுடன் அந்தப் பைட்ணி புரத்தில் ஒரு வீட்டில் வசித்து, அந்நகரவாசிகளுக்குப் பகவத் பக்தி உண்டாகச் செய்துகொண் டிருந்தனர். இப்படியிருக்க, ஒருநாள் அவர்கள் குடியிருந்த வீட்டிற்குச் சொந்தக்காரனும், சாதுசங்கத்தில் பிரிய முடையவனுமாகிய சுசீலன் என்னும் பிராமணனுடைய வீட்டில் பிதுர் சிரார்த்தம் வந்தது. அந்தச் சுசீலன், அவ்வூரிலுள்ள பிராமணர்களைச் சிரார்த்தத்திற்கு வரும்படி அழைத்தான். அவர்கள், "உன் வீட்டில் சந்நியாசியின் புத்திரர்கள் வசிப்பதால் நாங்

* எல்லா வுயிர்களின் மேலும் செவ்வையான அருளை விரதமாகக்கொண்டு நடக்கையினாலே அந்தணரென்று சொல்லப்படுவோர் துறவறத்தி னின்றவர்.



கள் வரமாட்டோம்" என்று சொல்லிவிட்டார்கள். அதனால் அந்தச் சுசீலன் மிகுந்த துக்கத்தை யடைந்தான். ஞானதேவர் அதுகண்டு சுசீலனைப் பார்த்து, "நீ வருத்தப் படாதே. சந்தோஷமாகச் சமையல் ஆகட்டும். உன்னுடைய பிதுர்க்கள் வந்து புசிப்பார்கள்" என்றார். சுசீலன், அவருடைய வார்த்தையை நம்பி அறுசுவையுடன் கூடிய பதார்த்தவகைகளையும் திவ்வியான்னத்தையும் பாகம் செய்வித்து, ஞானதேவருக்கு அறிவித்தான். ஞானதேவர், பகவானைத் தோத்திரஞ்செய்து, அக்ஷதைகளை எடுத்து ஜபித்துப் போட்டார். உடனே சுசீலனுடைய பிதுர் தேவதைகள் நிஜரூபத்துடன் வந்தார்கள்.

உடனே, சுசீலன் ஆனந்த பரவசனாகிப் பயபக்தியுடன் அவர்களை வணங்கித் தான் தயார்செய்து வைத்திருந்த பிரசாதத்தை அவர்களுக்குப் பரிமாறினான். அந்தத் தேவதைகள் திருப்தியாக அதனைப் புசித்துக்கொண் டிருந்தனர். சிரார்த்தத்திற்கு வராதொழிந்த துஷ்டர்கள் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். பிதுர்க்கள் வேண்டுமளவு புசித்துச் சந்தன, புஷ்ப தாம்பூலாதிகள் பெற்றுச் சுசீலனுக்கு ஆசி கூறிச் சென்றனர். பைட்ணி புரவாசிகளாகிய அந்தணர்கள், "இந்த அதிசயத்தை என்றும் எவ்விடத்திலும் கண்டும் கேட்டு மறியோம். ஞானதேவருடைய ஒவ்வொரு காரியமும் வியக்கத்தக்கதே. இவர்கள் மூவுலகங்களையும் இரட்சிக்கவந்த மூர்த்திகளாய் இருக்கவேண்டும்" என்று பலவாறு அவரைப் புகழ்ந்தார்கள்.

பிறகு, ஞானதேவர் தம்முடைய சகோதர சகோதரிகளுடன் அளகாபுரத்திற்குச் செல்லத் தீர்மானித்தார். வேதம் ஓத வல்லமை யடைந்த, எருமைக்கடா அதுமுதல் வேதபாராயணஞ் செய்துகொண் டிருந்ததால், அதன்

சொந்தக்காரனான மகமதியனிடத்தி லிருந்தும் அதைத் தாம் வாங்கிக்கொண்டு, அதனோடு பிரயாணப்பட்டார். பைட்னி புரத்துப் பிராமணர்கள், அவர்களுடன் சற்றுத் தூரம் சென்று, அவர்களுக்கு வழிவிட்டுத் திரும்பினர்.

ஞானதேவர் முதலியோர் பகவானைத் துதிசெய்து கொண்டு, எருமைக் கடாவுடன் காலவ க்ஷேத்திரத்திற்கு வந்து, புரவரி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அவ்விடத்தில் சில தினங்கள் வசித்து வந்தனர். அப்போது அங்குள்ள மந்தமதி யுள்ளவர்களுக்கு உணர்ச்சி உதயமாகும்படி பகவத்கீதைக்கு ஒரு வியாக்கியானஞ் செய்தார்கள். பிறகு அவர்கள் அவ்விடத்தை விட்டுச் சொந்த நாட்டை நோக்கிச் சென்றனர். அப்படிப் போய்க்கொண் டிருக்கையில் வழியி லுள்ள அயோமுகி என்னும் கிராமத்தில் அவர்கள் கொண்டு வந்த எருமைக்கடா மரணமடைந்தது. அதை அவர்கள் அங்கே அடக்கஞ்செய்து அதற்குச் சமாதி ஏற்படுத்தினர். அந்தச் சமாதி இப்போதும் காணப்படுகின்றது.

பிறகு, அந்தச் சாதுக்கள் தங்கள் சொந்த நகரத்தைச் சேர்ந்தார்கள். பைட்னி புரத்தில் நடந்த அற்புதங்களைக் கேட்டிருந்த அந்நகர வாசிகள் ஞானதேவர் முதலியவர்களைக் கண்டு ஆனந்தமடைந்து, அவர்கள் செய்யும் பகவத் காலக்ஷேபங்களைச் சிரவணானந்தமாகக் கேட்டுக்கொண் டிருந்தார்கள்.

இப்படியிருக்க, அவ்வூரில் வசிக்கும் விசோபாகேசன் என்னும் பிராமணன் மாத்திரம் ஞானதேவர் முதலானவர்களை அவமதித்து, அவர்கள் சந்நியாசிக்குப் பிறந்தவர்களென்று தூஷித்து வந்தான். அப்போது தீபாவளி பண்டிகை வந்தது. அதற்காக நிவர்த்திதேவர், சில பலகாரங்களைத் தயார் செய்யும்படி, முக்தாபாய்க்குத் தெரிவித்தார்.



முக்தாபாய் அதற்குச் சம்மதித்துச் சகல பதார்த்தங்களையும் சேகரித்த பிறகு, புதிய பாண்டங்களை வாங்குவதற்குக் குலாலன் வீட்டிற்குச் சென்றனள்.

விசோபாகேசன் அவளுக்கு எதிரே வந்து, "நீ எங்கே போகின்றாய்" என்று அதட்டிக் கேட்டான். அதற்கந்தச் சிறுமி, "ஐயா! என் மூத்த சகோதரன் விரும்பிய வண்ணம் பலகாரங்கள் செய்வதற்காகப் புதிய பாண்டங்களை வாங்கக் குயவன் வீட்டுக்குப் போகின்றேன்" என்றனள். அதைக் கேட்டு, விசோபாகேசன் அக்கன்னிகைக்கு முன்னே குயவன் வீட்டிற்குப் போய், அப்பெண்ணுக்குப் பாண்டங்களைக் கொடுக்காதபடி திட்டஞ் செய்தான். அப்படி அவன் கொடுக்கும் பட்சத்தில், தனக்குக் கொடுக்கவேண்டிய கடனை அப்போதே கொடுத்துவிட வேண்டுமென்றும், அவனைப் பயமுறுத்தினான்.

அதைக் கேட்டுச் சக்கிரி,*

† "கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்கலினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகற
லெனைமாண்பு தானினிது நன்கு"

என்றபடி, "என் வரும்படிக்கு மிஞ்சி நான் அதிகமாகப் பொருளைச் செலவழித்துவிட்டமையால் எனக்கு இந்தக் கஷ்டம் சம்பவித்தது. இல்லறத்தில் வறுமையும், முதுமை

* சக்கிரி=குயவன்.

† கடனாக வாங்கிய பொருளால் உண்டு வாழாதிருத்தலைப் பார்த்தல் இனிதாகும்; கற்பு மாட்சிமையாகிய குணம் இல்லாத மனைவியரை விலக்கிடுதல் இனிதாகும்; மனத்தின் கண் மேன்மையாகிய குணம் இல்லாதவர்களை அஞ்சி நீங்குதல் மற்றெல்லாவகையாகிய மாட்சியினும் மிகவும் இனிதாகும்.

யில் புத்திர சோகமும், துஷ்டனிடத்தில் கடன் படுதலும் மிகுந்த துக்கத்திற்கு ஏதுவாகும். நான் இந்தத் துஷ்டனிடத்தில் கடன் வாங்கியதால் இவனுக்குப் பயந்து, பரமசாதுக்களுடைய விருப்பத்தை நிறைவேற்றக் கூடாதவனாயிருக்கிறேன்'' என்று வருத்தமடைந்து, முக்தாபாய்க்குப் பாண்டங்களைக் கொடுக்கா தொழிந்தனன். பாண்டம் கிடைக்காமையால் முக்தபாய் வீட்டை அடைந்து விசனப்பட்டுக்கொண் டிருந்தாள்.

ஞானதேவர், சகோதரியினுடைய விசனத்தின் காரணத்தை அவளிடம் கேட்டு, "தங்கையே! விசோபாகேசன் நம்மை அவமானப் படுத்தியதற்காக நீ வருந்தற்க. அவனுடைய குணம் அப்படியானால் நாம் அதற்கு என்ன செய்வது? நமது கர்மத்தை நாமே அனுபவிக்கவேண்டும். நீ செய்யவேண்டிய பலகாரங்களை என் முதுகின்மீது செய்வாய்'' என்று, தம்முடைய யோக மகத்துவத்தினால் ஜடாக்கினியைப் பிரகாசிக்கச் செய்தார். அவருடைய வாயிலிருந்து அக்கினிச் சுவாலைகள் கொழுந்துவிட்டுக் கிளம்பின. அவருடைய கண்கள் சிவந்தன. அவருடைய முதுகு காய்ந்த தோசைக் கல்லைப்போ லாயிற்று. முக்தாபாய், தன் முன்னவன் சொன்ன வண்ணம், அவருடைய முதுகின் மேல் பலகாரங்களைச் செய்து, அவைகளைப் பக்குவமாக எடுத்து அடுக்கினள். பிறகு, ஞானதேவர் ஜடாக்கினியை எப்போதும்போலத் தணியச் செய்தனர்.

அப்போது வெளியிற் போயிருந்த நிவர்த்திதேவரும், சோபான தேவரும் இல்லம் புகுந்தனர். பிறகு, யாவரும் முக்தாபாய் பாகஞ்செய்து வைத்திருந்த பலகாரங்களைப் பகவானுக்கு அவர்கள் ஆராதித்து, கோவிந்தநாம தியானத்துடன் புசித்துக்கொண் டிருந்தார்கள். அங்கே மறைவில்



பதுங்கியிருந்து, இவ்வதிசயத்தைப் பார்த்துக்கொண் டிருந்த விசோபாகேசன் ஆச்சரியப்பட்டுத் தன்னுடைய அக்கிரமத்திற்கு மிகவும் கலங்கினான். "ஆ! நான் மிகவும் மூடனும் பாக்கிய ஈனனும் ஆனதால், இவர்களுடைய மகிமையை அறியாமற் போனேன். பாக்கிய ஈனன் இரத்தினங்களைக் கற்களென்றே அறிவான். அதுபோல, இவர்களை நான் புண்ணியாத்துமாக்களென்று நினைக்காமல் சாதாரண மனிதர்களென்று நினைத்து மோசம் போனேன். அவர்களுக்குக் கெடுதி செய்து அபசாரப்பட்டேன். எனக்கு நற்கதி எப்படி உண்டாகும்? இதற்குப் பரிகாரமேது? கடவுளும் என்னை மன்னிக்கச் சமர்த்தரல்லர். இவர்களே என்னை மன்னிக்கக் கூடியவர்கள்'' என்று நினைத்து, அவ்வீட்டிற்குள் பிரவேசித்து, ஞானதேவருடைய *உச்சிட்டத்தைப் பலாத்காரமாகக் கைக்கொண்டு புசித்தான். அதன் மகத்துவத்தினால் அவனுடைய துர்க்குணங்கள் யாவும் காற்றிற் பஞ்சேனப் பறந்து போயின. பகவத்பக்தியும், நற் குணங்களும் அவனுக்கு அதிகரித்தன.

## அம்பரீஷன் சரிதை

அவன், ஞானதேவருடைய திருவடித் தாமரைகளில் பணிந்து, "மகானுபாவா! பூர்வத்தில் நபன் என்பவனுடைய புத்திரனான நரபாகன் குருகுலத்திலே அநேகநாள் வாசஞ் செய்துகொண் டிருந்தான். அவனுடைய சகோதரர்கள் அந்த நரபாகனை நீக்கித் தாங்கள் மாத்திரம் குடும்ப தனத்தைப் பங்கிட்டுக் கொண்டார்கள். பிறகு, நரபாகன் சகோதரர்களைப் பார்த்து, "எனக்கென்ன பங்கு வைத்தீர்கள்?'' என்று கேட்டான். அப்போது அவர்கள், "பிதாவை உன்னுடைய பாகமாகப் பிரித்து

* உச்சிட்டம்=எச்சில்.

வைத்தோம்" என்றார்கள். அதைக் கேட்டு நாபாகன் பிதாவை யடைந்து, அவனிடம் தன் சகோதரர்கள் சொன்னதைத் தெரிவித்தான். அந்த வஞ்சனையை உணர்ந்த அவன் பிதா அது கேட்டு, "குழந்தாய்! இப்போது மகா அறிஞர்களாகிய ஆங்கிரச ரிஷிகள் எக்கியம் செய்கிறார்கள். அவர்கள் அந்த எக்கியத்தில் செய்ய வேண்டிய வேதபாகங்களை அறியாமல் மோகித்திருக்கின்றார்கள். நீ மகா வித்துவானாகையால், அந்த வேத பாகங்களை அவர்களுக்குத் தெரியச் சொல். அவர்கள், எக்கியம் பூர்த்தியான பிறகு அந்தச் சத்திர யாகஞ் செய்து, மிகுதியாயுள்ள தனத்தை எல்லாம் உனக்குக் கொடுப்பார்கள்" என்றான். நாபாகன் அவ்விதமே செய்து, மிகுந்த தனத்தை எல்லாம் அடைந்தான்.

அப்போது கறுத்தும், சிவந்து மிருக்கிற வர்ணத்தை யுடைய ஒரு புருடன் அங்குவந்து, யாகத்தில் மிகுந்த தனம் தனதென்று நாபாகனிடம் கேட்டான். அதுகேட்டு நாபாகன், தனக்கு அந்தத் தனம் கிடைத்த விருத்தாந்தத்தை அவனிடம் தெரிவித்தான். அதற்கப்புருடன், "நாமிருவரும் உன்னுடைய பிதாவிடம் போய்க் கேட்போம்" என்று சொன்னான். அப்படியே அவ்விருவரும் நபனிடம் சென்றார்கள். (நாபாகனிடம் சென்று அவனை அவ்வாறு அழைத்துச் சென்றவன் ருத்திரனே.) அவர்கள் வந்த விருத்தாந்தத்தைக் கேட்ட நபன், யாகத்தில் மிகுந்த தனங்களை ருத்திரனுடைய பாகமாக்கினான். நாபாகன் அப்புருடனாகிய ருத்திரனை வணங்கி, அந்தத் திரவியத்தை அவனுக்குக் கொடுத்து விட்டான்.

ருத்திரமூர்த்தி, நாபாகனைப் பார்த்து, "உன்னுடைய பிதா சொன்ன தர்மத்தை நீ சத்தியமாகக் கொண்டாய். யதார்த்தவாதியான உனக்கு நித்தியமாகிய பிரமஞானத்தை



நான் உபதேசிக்கிறேன். அதை நீ கிரகித்துக் கொண்டு, எவ்வித ஆபத்திலும் அசத்தியத்தைச் சொல்லாமலிரு. இந்த யாகத்தில் மிகுந்த தனத்தை உனக்கே நான் கொடுத்து விட்டேன். அதை நீ பெற்றுக் கொள்" என்று சொல்லி மறைந்தார்.

அந்த நாபாகனுக்கு அம்பரீஷன் என்னும் ஒரு புத்திரன் உண்டானான். அவன் அளவில்லாத சம்பத்தையும் ஒப்பில்லாத ஆக்கியா சக்தியையும் பெற்றிருந்தும் அவ்வஸ்துக்களில் நிராசை யுடையவனா யிருந்தான். பகவானிடத்திலும், அவருடைய பக்தர்களாகிய சத்புருஷர்களிடத்திலும் அவன் அதிக பக்தி யுடையவன். அவன் தன்னுடைய மனத்தைப் பரந்தாமனுடைய பாதாரவிந்தங்களில் வைத்து இந்தப் பூமியைப் பரிபாலனஞ் செய்துகொண்டிருந்தான். பக்தி யோகத்தினால் அவன் பகவானைச் சந்தோஷிப்பித்துக் கொண்டு, படிப் படியாக மக்களிடத்தும், மனையிடத்தும் உள்ள பற்றுக்களெல்லாவற்றையும் நீக்கினான். அப்போது, பகவான் அந்த அம்பரீஷனிடத்தில் கிருபை வைத்துத் தம்முடைய சக்கரத்தை அவனுக்குக் கொடுத்தார்.

அந்த வீரனான அம்பரீஷன், ஒருவருஷம் வரையிலும் ஏகாதசி விரதத்தை அனுசரித்து வந்தான். அந்தத்தில் அவன், கார்த்திகை மாதத்தில் மூன்று நாள் உபவாசத்தோடிருந்து, யமுனாநதியில் ஸ்நாநம் செய்து, மதுவனத்தில் பகவானை அர்ச்சித்துத் துவாதசியில் பாரணைபண்ண ஆயத்தமானான். அந்தச் சமயத்தில் துருவாசர், அம்பரீஷனிடத்தே அதிதியாக வந்தார். அம்பரீஷன் அந்த மகாமுனியை எதிர்கொண்டு உபசரித்து பூசித்து, தன் வீட்டில் அவர் உணவுண்ணுமாறு அவரைப் பிரார்த்தித்தான். அவரும் அதனை அங்கீகரித்து, காளிந்தியினுடைய சுசியான தீர்த்தத்தில்

ஸ்நாநம் செய்து, பிரமத்தைத் தியானித்துக் கொண்டிருந்தார். அப்போது துவாதசியில் பாரணை செய்வதற்கு அரை முகூர்த்தமே மிகுந்திருந்தது. துருவாச முனிவர் இல்லாமல் அவன் பாரணை செய்தாலோ அதிக்கிரம தோஷமுண்டாகும்; துவாதசியில் பாரணை செய்யாமற் போனாலோ தோஷமேற்படும். இவ்விரண்டையும் அவன் யோசித்தான். முடிவில் ஜலபானம் செய்வதால் எவ்வித தோஷமுமில்லை என்று நினைத்து ஜலபானம் பண்ணினான்.

பிறகு, துருவாசர் தியானத்தை முடித்துவிட்டு, அம்பரீஷனுடைய இல்லத்திற்கு வந்தார். அந்த அரசன் செய்த காரியம் அவருக்குத் தெரிந்தது. அதனால் அவர் கோபம் அதிகரித்து, அங்கிருந்த பிராமணர்களைப் பார்த்து, "விப்பிரர்களே! இந்த அரசன் அதிதியாய் வந்த எனக்கு அன்னங் கொடாமல் ஜலபானம் பண்ணினான். அதன் பலனை நான் இப்போதே காட்டுகிறேன்'' என்று தம்முடைய சடைகளிலே ஒன்றைப் பிடுங்கி அதைக் கொண்டு, அந்த அரசனை நாசம் பண்ணும்படி, காலாக்கினிக்குச் சமானமான ஒரு பூதத்தைச் சிருட்டித்தார்.

உடனே, கத்தியைக் கையிலே பிடித்துக் கொண்டும், பாதத்தினால் பூமியை நடுங்கச் செய்து கொண்டும் அப்பூதம் அரசனுக்கு எதிரே வந்தது. அம்பரீஷன் அதைக் கண்டும் மனங் கலங்காமல் பகவானைத் தோத்திரம் செய்து கொண்டிருந்தான். அப்போது பகவானால் அம்பரீஷனுக்குக் கொடுக்கப்பட்ட சக்கரமானது, சர்ப்பம் போல் சீறி வந்த அந்த பூதத்தைத் தகித்துவிட்டு, மகாமுனிவரான துருவாசரையும் கொல்லுதற்குத் துரத்திக் கொண்டு போயிற்று. தம்முடைய பிரயத்தனம் வீணானது மன்றிச் சக்கராயுதம் தம்மைத் துரத்திக் கொண்டு வருவதைக் கண்ட துருவாசர்,



பல திசைகளிலும் ஓடினார். அவர் எங்குச் சென்றாலும் சக்கரம் விடாமல் அவரைத் தொடர்ந்து சென்றது. அவர் மேருவினுடைய குகையில் பிரவேசிக்க ஓடினார். அங்கும் அஃது அவரை விட்டபாடில்லை. அதுகண்ட துருவாசர் மிகவும் பயந்து, பிரமதேவரைச் சரண மடைந்தார்.

பிரமதேவர், அவ் விருடியைப் பார்த்து, "நீ பகவானுடைய பக்தனுக்குத் துன்பம் வரச் செய்ததால், உனக்கு நான் எவ்வித நன்மையும் செய்ய முடியாது'' என்றார். பிறகு துருவாசர், சிவபெருமானை அடைந்து, தம்மை இரட்சிக்கும்படி வேண்டினார். அவரும் அச்சுதனுடைய சக்கரத்தின் ஆற்றலை யடக்க ஆகாதென்று சொல்லி விட்டனர். அதன்மேல், துருவாசர் வைகுந்தம் சென்று, பகவானைப் பணிந்து, தம்மைக் காப்பாற்றும்படி பலவிதமாய்த் தோத்திரஞ் செய்தார். பகவான் துருவாசரைப் பார்த்து, "முனியே! நான் பக்தபராதீனன். ஆதலின் இவ்விஷயத்தில் எதையும் செய்தல் என்னால் இயலாது; அம்பரீஷ மகாராஜனையே நீ அடைவதுதான் தகுதி. நான் பக்தர்களால் வசீகரிக்கப்பட்டவன். பக்த ஜனங்களுக்கு நான் பிரியன். என்னுடைய இருதயத்தில் சாதுக்களும், சாதுக்களுடைய இருதயத்தில் நானுமாக இருப்பேன். என்னைவிட்டு வேறொன்றை அவர்கள் அறிகிறதில்லை. நானும் அவர்களை விட்டு ஒன்றையும் அறிகிறதில்லை. ஆகையினால் அவனுக்கு விரோதமாக நானொன்றும் செய்யேன்; எவனிடத்தினின்றும் உனக்கு உபத்திரவம் உண்டாயிற்றோ அவனையே நீ சீக்கிரமாக அடைவாயாக. உனக்கு இரட்சிப்பு உண்டாகும்'' என்றார்.

துருவாசர் உடனே அம்பரீஷனை அடைந்து, அவனுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டார். அம்பரீஷனும் தயையுடனே ஸ்ரீ ஹரியினுடைய சக்கரத்தை ஸ்தோத்

திரம் பண்ணினான். அம்பரீஷனுடைய மனோபாவத்தை அறிந்த அந்தச் சக்கரம் சாந்தியை அடைந்தது.

பிறகு, துருவாச முனியும் சக்கரத்தினால் உண்டான அக்கினியில் நின்றும் விடுபட்டவராய் அம்பரீஷனை ஆசிர்வதித்து ஸ்தோத்திரம் பண்ணினார். அம்பரீஷ மகாராஜாவும் அந்த மாதவனுடைய பாதங்களைப் பிடித்து வணங்கி, அவருக்குப் போஜனம் பண்ணி வைத்தான். துருவாசரும் அரசனால் கொண்டு வரப்பட்ட அமிர்தமயமான அன்னத்தைப் புசித்துத் திருப்தியடைந்து, ஆகாய மார்க்கமாக நித்தியமான பிரமலோகத்தை அடைந்தார்.

ஆகையால், யாருக்கு நான் உபத்திரவம் வரச்செய்தேனோ அவர்களாலேயே க்ஷமிக்கப்பட வேண்டியவனாயிருக்கிறேன். தங்களுக்குத் தீங்கு நினைத்த அடியேனை நீங்கள் இரட்சிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தான். உடனே ஞானதேவர், விசோபாகேசனுடைய பிரார்த்தனையை அங்கீகரித்து, அவன்மீது கிருபா நோக்கம் புரிந்தனர். அன்று முதல் விசோபாகேசன் பரமசாந்தனாகி, ஞானதேவருக்குப் பிரியனாய்க் காலங் கழித்து வந்தான்.

## நாமதேவருடைய வைபவம்.

அக்காலத்தில் பண்டரிபுரத்தில் தாமாஜி என்னும் பாகவத சிரேஷ்டர் ஒருவர் இருந்தார். அவர் ஒவ்வொரு நாளும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைப் பூசித்து வந்தார். அவருக்குக் குணாபாய் என்னும் உத்தம மனைவியுண்டு. அந்தக் கற்பரசி இடைவிடாமல் தன் கணவனுக்குத் தொண்டு செய்வதில் மிகுந்த ஆசை யுடையவள். இந்தத் தம்பதிகள் இருவரும், நாடோறும் ஸ்ரீ பாண்டுரங்கனை ஆராதித்து, அவ்வாராதனையன்னத்தைப் புசித்துப் பகவானுடைய புகழைப் பாடிக்கொண்டு, காலங் கழித்து வந்தனர். ஆனால், அவர்களுக்குப்



புத்திரன் இல்லாக் குறையால் சற்று வருத்தத்துடன் இருந்தார்கள்.

இப்படி யிருக்கும்போது, ஒருநாள் பகவான், தாமாஜியின் கனவில் தோன்றி, "உனக்குப் புத்திரனை அளித்தேன். நீ வருத்தப்படாதே. காலையில் பீமாநதிக்குப் போவாயானால் அங்கு ஒரு முத்துச்சிப்பி நீரில் மிதந்துகொண்டு உன்னிடத்திற்கு வரும்; அதில் ஒரு ஆண் மகவு இருக்கும். அஃது என்னுடைய அனுக்கிரகத்தினால் உண்டானது. அதை நீ எடுத்துக்கொண்டு போகலாம்'' என்று சொல்லி மறைந்தார். உடனே தாமாஜி விழித்துக்கொண்டு, பகவானைத் துதித்துத் தம் மனைவிக்கு அந்த விருத்தாந்தத்தைச் சொல்லி மகிழ்ந்திருந்தார்.

மறுநாள் வைகறையில் தாமாஜி, பீமாநதிக்குச்சென்று ஸ்நானஞ் செய்துகொண் டிருக்கையில், பகவான் தெரிவித்த வண்ணம் ஒரு முத்துச்சிப்பி நீரின்மேல் மிதந்து வருவதைக் கண்டார். அவர் அதிக சந்தோஷமடைந்து, அந்த முத்துச்சிப்பியை எடுத்து, அதிலிருந்த சிசுவை வீட்டிற்குக் கொண்டுபோய்த் தம் இல்லாளிடத்தில் கொடுத்தனர். குழந்தையைக் கண்ட அவ்வம்மை அதிக சந்தோஷ மடைந்தாள். அப்பிள்ளைக்கு அவர்கள் நாமதேவர் என்ற பெயரிட்டுப் பிரியத்துடன் வளர்த்து வந்தார்கள். நாமதேவர் நாளுக்குநாள் வளர்ந்து, கல்வியிற் சிறந்து விளங்கிக் கடவுள் பக்தியிலும் மேம்பட் டிருந்தார். அப்போது, ஒருநாள் தாமாஜி ஒரு காரியார்த்தமாகச் சமீப கிராமத்திற்குப் போக நேர்ந்தது. அவர், தம் மனைவியை யழைத்து, "இன்றைக்குப் பூசைத் திரவியங்களை நாமதேவனிடம் கொடுத்துப் பாண்டுரங்கனைப் பூசித்து வரும்படி அவனை அனுப்புக'' என்று சொல்லிப் போயினர்.

குணாபாய், கணவன் கட்டளையிட்ட வண்ணம், பூசைத் திரவியங்களை நாமதேவர் கையில் கொடுத்துப் பாண்டுரங்கன் சந்நிதிக்கு அவரை அனுப்பினாள். நாமதேவர் பூசைத் திரவியங்களுடன் பாண்டுரங்கன் சந்நிதிக்குச் சென்று, பரமபக்தியுடன் பெருமானைப் பூசித்து, அன்னத்தை எதிரில் வைத்து, "எம்பெருமானே! இதைப் புசிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார். தினந்தோறும் பகவான், தாமாஜி படைக்கும் அன்னத்தைப் புசிப்பாரென்றே நாமதேவர் நினைத்தார். அதை அவர் புசிக்காமையால், நாமதேவர் மிகக் கவலை கொண்டு, "ஜகதீசா! நான் நிவேதித்த அன்னத்தை நீர் ஏன் புசிக்காம லிருக்கின்றீர்? என் தந்தை கிராமத்திற்குச் சென்றதால் உமது ஆராதனைக்கு என்னை நியமித்தார். அதனால் நான் வந்து பூசித்தேன். இதை நீர் புசிக்காவிடில், நான் தவறு செய்ததாக என் அன்னை என்னை அடிப்பாள். என் தந்தை இதனை யறிந்தால் என்னைத் தூஷிப்பார். இதற்கு நான் என்ன செய்வேன்; அனாதரட்சகா! நான் என்ன குற்றம் செய்தேன்? ஆராதனைக் கிரமத்தை நான் அறியேன். கிருபைசெய்து இந்த அன்னத்தைப் புசியும். என்னைப் பசியோ வருத்துகின்றது" என்று தேம்பித் தேம்பி அழுதார்.

கிருபாநிதியாகிய பகவான், அந்தப் பக்தரின் முறைக் கிரங்கி அவருக்குப் பிரசன்னமாய், அவருடைய கண்ணீரைத் துடைத்து, அவர் நிவேதித்த அன்னத்தைப் புசித்தனர். பிறகு நாமதேவர் பகவானை வணங்கி வீட்டிற்குச் சென்றனர். அப்போது குணாபாய் அவரைப் பார்த்து, "நாமதேவா! பகவானுக்கு ஆராதனைசெய்த பிரசாதத்தை என்ன செய்தாய்" என்று கேட்டனள். அதற்கவர், "அம்மா! நான் அதை யாருக்கும் கொடுக்கவில்லை. அதைப் பாண்டுரங்கனே புசித்தார்" என்றார். குணாபாய் அதைக் கேட்டு



ஆச்சரியப்பட்டு, மறுநாள் தாமாஜி வந்தவுடன் இந்த அதிசயத்தை அறிவித்தாள். தாமாஜி அதைக்கேட்டு மிகவும் வியப்படைந்து, "நாமதேவா! நீ நேற்றுக் கொண்டுபோன பிரசாதத்தைப் பகவான் எப்படிப் புசித்தாரோ அதை நான் பார்க்கவேண்டும். ஆகையால், இன்றைக்கும் நீயே பகவானுக்கு ஆராதனை செய். நானும் உன்னைப் பின்தொடர்ந்து வருகின்றேன்" என்று சொன்னார். நாமதேவர் பூசைத் திரவியங்களுடன் பாண்டுரங்கன் சந்நிதிக்குச் சென்றார். தாமாஜியும் அவருடன் சென்றார்.

நாமதேவர் கடந்த தினத்தைப்போலவே பகவானுக்குப் பூசையாவும் முடித்து, அன்னத்தைப் படைத்து, "எம்பெருமானே! புசியும்" என்றார். அப்போது பகவான், தாமாஜி கண்களுக்குப் புலப்படாமல் நாமதேவருக்கு மாத்திரம் பிரசன்னராகி, "அன்ப! உன் தந்தை இங்கு வந்திருப்பதால் நான் புசிக்கமாட்டேன்" என்றார். நாமதேவர் அவரை வணங்கி, "பக்தவத்சலா! சகலத்தையும் பேதமின்றிச் சமமாய்ப் பார்க்கும் உமக்குப் பட்சபாதம் தகுமா? என் தந்தையை நீக்கி எனக்குமாத்திரம் உமது தரிசனத்தைக் கொடுத்தால் நான் உம்மை விடமாட்டேன். நான் மாத்திரம் உமக்கு என்ன ஊதியம் கொடுத்தேன். யாவராலும் துதிக்கப்பட்ட நீர் என் நிந்தனைக்கு ஆளாகின்றீர்" என்று பலவாறு வேண்டினர். அப்போது பகவான் கிருபைகூர்ந்து அவ்விருவருக்கும் புலப்படத் தரிசனம் கொடுத்து, நாமதேவர் நைவேத்தியம் செய்த பிரசாதத்தைப் புசித்து மறைந்து போயினர்.

பகவானுடைய சேவை கிடைக்கப்பெற்ற தாமாஜி ஆனந்தங்கொண்டு, "நாமதேவரைக் கட்டித்தழுவி, "என் ஊனக் கண்களுக்குப் புலப்படாத பகவானுடைய சேவை

உன்னால் கிடைத்தது. நீயே என் குல தெய்வம்'' என்று
கொண்டாடி வீட்டையடைந்து, நடந்த விருத்தாந்தம்
யாவும் தமது மனையாளுக்கு அறிவித்தனர். அவ்வம்மையும்,
நாமதேவரை அதிகமாய்க் கொண்டாடினாள். பிறகு, இராதா
பாய் என்னும் ஒரு கன்னிகையை நாமதேவருக்குத் திரு
மணம் செய்துவைத்தார்கள். கொஞ்ச காலத்திற்குப்
பின் இராதாபாய் ஒரு ஆண்குழந்தையைப் பிரசவித்தாள்.
அந்தக் குழந்தைக்கு நாராயணன் என்ற பெயர் இடப்
பட்டது.

இப்படி யிருக்க, தாமாஜியும், குணாபாயும் மூப்
படைந்து தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டவர்களானார்கள்.
ஒருநாள் குணாபாய் நாமதேவரைப் பார்த்து, "மகனே! நீ
சதாகாலமும் பகவானுடைய தொண்டு செய்துகொண்
டிருந்தால், சம்சார காரியங்கள் எப்படி நடக்கும்? உன்னைப்
போன்ற பகவத் பக்தர்கள் லௌகிக வைதிக காரியங்கள்
இரண்டிலும் சமர்த்தர்களாய் இருக்க வில்லையா? உன்னு
டைய நடவடிக்கை வேறுவிதமாய் ஏன் இருக்கவேண்டும்?
வீட்டில் அன்ன வஸ்திரங்களுக்கு வழியில்லாமல் அவஸ்தை
யாய் இருக்கின்றதே'' என்றாள்.

அதுகேட்ட நாமதேவர், பாண்டுரங்கன் சந்நிதியை
அடைந்து அப்பெருமானைச் சேவித்து, "கருணாநிதி! என்னை
ஏன் சம்சார பந்தத்தில் இருக்கச் செய்தீர்? நான் அதிலுள்ள
துக்கத்தைச் சகிக்கக் கூடாதவனாய் இருக்கிறேன். என்
தாயார் சம்சார விஷயத்தின் குறைகளைச் சொல்லி, எனக்கு
மனோவியாகூல முண்டாகச் செய்கின்றனள். உமது திரு
வடித் தாமரைகளை அடுத்து, நற்கதி அடையும் வகை யறி
யாத என்னை நீர் இரட்சிக்க வேண்டும்'' என்று வேண்டி
னார். பகவான் அவரைப் பார்த்து, "அன்ப! நீ எனக்குத்



தொண்டனா யிருக்க உன்னை எந்தப் பந்தமும் வருத்துவதற்
இல்லை. நீ விசனப்படாதே'' என்றார்,

அப்போது நாமதேவர், "பரம புருடா! உம்முடைய
நாமம் என்னால் சதாகாலமும் துதிசெய்யப்பட்டு வரு
கின்றது. என் மனமோ உமது ரூபத்தில் லயித்திருக்
கின்றது. என்னுடைய குடும்ப விசாரம் உமக்கே யல்லது
எனக்கேன் வரும்? நான் எத்தனை ஜன்மங்களெடுத்தபோதி
லும் உமது திருவடித் தாமரைகளை மறக்காத வரம் நீர் எனக்
குத் தரவேண்டும். இது தவிர மோக்ஷமுதலிய பதங்களை
நான் விரும்பேன்'' என்று பிரார்த்தித்துக்கொண் டிருந்
தார்.

## பகவான் வர்த்தகனாக வந்தது

நாமதேவருடைய மனைவியான இராதாபாய், தன் மாமி
யைப் பார்த்து, "உமது புதல்வர் இப்படி வீண் காலம்
கழித்து வந்தால் ஜீவனத்திற்கு என்ன செய்வது? நானும்
என் குழந்தையும் உண்ணச் சோற்றுக்கும் கட்டத் துணிக்
கும் கஷ்டப் படுகின்றோம். அவர் தொழும் பாண்டு ரங்க
னும் நமது வறுமையைப் பற்றிச் சிறிதும் கவனிக்கவில்லை.
அந்தப் பகவானே நமது குடும்பத்திற்கு இந்தக் கஷ்டத்தை
உண்டாக்கி இருப்பதாகத் தோன்றுகிறது. நம்மால் செய்யத்
தக்கது யாது?'' என்று வருத்தப் பட்டுக்கொண் டிருந்தாள்.
இவ்வோசை பாண்டுரங்கனுடைய செவியிற்பட்டது. கரு
ணைக் கடலாகிய அந்தப் பகவான், கேசவ செட்டி என்னும்
ஒரு வர்த்தகனைப் போல ரூபந்தரித்துக் கருடனை ஒரு எரு
தாகச் செய்து, அதன்மேல் வாரகன் மூட்டையை ஏற்றிக்
கொண்டு நாமதேவர் வீட்டை விசாரித்துச் சென்றார். அப்
போது அவ் வீதியி லுள்ளார் அவரைப் பார்த்து, "நாம
தேவர் வீட்டில் அன்னமின்றி யாவரும் பட்டினி கிடக்க

இவ் வர்த்தகருக்கு அங்கே என்ன கிடைக்கும்? இவர் ஏன் அங்குப் போகவேண்டும்?" என்றார்கள்.

வர்த்தகர், அவ்வீட்டின் அருகில் சென்று, இராதாபாயைப் பார்த்து, "அம்மணி! உங்கள் வீட்டிற்கு விருந்தினனாக வந்தேன்" என்றார். அது கேட்டு இராதாபாய், "வீட்டில் எஜமான் இல்லை" என்று சொல்லி, அங்கிருந்த ஒருவருடன் "பாகவதர்கள் அநேகர் எங்கள் வீட்டுக்கு வருகிறார்கள்; நான் என்ன செய்வேன்? தரித்திரம் எங்கள் வீட்டில் குடிகொண்டிருக்கின்றது" என்று அதிக விசனத்துடன் சொல்லிக்கொண்டிருந்தனள். வணிக வேஷந்தரித்த பகவான் அது கேட்டு, இராதாபாயைப் பார்த்து, "அம்மா! சற்று உட்காருவதற்கு மாத்திரம் வீட்டு நடையில் இடந் தரக்கூடுமா?" என்று கேட்டார். அதற்கு இராதாபாய் வாயிலின் குருக்கே நின்றுகொண்டு, "நீர் யார்? இங்கு வந்த காரியம் யாது? உமது பெயர் என்ன?" என்று கேட்க வர்த்தகர், "என் பெயர் கேசவ செட்டி. நாமதேவர் என்னுடைய நண்பர். ஆகையால் அவரை நான் பார்க்க வந்தேன். அவர் மிகவும் தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறாரென்று கொஞ்சம் திரவியம் கொண்டு வந்தேன்" என்றார்.

அதைக்கேட்ட இராதாபாய் சந்தோஷமடைந்து, அவரை மிகவும் உபசரித்து வீட்டிற்குள் அழைத்துக்கொண்டுபோய்த் தகுந்த ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்தனள். வர்த்தகர் இராதாபாயை நோக்கி, "அம்மையே! என் நண்பராகிய நாமதேவரைக் குடும்ப பாது காப்பின் பொருட்டுக் கஷ்டமடையச் செய்ய வேண்டாம். நான் கொண்டு வந்திருக்கும் பொருளை வைத்துக் கொண்டு, குடும்பச் செலவைப் பார்த்துக்கொள். நான் வந்து போன சமாசாரத்தை உன் கணவருக்குத் தெரியச் சொல்" என்று சொல்லித்



தாம் கொண்டு வந்த திரவிய மூட்டையை அம்மாதினிடம் கொடுத்து வெளிச் சென்றனர். திரவியத்தைக் கண்ட இராதாபாய் மிகவும் சந்தோஷமடைந்து, "என் கணவர் செய்யும் தொண்டுக்குப் பகவானே கிருபை செய்து இந்தத் திரவியத்தைக் கொடுத்திருக்க வேண்டும்" என்று நிச்சயித்தாள். திரவிய மூட்டையை அம்மாது பத்திரப்படுத்தி, அதிலுள்ள திரவியத்தில் சிறு தொகையை எடுத்து வீட்டுக்கு வேண்டிய பதார்த்தங்களைச் சித்தப்படுத்தினள்.

குணாபாய்க்கு இவ்விஷயங்களில் ஒன்றும் தெரியவராது. அவ்வம்மை எங்கேயோ போயிருந்து கொஞ்சம் அரிசி சேகரித்துக் கொண்டு வீட்டை நோக்கித் திரும்பினாள். அவ்வாறு திரும்பி வரும்போது, வழியிலுள்ள பாண்டுரங்கன் சந்நிதிக்குள் பிரவேசித்துப் பகவானைப்பார்த்து, "பக்தானுகூலா! உம்மிடத்தில் பரம பக்தியைச் செலுத்தும் எங்களுக்கு நீர் கஷ்டத்தையே கொடுத்தீர். உம்மால் எங்களுக்கென்ன அனுகூலம்? உமது தாட்சணியத்தை நாங்கள் பார்ப்பதால் என்ன உபயோகம்? நாங்கள் கஷ்டப்பட்டு வளர்த்து வந்த குமாரனை உமக்குத் தொண்டு செய்ய வைத்துக்கொண்டீர். இது நீதிதானோ? சாதுக்கள் உம்மைக் கபடநாடகரென்று சொல்வது உண்மையே. இரட்சகனென்னும் பெயர் மாத்திரம் நீர் வைத்துக் கொண்டு, அதற்குண்டான குணம் உம்மிடத்திலிராதிருந்தால் அப்பெயர் எதற்கு?" என்று நிஷ்டூரமாய்ப் பேசலானாள்.

பகவான் அது கேட்டுப் புன்னகை செய்து, "அம்மா! நீ ஏன் உன்னைக் கஷ்டப்படுத்திக் கொள்ளுகின்றாய்? என்னையும் ஏன் வீணில் தூஷிக்கின்றாய்? உன் பிள்ளைக்கு உன்னிடத்தில் பிரியமுண்டாயிருக்குமானால் அவனை நீ அழைத்துக் கொண்டு போகலாம். அவன் என்னுடைய அம்சமான

படியால் என்னைவிட்டு நீங்காம லிருக்கின்றான். எனக்கும் நாமதேவனுக்கும் உண்டாகிய சம்பந்தம் எப்பொழுதும் நீங்கக்கூடாததா யிருக்கிறது. நீ ஏன் அவனுக்காக இவ்வளவு அனுதாபப் படுகின்றாய்?'' என்றார். அதற்குக் குணாபாய் "எம்பெருமானே! என்ன விடை யளித்தீர்? கொடுங்கோல் மன்னன் குடிகளுடைய சொத்துக்க ளனைத்தையும் கொள்ளை கொண்டு, அன்ன வஸ்திரங்களுக்காக அவர்களைக் கஷ்டப்படச் செய்வதுபோல, எங்கள் வளர்த்த பிள்ளையை எங்களுக்கு உபயோக மாகா வண்ணம்.உமது தொண்டனாகச் செய்து கொண்டீர். இஃது உமக்கு நீதிதானோ? என்று கடுமையாய்ப் பேசினள்.

பகவான் அது கேட்டு, "குணாபாய்! நீ ஏன் என்மேல் கோபிக்கின்றாய்? உன் புதல்வனாகிய நாம தேவனை நீ அழைத்துக் கொண்டு போ'' என்று சொல்லி, நாம தேவருடைய கையைப் பிடித்துக் குணாபாயின் கையில் ஒப்பித்தார். குணாபாய், நாம தேவரை அழைத்துக் கொண்டுபோய் வீட்டைச் சேர்ந்தாள். அங்கே சகல பதார்த்தங்களும் நிறைந்திருப்பதையும், இராதாபாய், பலவித பலகாரங்களுடன் அன்னத்தைப் பாகஞ் செய்துகொண் டிருப்பதையும் கண்டாள். "ஆ! ஜகதீசன் அருள் நமக்குக் கிடைத்திருக்கிறது'' என்று சந்தோஷித்தனள். நாம தேவர் அங்குள்ள சம்பத்தைக் கண்டு "இஃது எங்ஙனம் கிடைத்தது?'' என்று மனையாளைக் கேட்டனர். உண்மையைச் சொன்னால் நாம தேவர் அப்பொருளைப் பாகவதர்களுக்குத் தானஞ்செய்து விடுவார் என்று இராதாபாய் மௌனமா யிருந்தனள்.

அப்போது வேலைக்காரியான ஜனாபாய், நாம தேவரிடத்தில், பகவான் கேசவ செட்டி என்னும் வர்த்தகனாக வந்து, திரவியங் கொடுத்துப் போன விருத்தாந்தத்தைத்



[illegible]ரிவித்தனள். அதைக் கேட்ட நாம தேவர், "இஃது [illegible]ன்ன விந்தை? அந்தகனுக்குத் தீபதானம் செய்ததைப் போல, எனக்குத் திரவியதானம் செய்தீர்'' என்று சொல்லி, அந் நகரிலுள்ள ஏழைகளுக்குத் தம் வீட்டிலிருந்த சகல வஸ்துக்களையும் தானஞ் செய்து, பரிசுத்த மனத்தாராகி, எப்போதும் போலப் பகவானுக்குத் தொண்டு செய்து கொண்டிருந்தார்.

## ஞானதேவர் நாமதேவருடன் யாத்திரை செய்தல்.

ஞான தேவர், விசோபாகேசனைப் புனிதனாகச் செய்த பிறகு, யாத்திரை செய்யும் நோக்கத்துடன் புறப்பட்டார். அவர் பண்டரிபுரத்தை யடைந்து, நாம தேவருடைய மகிமையைக் கேள்வியுற்று, அவரைத் தரிசிக்க வேண்டி அவருடைய வீட்டுக்குச் சென்றார். நாமதேவர் அவரை எதிர் கொண்டு அழைத்து வந்து சகல உபசாரங்களுடன் பூசித்தார். பிறகு அவர் அஞ்சலியஸ்தராய் "ஞானக் களஞ்சியமே! சம்சாரக் கடலில் மூழ்கினவர்களாகிய ஜீவர்களைக் கடைத்தேறச் செய்யும் மகிமையுடைய தாங்கள் இவ் வீட்டிற்கு எழுந்தருளியதால் நான் புனிதனானேன்'' என்று சொல்லிப் பணிந்தார். அப்போது ஞான தேவர், நாமதேவரைத் தமது இரண்டு கரங்களாலும் தூக்கி, "பாகவ தோத்தமா! உமது பாக்கியத்திற்கு அளவில்லை. பகவானுடைய கடாட்சம் உமக்கே பிராப்தியா யிருக்கின்றது'' என்று புகழ்ந்து, "நான் உம்முடன் தீர்த்த யாத்திரை செய்ய விரும்புகிறேன். ஆகையால், நீர் என் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்'' என்று மிகவும் வேண்டிக் கொண்டார்.

நாம [illegible] அது கேட்டு விசன மடைந்தவராகி, "கையில [illegible] ஜலத்தைக் கீழே கொட்டி விட்டு மேக ஜலத்தை [illegible]ம்புவது போலப் பாண்டுரங்கனுடைய

சேவையை விட்டு, வேறே இடத்திற்கு ஏன் போகவேண்டும்?" என்று யோசித்து, ஞான தேவரை நோக்கி, "நானோ பண்டரிநாதருக்குச் சுவாதீனம். நான் அவரையே வழிப்பட்டவனா யிருக்கிறேன். ஆதலால், நான் அந்தப் பகவானுடைய தரிசனத்தையே இடைவிடாமல் செய்துகொண்டிருக்கும்படி கிருபைசெய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர்.

ஞானதேவர் அதுகேட்டு, நாமதேவரைப் பார்த்து, "உம்முடைய அபிப்பிராயத்தை நான் அறிந்தேன். அப்படியானால் நாம் பண்டரிநாதருடைய அனுமதியைப் பெற்றுக்கொள்வோம்" என்று அவரை யழைத்துக்கொண்டு பகவானுடைய சந்நிதிக்குச் சென்று, சுவாமியைத் தோத்திரஞ்செய்து, தம்முடைய அபிப்பிராயத்தை விண்ணப்பஞ் செய்தனர். அதற்குப் பகவான் "ஞானதேவா! நீ தீர்த்தயாத்திரை செய்ய இச்சிப்பது சூரியன் பிரகாசத்தைக் கோருவதைப் போலிருக்கிறது" என்றார். ஞானதேவர், "ஜகதீசா! நீர் சொன்னது உண்மையேயாயினும் ஞானத்தைக் காட்டிலும் பக்தி மேன்மை யுடையதல்லவா? நாமதேவரோ பக்தியிற் சிறந்தவர். ஆதலால், நான் அவருடன் கூட யாத்திரை செய்து பக்தி மார்க்கத்தை யறிய விரும்பினேன். நீர் கிருபை செய்து என் எண்ணத்தை பூர்த்தி செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அப்போது, பண்டரிநாதர் புன் சிரிப்புடன் நாமதேவரைப் பார்த்து, "அன்ப! ஞானதேவன் மிகவும் பரிசுத்தன்; அவன் பிரம்ம சொரூப முடையவன். ஆகையால் நீ அவனுடன் சென்று, அவனுடைய எண்ணத்தின்படி நடந்துகொள். உன்னைப் பிரிந்து இருப்பது எனக்கு கஷ்டமாயிருக்குமாதலால் சீக்கிரத்தில் திரும்பி வந்து விடு" என்று



சொல்லி, ஞானதேவரைப் பார்த்து, "நாமதேவன் என்னுடைய உண்மை பக்தன். ஆதலால், அவனை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்" என்று தெரிவித்தார். ஞானதேவர் ஆனந்தமடைந்து, பண்டரி நாதனைச் சேவித்து, நாமதேவரை அழைத்துக் கொண்டு வெளிப்பட்டுப் போயினர். பகவான், நாம தேவருடைய பிரிவால் சற்று மனங்கலங்கி யிருந்தார். அதுகண்ட ருக்மணி தேவி, "நீர் மன வியாகுலத்துடன் இருப்பதேன்" என, எம்பெருமான், "பிரியையே! நாமதேவன், சகலமும் நானே எனப் பாவிப்பவன், தந்தை தாய் தமயன் மனைவி சிநேகிதர் முதலாகிய சகலரும் நானே என நம்பி இருப்பவன். அப்படிப் பட்டவனை நான் ஞானதேவன் பின்னே அனுப்பினேன். அந்த நாம தேவனுடைய பிரிவு எனக்கு விசனத்தை உண்டாக்குகின்றது. நான் உலகமென்னும் விருக்ஷத்திற்கு மூலமாகி யிருக்கின்றேன். நாமதேவன் அதற்குத் தாரகமாகும் ஜலமாகி யிருக்கின்றான். அந்த ஜலத்தை, ஞானதேவன் என்னும் மேகம் கைக்கொண்டு போயிற்று" என்றார்.

ருக்மணிதேவி அதுகேட்டு, "பக்தப்பிரியரே! நீர் சொல்வது உண்மையானாலும், சகல ஜீவராசிகளின் இதய கமலங்களில் வசிப்பவராகும் உமக்கு நாமதேவரின் பிரிவு எப்படி உண்டாகும்?" என, "நான் அரூபியாகியும், பக்தர்களின் அனுபவத்திற்காக வைகுண்டம் முதலிய தலங்களில் சொரூபியாகியும் இருக்கின்றேன். சூரியனுடன் கிரணங்களும், புஷ்டங்களுடன் பரிமளமும் நீங்காததுபோல என்னைப் பக்தர்கள் பிரிந்திருக்க மாட்டார்கள்" என்றார் பகவான்.

இப்படி யிருக்க, ஞானதேவருடன் போன நாமதேவர் அடிக்கடி திரும்பிப் பார்த்துப் பகவானை நினைப்பார். "கிருபைக் கடலே! எனக்குச் சகலமும் நீரா யிருக்க இப்போது

நான் உம்மைப் பிரியல் நேர்ந்ததே" என்று வருந்துவார். தாயைப் பிரிந்த பிள்ளையைப் போல அடிக்கடி மெய் சோர்ந்து நிலத்தில் விழுவார். அவருடைய சோகத்தைக் கண்ட ஞானதேவர், "பக்தசிகாமணி! பகவான் எங்கும் பரிபூரணனாகிச் சகலத்திலும் வசிக்கின்றான். அவன் உன் இருதயத்திலுமிருந்து சர்வசாக்ஷியாய் விளங்குகின்றான். நீர் ஏன் கலங்குகின்றீர்? பகவான் உம்முடைய மனத்தில் வசித்திருக்க, அவரைச் சதாகாலமும் தரிசித்து, ஆனந்தமடைவதல்லவோ உமது கடமை; அதைவிட்டு எம்பெருமானைப் பிரிந்ததாக விசனப்படல் ஆமோ?" என்றார்.

### இறந்த பசுவை உயிர்பெறச் செய்தது.

பிறகு, ஞானதேவரும், நாமதேவரும் அஸ்தினாபுரத்தைச் சேர்ந்தார்கள். அங்கே நாமதேவர் வழக்கம்போல எம்பெருமானுடைய கல்யாண குணங்களைத் துதிசெய்து கொண்டிருந்தனர். இவருடைய பக்தியை அவ்வூரிலுள்ளார் பார்த்து ஆச்சரியப்பட்டு, அவர்களும் பக்தி பரவசர்களாய் இருந்தார்கள். இவர்களுடைய மகிமையைக் கேள்வியுற்ற அப்பட்டினத் தரசன் இவர்களைச் சோதிக்க விரும்பினான். இவர்களுடைய பக்தி வைராக்கியம் பொய்யாயிருக்குமாகில் இவர்களுக்கு அவமானம் உண்டாக்க வேண்டுமென்று எண்ணினான். அவன், நாமதேவர் இருக்குமிடத்திற்கு ஒரு இறந்த பசுவைக் கொண்டுவந்து, "இந்தப் பசுவை நீ உ[illegible] பெற்றெழும்படி செய்வாயா? அவ்வாறு செய்வாயா[illegible] உன் பக்தியை உண்மை என்று நான் நம்புவேன். அப்படிச் செய்யாவிடில் உன்னை அவமானப் படுத்துவேன்" என்றான். அதற்கு நாமதேவர், "இந்தப் பசுவைப் பிழைக்கச் செய்யலாம்" என்றார்.

அப்போது, அரசன் நாமதேவரைப் பார்த்து, "அப்படியானால் இந்தப் பசுவை எத்தனை நாளைக்குள் பிழைக்கச்



செய்வாய்?" என, நாமதேவர், "நான்கு நாள்களுக்குள்ளாகப் பகவான் பிழைக்கச் செய்வார்" என்று தெரிவித்தார். அதைக் கேட்டு அரசன் சில சேவகர்களை அங்குக் காவலாக வைத்து அரண்மனைக்குப் போயினன். நாமதேவர் அப்பசுவின் தலையைத் தமது மடியின்மீது வைத்துக் கொண்டு, "பாண்டுரங்கா! பவபங்கா! இந்தச்சமயம் தேவரீர் இங்கு எழுந்தருளவேண்டும் இப்பசுவைப் பிழைக்கச் செய்து என்னை அபவாதத்தினின்றும் காப்பாற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பகவான் அங்கு வரவில்லை. அதனால், நாமதேவர் வியாகூலமடைந்து, "ஆபத்பாந்தவா! பக்தர்களுடைய பதிகங்களைக் கேட்டு என்னை நீர் மறந்தீரோ? யோகிகளுடைய இருதயத்தில் சிக்கி நின்றீரா? அடுத்தவர்களின் ஆபத்தை நீக்குவதற்காக எங்கேயாகிலும் சென்றீரா? பண்டரிபுரத்தில் பக்தர்களின் வலையிலகப்பட்டு வராதிருக்கின்றீரா?" என்று முறையிட்டார்.

அவ்வாறு முறையிட்டதைக் கேட்ட பாண்டுரங்கன் அங்குவந்து நின்றார். நாமதேவர் எழுந்து பகவானுடைய திருவடித் தாமரைகளைப் பிடித்துக்கொண்டு, "அநாதபந்துவே! ஏன் நான்கு தினங்களாக இங்கு வராமல் உபேக்ஷை செய்தீர்? இஃது உமக்கு நீதிதானோ?" என்று கேட்டார்.

பகவான், "அன்ப! என்மீது தப்பிதம் ஒன்றுமில்லை. இந்தப் பசு நான்கு நாள்களுக்குள் பிழைக்குமென்று நீ அரசனுக்குச் சொல்லியிருப்பதால், நான் சற்றுத் தாமதமாக வந்தேன். உடனே பிழைக்கச் செய்வதாக நீ சொல்லியிருந்தால், நான் அப்போதே வந்து பசுவைப் பிழைக்கச் செய்திருப்பேன். பக்தர்கள் எதை வேண்டினாலும் அவர்களைத் திருப்தி செய்வது என்னுடைய கடமையாகும். நான் பக்தர்களுக்குப் பரதந்திரனாயிருப்பவன்" என்று சொல்லிப்

பசுவைப் பிழைக்கச் செய்து, அவ்விடத்தி லிருந்து மறைந்தார்.

இந்த ஆச்சரியத்தைக் கண்ட சேவகர்கள் ஓடி அரசனுக்கு அறிவித்தார்கள். அரசன் அதைக் கேட்டு வந்து, நாமதேவருடைய திருவடிகளில் வணங்கி, "மகானுபாவா! உம்முடைய மகிமையை அறியாமல் நான் பிழை செய்தேன். நீர் ஹரிக்கு அந்தரங்க பக்தர் என்பதை அறியாமற் போனேன். மூடனாகும் நான் தங்களைப் பரீக்ஷிக்கத் தொடங்கிய பிழையை மன்னித்து, என்னைத் தொண்டனாக ஆட்கொள்ளவேண்டும்" என்று பிரார்த்தித்துத் தானும் அன்று முதல் பகவானைத் துதிசெய்து வந்தான். அந்நகரிலுள்ளார் அனைவரும் நாமதேவருடைய அற்புத செய்கையைக் கண்டு அவரைப் பலவாறு புகழ்ந்தார்கள்.

பிறகு நாமதேவர் ஞானதேவருடன் அஸ்தினாபுரத்தை விட்டு வாரணாசிக்கு வந்து, கங்காநதியில் ஸ்நானஞ்செய்து, அங்குள்ள தேவாலயங்களுக்குச் சென்று, பகவானைத் தரிசித்துச் சில தினங்கள் அங்குத் தங்கினர். அப்பதியில் வசித்துக்கொண்டிருந்த கபீர்தாசரை அவ்விருவரும் கண்டு, அவருடன் பஜனை செய்யலானார்கள். பிறகு அவ்விருவரும் கபீர்தாசருடைய அனுமதியைப் பெற்றுப் பல விடங்களில் தீர்த்த யாத்திரை செய்து திரும்ப கபீர்தாசரிடம் வந்தார்கள். கபீர்தாசர் அவர்களை உபசரித்து, அவர்களுடன் பஜனை செய்துகொண்டிருந்தனர். ஞானதேவர், நாமதேவருக்கும், கபீர்தாசருக்கும் அவர்களுடைய பூர்வ ஜன்ம விருத்தாந்தத்தையும், பகவானுடைய நியமனத்தையும் எடுத்துச் சொல்லினர். அதைக்கேட்ட அவ்விருவரும் வியப்படைந்து, ஞானதேவருடைய திருவடிகளில் பணிந்து அவரைத் துதிசெய்தார்கள்.



அப்போது ஞானதேவர், கபீர்தாசரைப் பார்த்து, "பக்தசிரோமணியே! பகவான் புண்டரீகனுக்குத் தரிசனம் கொடுக்கும் பொருட்டுப் பண்டரிபுரத்தில் எழுந்தருளி இருக்கிறார். அவர் பீமா நதிக் கரையி லிருந்துகொண்டு தம்மை ஆசித்தவர்களுக்கு அனுக்கிரகம் புரிகிறார். அவர் நாமதேவருக்குப் பிராணபதமாய் இருக்கிறார். அந்தப் புண்டரீக வரதனை நீர் தரிசனம் செய்யவேண்டியது அவசியம்" என்றார். கபீர்தாசர் ஆனந்தமடைந்தவராகி, "ஞான சிரேஷ்டரே! தங்களுடைய நியமனத்தின்படி நான் கார்த்திகை மாதம், சுக்கிலபக்ஷ ஏகாதசி யன்று அத்திருப்பதிக்கு வந்து சேருகிறேன்" என்று விண்ணப்பித்தனர்.

### கிணற்று ஜலம் மேலுக்கு வந்தது.

ஞானதேவரும் நாமதேவரும், கபீர்தாசருடைய அனுமதியைப் பெற்று மீண்டும் தீர்த்தயாத்திரைக்குச் சென்றார்கள். ஆங்காங்குள்ள திவ்விய தீர்த்தங்களில் அவர்கள் ஸ்நானம் செய்துகொண்டு, பிரயாகையைச் சேர்ந்தார்கள். அங்கே திருவேணியில் ஸ்நானம் செய்து, அயோத்தி, மதுரை, கோகுலம், துவாரகை முதலாகிய தலங்களைத் தரிசித்தார்கள். அவ்விடங்களிலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் அவர்கள் மூழ்கி, மார்வாடி தேசத்திற்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் தாகவிடாயினால் களைப்படைந்து, பல விடங்களில் தண்ணீர் தேடியும் அகப்படவில்லை. முடிவில் பாதையின் ஓரத்திலுள்ள ஒரு கிணற்றை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அதன் அருகிற் சென்று அதனுள்ளே உற்று நோக்கினார்கள். அதில் தண்ணீர் பாதாளத்தி லிருந்தது. ஞானதேவருக்குக் கிணற்றில் இறங்கும் பழக்கமிருந்தபடியால் அதற்குள் ளிறங்கித் தண்ணீர் பருகினார். நாமதேவர் இறங்க முடியாமையால் தாகவிடாயைச் சகியாதவராய்ப் பகவானைப் பிரார்த்தித்தார்.

சர்வ சக்தியும் உடைய பகவான், நாம தேவருடைய சகிக்க வொண்ணாத தாகவிடாயை அறிந்து, அதைத் தீர்க்கும் பொருட்டு, அக் கிணற்றுத் தண்ணீர் மேலே வந்து ஓடும்படி நினைத்தார். உடனே அக்கிணற்றி னின்றும் தண்ணீர் வெளிப்பட்டு ஓட ஆரம்பித்தது. அதைக் கண்ட நாம தேவர் பெரிதும் மகிழ்ந்து, அந்தத் தண்ணீரைப் பருகித் தாகவிடாயைத் தீர்த்துக்கொண்டார். இந்த அற்புதத்தைக் கண்ட ஞான தேவர் ஆச்சரியப்பட்டு, நாம தேவரைக் கட்டித் தழுவிக் கொண்டு, "நாம தேவரே! சங்கு சக்கர பீதாம்பரந் தரித்த பகவான் உமக்குச் சுவாதீனமாக இருக்கின்றார். உலக நாயகன் உமக்கு அநுகூலமா யிருக்க உமக்கு அசாத்தியமொன் றுளதோ!" என்று புகழ்ந்தார். பின்னர் அவ்விருவரும் அத்தலத்தை விடுத்துப்போயினர்.

நாம தேவரின் பொருட்டுப் பகவானால் உண்டாக்கப்பட்ட அந்தத் தீர்த்தத்திற்கு நாம தேவ தீர்த்தம் எனப் பெயர் வழங்கி வருகின்றது. இப்போதும் அந்தப் பிரவாகம் ஓடிக்கொண்டே யிருக்கிறது. அந்தத் தீர்த்தத்தில் தனுர் மாசத்தில் சாது ஜனங்கள் வந்து ஸ்நாநம் செய்துகொண் டிருக்கின்றார்கள். பிறகு, அந்த மகான்கள் இருவரும் ஹரித் துவாரத்திற்குச்சென்று, கங்கையில் ஸ்நாநஞ்செய்து, கேதாரீசனையும், பத்ரி நாராயணனையும் தரிசித்துப் பிறகு சாலக்கிராம நைமி சாரண்ணியங்களையும் தரிசித்தார்கள். அங்கிருந்து அவர்கள் கயா க்ஷேத்திரத்திற்குச் சென்று, பல்குனி நதியில் ஸ்நாநம் செய்து விஷ்ணு பாதங்களைத் தரிசித்துப் பிதுர்க் கடன்களைச் செய்தார்கள். பிறகு, அவர்கள் வைத்தீஸ்வரம், ஜகநாதம், கூர்மம், பீமேஸ்வரம், இராஜமகேந்திரம், சிம்மாசலம், மங்களகிரி, ஸ்ரீசைலம், திராக்ஷாராமம், விருபாக்ஷம், அகோபிலம், வேங்கடாசலம், காளத்தி, ருடிகாசலம், காஞ்சீ, வேதகிரி, அருணாசலம், ஸ்ரீமுஷ்ணம்,



சிதம்பரம், மாயவரம், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் முதலிய பல க்ஷேத்திரங்களுக்கும் சென்று கங்கை, யமுனை, சரயு, பிரபாசம், சோணபத்திரை, நாராயணி, கிருஷ்ணவேணி, கோதாவரி, நர்பதை, சிந்து, புஷ்கரம், பம்பாநதி, க்ஷீரநதி, காவிரி, கிருதமாலை, தாம்பிரபர்ணி, தனுக்கோடி ஆகிய பல தீர்த்தங்களில் முழுகினார்கள்.

### நாகநாதர் மேற்கு முகமாய்த் திரும்பியது

ஞானதேவரும், நாமதேவரும், மாசிமாதம் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி மகாசிவாத்திரி நாளில், நாக நாத புரத்திற்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் ஸ்நாநம் செய்து, அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நாகநாதர் சந்நிதானத்தை யடைந்தார்கள். அவர்கள் பகவானைக்கண்டு தண்டனிட்டு எழுந்து, மகா மண்டபத்தில் தங்கி, பகவந் நாம சங்கீர்த்தனைகளைச் செய்துகொண் டிருந்தனர். அப்போது, அநேகர் அங்குக்கூடி அந்தக் கீர்த்தனைகளைப் பக்தியுடன் கேட்டுக்கொண் டிருந்தார்கள். அவர்களுள் பலர் பரமானந்தத்தால் தங்களை மறந்து அசைவற் றிருந்தார்கள்.

இப்படி யிருக்க, அந்த ஆலயத்தின் அர்ச்சகர்கள் சுவாமியைப் பூசிப்பதற்கு வந்தார்கள். அவர்கள் அங்கிருந்த கூட்டத்தைக் கண்டு அதிசயித்தனர். கோயிலுள்ளே போவதற்கு வழியைக் கண்டிலர். அதனால் அவர்கள் பொறாமையுடைய மனத்தாராகி அக் கூட்டத்தார்களைப் பார்த்து, "நாங்கள் உள்ளே போவதற்கு வழிவிடுங்கள். இங்கே கூட்டம் எதற்கு? விலகி நில்லுங்கள். இஃது என்ன பெருங் கூச்சல். இந்த ஆடல் பாடல்களைப் பண்டரி புரத்திற்குப் போய்ச் செய்யுங்கள். அவற்றிற்கு இஃது இடமல்ல" என்று சொன்னார்கள்.

அங்குக் குழுமி யிருந்தோ ரனைவரும் பரம பக்தியுடன் பகவத் குணானுபவங்களைக் கேட்டுக்கொண் டிருந்ததால்,

அந்த அர்ச்சகர்கள் சொன்னதைக் கவனித்திலர். அது
கண்ட அர்ச்சகர்கள் கோபித்து, நாமதேவர் அருகில் வந்து,
"ஓய்! இஃது என்ன ஆடல் பாடல்? பகவான் சந்நிதிக்கு
வருபவர்களுக்கு வழி இல்லாமலிருக்கிறது இந்த ஆலயத்
திற்குப் பின் பக்கத்திற்குப்போய் உங்கள் இஷ்டம்போல்
ஆடிப் பாடிக்கொண் டிருங்கள்" என்று கடிந்து பேசினார்
கள். நாமதேவர் அதற்குச் சம்மதித்து ஞானதேவருடன்
மற்றப் பக்தர்களும் பின் பற்ற, ஆலயத்திற்குப் பின் பக்கம்
போய்ப் பகவந்நாம சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண் டிருந்
தார்.

நாமதேவர் பண்டரி நாதனை நினைத்துக் கொண்டு, பசு
வைப் பிரிந்த கன்றைப் போல அவருடைய பிரிவைச் சகிக்
கக் கூடாமல் அநேகமாய்த் தோத்திரஞ் செய்தார். அப்
போது, ஆகாயத்திலிருந்து ஒன்பது லட்சம் பகவத் பக்தர்
கள், மின்னற் கொடிகளைப்போலப் பிரகாசிக்கும் விருதுக்
கொடிகளைக் கைகளிற்றாங்கி வந்தார்கள். அவ்விடத்தி
லிருந்தவர்கள் எல்லாம் அக்காட்சியைக் கண்டு ஆச்சரியப்
பட்டு, "பரமபத நாதன் வருகிறான்" என்று பிரமித்துப்
பார்த்துக்கொண் டிருந்தார்கள். அந்த ஒன்பது லக்ஷம்
விருதுக் கொடிகளும் ஒன்பது லக்ஷம் சூரியர்களைப்
போலப் பிரகாசித்தன. இந்திராதி தேவர்கள் ஆகா
யத்திலிருந்து மலர்களை மாரிபோலப் பொழிந்தனர். அப்
போது கிழக்கு முகமாயிருந்த நாகநாதர், ஆலயத்துடன்
மேற்கு முகமாகத் திரும்பி, நாமதேவரைப் பார்த்து ஆனந்
தித்துக்கொண் டிருந்தார். அது கண்ட பக்தர்கள யாவ
ரும் பரமானந்தத்தால் மெய்ம் மறந்து கரதாளம் போட்டுக்
கீர்த்தனைகளைப் பாடிக்கொண் டிருந்தார்கள். நாமதேவரோ,
அந்த இரவெல்லாம் பகவானுடைய கல்யாண குணங்களைப்



பாடிக் கொண்டு, பக்தர்களின் செவிக்கு இன்ப மளித்துக்
கொண் டிருந்தார்.

அவ்வாறிருக்கச் சூரியோதய மாயிற்று. அங்கிருந்த
அர்ச்சகர்கள், நான்கு ஜாமங்களிலும் அறுடைய பூஜை
யைச் செய்து, உதயங் கண்டு, ஸ்நாநத்திற்காக வெளியே
வந்தனர். அப்போது, அவர்களுக்குச் சூரியன் மேற்கில்
உதயமானது போலத் தோன்றியது. அவர்கள் ஆச்சரியத்
துடன், "சூரியன் இன்று கதிதப்பி இருப்பது என்ன விப
ரீதமா யிருக்கின்றது. நாம் இரவெல்லாம் விழித்திருந்து
சிவபூஜை செய்ததால் நமக்குத் திக்பிரமை யுண்டா யிருக்க
லாம்" என்று யோசித்துப் பிறகு, "நாம் மோசம்போனோம்;
தீர்த்தங்கள் யாவும் முன்போலவே இருக்கின்றன. சூரியன்
க்ரமமாகக் கிழக்குத் திக்கிலேயே உதயமா யிருக்கிறான்.
நாகநாத சுவாமி மாத்திரம் ஆலயத்துடன் மேற்குமுகமாகி,
நாமதேவருடைய பக்திக்கு ஆனந்தித் திருக்கின்றார். சந்திர
சடாதாரியாகிய சாம்பமூர்த்தியே நாமதேவருடைய கீர்த்
தனைகளுக்குச் சொக்கி, இப்படிப்பட்ட செய்கையைச்
செய்தமையால் அவர் செய்கை மிகவும் அற்புதமானது.
நாம் கேவலம் பாமரர்களாகையால் இந்தப் பாகவதருடைய
மகிமையை அறியாமல் அபசாரப் பட்டோம்" என்று பக்தி
யுடன் நாமதேவரைப் பணிந்தனர்.

"பரம பாகவதோத்தமா! நீர் பகவானுக்கு அந்தரங்க
பக்தர் என்பதை நாங்கள் அறிந்தோம். நாராயண பக்தர்கள்
யாவரும் இதோ உம்மைத் தரிசனம் செய்யும் பொருட்டு
வந்திருக்கின்றனர். உமது சரித்திரம் மிகவும் புனிதமானது;
ஞானதேவர், தம்மைத் தூஷித்து நீக்கிய பிராமணர்களுக்
காக எருமைக் கடாவை வேதம் ஓதச் செய்தனர். தாங்க
ளோ, பொறாமை யடைந்தவர்களாகிய எங்களுக்கு அரிய
தோர் விஷயத்தைச் செய்து காட்டினீர்" என்று அவர்கள்

துதித்து நின்றனர். அப்போது, விருதுக் கொடிகளுடனிருந்த பக்தர்கள் மாயமாய் மறைந்தனர். அதுகண்ட யாவரும் ஆனந்த மடைந்தார்கள். அந்த நாகநாதர் சந்நிதி இப்போதும் மேற்குமுகமாகவே விளங்கி, நாமதேவருடைய கீர்த்திக்கு ஒரு அடையாளமாய் இருக்கின்றது.

பிறகு, ஞானதேவரும் நாமதேவரும் சிவபெருமானைத் தோத்திரம் புரிந்து, அப்பெருமானுடைய நியமனம் பெற்று வெளிப்பட்டுப் பண்டிரி புரத்திற்கு வந்தார்கள். அவர்கள் தூரத்தி லிருக்கிறபோதே கோபுர தரிசனம் காணப்பட்டவுடன், பகவானுக்கு வந்தனம்புரிந்து, பீமா நதியில் ஸ்நானம் செய்து திருக்கோயிலை அடைந்தார்கள். பகவானைக் கண்டவுடன் அவர்கள் ஆனந்த மடைந்து, நிலத்தில் விழுந்து சேவித்து நின்றார்கள். நாமதேவர் பகவானைப் பார்த்து, "ஜகதீசா! தேவரீருடைய நியமனத்தின்படி ஞானதேவருடன் தீர்த்த யாத்திரை செய்து வந்தேன். தேவரீரைப் பிரிந்த நாள்களை நான் யுகங்களாகக் கடத்தினேன். இனி நீர் எப்போதும் இப்படிப்பட்ட சம்பவம் நேரிடா வண்ணம் செய்ய வேண்டும். உம்மைப் பிரிந்தது முதல் நான் அனவரதமும் உமது ரூபத்தையே துதி செய்துகொண் டிருந்தேன். உமது திருவடித் தாமரைகளே எனக்குச் சகல பொருள்களுமாகி இருக்கின்றன" என்றார்.

பகவான் அவரைப் பார்த்து, "அன்ப! நீ செய்து வந்த பஜனை எனக்கு இரவும் பகலும் ஆனந்தம் விளைவித்தது. நீயே உண்மையான பக்தன் என்பதிலும் சந்தேக முண்டோ? நீ சர்வதேச, சர்வகால, சர்வ அவஸ்தைகளிலும், என்னையே நினைத்துக்கொண் டிருந்தனை" என்று சொல்லி, நாம தேவரைக் கட்டித் தழுவினார். அப்போது அங்கிருந்த வைணவ உத்தமர்களும், ஞான தேவர், சோபானதேவர், விசோபாகேசர் முதலான சாதுக்களும் பாண்டுரங்கதேவனை வணங்கி,



நாமதேவரைத் தழுவிய வண்ணம் ஜய ஜய வென்று சொல்லி ஆனந்த பரவச மடைந்தார்கள். அச் சமயத்தில் தேவர்களும், முனிவர்களும் ஆகாயத்திலிருந்து, பகவானைத் தோத்திரஞ்செய்தார்கள். உலக மாதாவாகிய ருக்மணி பிராட்டியும் ஆசி கூறி, நாம தேவருடைய முகத்தைப் பரிபூரண கிருபையுடன் பார்த்துச் சந்தோஷித்துக்கொண் டிருந்தனள்.

## பகவான் நாம தேவருக்கு விருந்து செய்தது

பிறகு பகவான் நாமதேவரைப் பார்த்து, "நீ தீர்த்த யாத்திரை செய்துவந்த படியால் பிராமணர்களுக்குத் ததியாராதனை செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிடில் யாத்திரை செய்தும் பலனில்லை" என்று சொல்லி, அவ்வூரிலுள்ள பிராமணர்களுக்கு விருந்து சொல்லிவரப் பிரயாணமானார். நிவர்த்தி தேவர், ஞான தேவர், சோபான தேவர் முதலானோர்கள் விருதுக் கொடிகள் பிடித்துக் கொண்டுவர, வழியிலுள்ளோர் அந்த அற்புதத்தைப் பார்த்துப் பின்தொடர, நாம தேவரை முன்னே நடத்திக் கொண்டு பகவான் ஒரு அந்தணனைப் போலப் பின்னால் சென்றார். அவ்விதம் சென்ற பகவான், நாமதேவ சமேதராகி ஊரிலிருக்கும் பிராமணர்கள் யாவரையும் விருந்துக்கு அழைத்துப் பட்டினத்தை வலம் வந்தார்.

அந்தச் சமயத்தில் பகவான் இருந்த கோலத்தைப் பார்த்த யாவரும், "இவர் சாதாரண பிராம்மணரல்லர்; பகவானே யாவர்" என்று சந்தேகித்தார்கள். இவருடைய முகத்தைப் பார்த்தவுடன் யாவருக்கும் ஆனந்தாதிசயம் உண்டாகித் தாபங்கள் தணிந்தன. பிராமணர்கள் யாவரும் சந்தோஷ மனத்தாகி அவரைப் பார்த்து, "தேவரீருடைய ஊரெது? பேர் யாது?" என்று கேட்டார்கள். அதற்குப் பகவான் "என்னுடைய பூர்வோத்தரம் யாவும் நாமதேவ

னுக்குத் தெரியும். என்னுடைய நண்பனும் இவன் தீர்த்த யாத்திரை செய்து வந்து, இன்று பாண்டுரங்கன் சந்நிதிக்குள்ளே பிராமணர்களுக்கு விருந்து செய்கின்றான். அதற்கு நீங்கள் யாவரும் வரவேண்டும். என் பேர் அனந்தையன். நீங்கள் விரைவாக வரவேண்டும்" என்று தெரிவித்தார்.

பகவானுடைய எண்ணத்தின்படி, காமதேனு கற்பக விருக்ஷம் முதலியவைகள் அறுசுவை அன்னத்தையும், நானாவிதங்களாகிய பலகார வகைகளையும், பரிமள பாயசங்களையும், சந்தன புஷ்ப தாம்பூலாதிகளையும் சித்தப்படுத்தி வைத்தன. அப்போது ருக்மணிதேவியும், சத்தியபாமையும் பிராமணர்களுக்கு ஆசனாதி உபசாரங்களைச் செய்துகொண்டிருந்தனர். பகவான் பிராமணரூபராகி, அங்குவந்த பிராமணர்களை எதிர்கொண்டழைத்து உபசரித்து, வரிசையாக உட்கார வைத்துப் பலவித அறுசுவை அன்னங்களைப் பரிமாறினர். பிராமணர்களெல்லாம் கோவிந்த தியானத்துடன் புசித்தார்கள். அவர்களுக்குச் சந்தன புஷ்ப தாம்பூலங்களைக் கொடுத்துப் பகவான் நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானதேவர், விசோபாகேசர் ஆகியவர்களுடன் போஜனத்தில் உட்கார்ந்தார். ருக்மணிதேவி அறுசுவை அன்னத்தை அவர்களுக்குப் பரிமாறினள்.

அப்போது நாமதேவர் மெய்ம்மறந்து பகவத் தியானஞ் செய்துகொண்டிருந்தனர். பகவான் அவரையும் தம்முடன் உட்கார வைத்துக்கொண்டு, அவருக்கு அன்னம் ஊட்டினர். அப்படிப் பகவான் கொடுப்பதை நாமதேவர் அறியாதிருந்தனர். பகவான் அவரைப் பார்த்து, "நாமதேவா! உனக்கும் எனக்கும் அணுவளவேனும் பேதமில்லை. எவன் சகல பூதங்களிடத்தில் என்னையும் என்னிடத்தில் சகல பூதங்களையும் பார்த்துக்கொண்டிருக்கின்றானோ அவனுக்கு நானும் எனக்கு அவனும் பிரத்தியக்ஷ சொரூபர்க



ளாகி இருப்போம்" என்று கீதையில் நான் சொல்லியிருக்கிறபடி உன்னுடைய அருகிலிருக்கின்றேன்" என்றார்.

நாமதேவர் பகவானைப் பார்த்து, "எனக்குத் தர்மார்த்த காமங்களிடத்தில் ஆசையில்லை. எந்த ஜன்மத்திலும் உமது திருவடித் தாமரைகளிடத்தில் சஞ்சலமில்லாத பக்தி எனக்கு உண்டாக வேண்டும்" என, அவர் "அப்படியே யாகும்" என்று சொல்லி, அவர் வாயிலிட்ட அன்னத்தில் கொஞ்சமெடுத்துத் தாம் புசித்தார். அதைக் கண்டு அவ்விடத்திலிருந்த பக்தர்கள் யாவரும் ஆச்சரியப்பட்டு ஆனந்த பரவசர்களாயினர்.

பிராமணர்கள் யாவரும், ஒருவரோடொருவர், "இன்று நமது ஆசாரங்களனைத்தும் செய்து, இதோ பரிமாறிக்கொண்டிருக்கும் ஸ்திரீகள் எக்குலத்தாரோ தெரியவில்லை. நமக்கு அன்னம் பரிமாறினவனைப் பார்த்தால் எக்குலத்திலும் சேராதவனென்பது தோன்றுகின்றது. நாமதேவனுக்குத் தந்தையாயிருக்கவேண்டுமென்பது தோன்றுகின்றது. மனம் வாக்குக் காயங்களென்னும் திரிகரணங்களாலும் அவன் நாமதேவனை விரும்பியிருக்கின்றான். இங்கு வந்து நாம் அன்னத்தைப் புசித்தபடியால், நமது அனுஷ்டானங்கள் யாவும் கெட்டுப் போயின. இனி நாம் அவசியம் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும்" என்று சொல்லிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

அப்போது, பகவான் குறுக்காக வந்து, அவர்களைப் போக விடாமல் நிறுத்தி, "விப்பிரர்களே! தக்ஷிணை பெற்றுக்கொண்டு போகலாம்" என்று சொல்லி மீண்டும் அவர்களை அழைத்துக் கொண்டு போய் உட்காரவைத்து, நவரத்தினங்கள், ஸ்வர்ணம், திருத்துழாய் ஆகியவைகளை ஒன்றாகக் கலந்து யாவருக்கும் சம்பாவனை அளித்தார். அந்தப் பிரா

மணர்கள் அவற்றைப் பெற்றுக்கொண்டும் சந்தோஷமடையாமல் இருந்தார்கள். அதைப் பகவான் கண்டு, "பிராமணர்களே! உங்கள் மனத்தில் ஏதோ சந்தேக மிருப்பதாகக் காணப்படுகிறது. அப்படி இருப்பதற்குக் காரணம் என்ன?" என்று அவர்களைக் கேட்டார்.

பிராமணர்கள் அவரைப் பார்த்து, "நாமதேவன் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவனென்பது யாவருக்குந் தெரியும்; நீ அவனைச் சமபந்தியில் வைத்துக்கொண்டு ஆகாரம் புசித்தது மல்லாமல் அவன் எச்சிலையும் பிரியத்துடன் புசித்தனை. உன்னைப் பார்த்தால் நீ வேஷதாரியாகக் காணப்படுகிறாய். உனது குலம் எதுவென்பதும் தெரியவில்லை. நீ வேளைக் கொருவிதமா யிருக்கிறாய். உனக்கு நிந்தையும் துதியும் சமமா யிருக்கின்றன. நாங்கள் சரிவர விசாரியாமல் இங்கு வந்து உணவு புசித்தோம். பிராமணர்கள் வேதத்தில் விதித்தபடி நடக்கவேண்டு மல்லவா?" என்றார்கள்.

அதற்குப் பகவான், "விப்பிரர்களே! நான் நாமதேவனுடைய சம பந்தியில் புசித்ததும், அவன் எச்சிலைப் புசித்ததும் தோஷமானவை யென்று நீங்கள் சொன்னீர்கள். அவ்வாறு சொல்வது தக்கதன்று; யாவருக்கும் பகவான் ஒருவனே; அப்பகவானுக்கு உயர்ந்த ஜாதி என்றும், தாழ்ந்த ஜாதி என்றும், நிந்தை என்றும், துதி என்றும், பேதமில்லை; அப்படிப்பட்டவன் பரமாத்தும சொரூபமாய் எங்கும் நிறைந் திருக்கிறான். ஆத்மாக்கள் அவனுடைய அம்சமே; ஆத்துமாக்களுக்குக் காம சம்பந்தத்தினால் உண்டாகும் சரீரங்கள் வேறாயிருந்தாலும் ஆத்தும சொரூபத்தில் கொஞ்சமும் பேதமில்லை. ஆத்துமா நித்தியன்; சர்வ வியாபி; அழிவில்லாதவன்; அநாதியானவன். அவ்வித புண்ணியாத்துமனாகிய நாமதேவனைத் தாழ்ந்த ஜாதி என்று



[illegible] எப்படிச் சொல்லலாம்? ஆத்துமாக்களுக்குச் சாதி பேதங்க ளுண்டோ? சரீரங்கள், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயங்களாகி யிருக்கின்றன. அப்படியிருக்க உயர்வு தாழ்வு எப்படி உண்டாகும்? நீங்கள் வேத சாஸ்திரங்களில் வல்லவர்களாகியும், ஆத்மஞான மில்லாமல் பாமரர்களாகி யிருக்கின்றீர்கள். அன்னிய சிந்தனையில்லாமல் பகவானைச் சதா காலமும் துதிப்பவன் மிலேச்சனா யிருந்தாலும் அவனே பிராமணன், அவனே முனிவன்; அவனே பண்டிதன்; அவனிடத்தில் எல்லாரும் உபதேசம் பெற்றுக் கொள்ளலாம். அவன் பகவானைப்போல மேன்மை பொருந்தினவன். இவற்றை எல்லாம் நீங்கள் ஏன் சிந்திக்கவில்லை? உங்களுக்கு உணவுண்ணச் சம்மதியில்லாத பக்ஷத்தில் முதலிலேயே நீங்கள் அதை ஆட்சேபித் திருக்கவேண்டும். நான் நாமதேவன் கையால் சங்கல்பம் செய்வித்தபோதும், நீங்கள் தந்த அக்ஷதைகளை அவன் சிரத்தில் நான் போட்ட போதும் ஏன் மௌனமா யிருந்தீர்கள். பிரம ஞானத்தில் உங்கள் அனைவரினும் நாமதேவனே சிறந்தவன். யாவருக்கும் அவனே மேன்மை உடையவன். ஆகையால் அப்புனிதனுடைய எச்சிலைப் புசித்தேன்.

இந்தப் பண்டரி க்ஷேத்திரத்தில் என் அடியார்கள் [illegible]ம் பகலும் என் விஷயமாய்க் கீர்த்தனைகள் செய்து கொண் டிருக்கிறார்கள். நான் அவர்களுடன் கூடி ஆனந்தித்தும், நாமதேவனை யொத்த பரம பக்தர்கள் எச்சிலைப் புசித்தும் இருப்பேன்" என்றனர்.

அதைக் கேட்ட பிராமணர்கள், "புருஷோத்தமா! நீர் அனந்த கல்யாண நிதியாகும் பகவா னென்பதை இப் [illegible]து தான் உணர்ந்தோம். எங்கள் சந்தேகம் நீங்கியது. [illegible]னும், 'சாஸ்திர விதியை அநுசரிக்காமல் தன்னிஷ்டப்

படி நடப்பவனுக்குச் சித்தியும், சுகமும், பரமகதியும் [illegible] ஆவையாம் ஓ அர்ச்சுனா! சாஸ்திரத்தைப் பிரமாணமென மதித்துக் காரிய காரியங்களைத் தெரிந்து கொண்டு, சாஸ்திர ப்ரமாணப்படி காரியங்களையே நீ அனுஷ்டிப்பாய் என்று கீதையில் சொல்லியிருக்கின்றீர்; ஆதலின், புத்திமான்களுக்கு வருணாசிரம விதிப்படி நடக்கை பொருப்பதன்றோ? தேவரீர் [illegible] போல [illegible] தந்திர ஆசாமிருக்கினும் பிரமாணமில்லா ஆசைபால் சாஸ்திரவிரோத லக்ஷ்யங்களுக்கு [illegible] காட்டுதல் [illegible]. [illegible] [illegible] அங்கீகரித்து, சாமிதவன் [illegible] புனித [illegible] பக்ஷபாதம் சம்பிரதாயத்தில் [illegible] [illegible] [illegible] பெற்றுக் கொள்ள வேண்டும், என்று பிரார்த்தித்தார்கள்.

[illegible] அவர்களுக்குத் திருப்தி யுண்டாகும் பொருட்டு சாமிதேவரைக் கைவிற் பிடித்துக்கொண்டு, அப் [illegible] சம்பிரதாயத் [illegible] சென்றார். அங்கே [illegible] [illegible] செய்து அப் [illegible] [illegible] புரிந்தனர்.

பிறகு, யாவரும் தம திருப்பிடங்களுக்குச் சென்றனர். சாமிதேவரும், [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இருந்தனர்.

[illegible]



[illegible] 600 [illegible] 009
[illegible]